உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 14 சனிக்கிழமை (30.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 246



02 எம்.பிக்கள் எண்ணிக்கை குறைக்கப்படக்கூடாது



12 தமிழ் மக்கள் அரசுக்கு புகட்டியுள்ள பாடம்

தினமணி

15 அறிவிக்கப்படாத தமிழீழம்




21 ஈழ அகதிகளை பாதுகாப்பாக அழைத்து வர வேண்டும்



25 மனம் கவர்ந்த வீரர் விருது

# உதயன் செய்தி ஆசிரியர் மீது நேற்று காடையர்கள் தாக்கு

## பின்னந்தலையில் படுகாயமடைந்த அவர் அவசர சிகிச்சைப் பிரிவில்



யாழ்ப்பாணம், ஜூலை 29

**உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் (வயது59) ஆயுததாரிகள் இருவரால் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டதில் பின்னந் தலையில் படுகாயமடைந்தார். யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று நள்ளிரவுவரை அவசர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் அவசர சிகிச்சை விடுதிக்கு மாற்றப்பட்ட அவர் தொடர்ந்தும் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்.**

நேற்றுப் பகல் வேலை முடிந்து அவர் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இரவு 7.30 மணிக்கு இந்தக் காடைத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டது. நாவலர் வீதியில் கஸ்தூரியார் வீதி சந்திக்கும் மனோகரா தியேட்டர் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் அவரைப் பின்தொடர்ந்து சென்ற காடையர்கள் இருவர் அவர் மீது இந்த காட்டுமிராண்டித்தனமாக, கோழைத்தனமான தாக்குதலை நடத்தி உள்ளனர்.

தாக்குதலை நடத்தியவர்கள் பின்னர் தயாராக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிச் சென்றனர் என்று நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு உள்ளாகி இரத்தம் கொட்டிய நிலையிலும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு சமீபமாக இருந்த தனது வீட்டுக்குள் சென்ற குகநாதன் பத்திரிகை அலுவலகத்துக்கு தகவல் கொடுத்ததை அடுத்து அங்கிருந்து சென்றவர்கள் அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர், தொடர்ந்தும் தீவிர கண்காணிப்பிலேயே வைக்கப்பட்டுள்ளார்.

''அம்மா! அம்மா!! என்று கத்திக் கொண்டு வீட்டுக்குள் ஓடிவந்தார். தலையில் இருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. வீதியில் வைத்து யாரோ அடித்தார்கள் என்று சொன்னார். என்ன நடந்தது என்றே புரியவில்லை'' என்று பதறியபடியே தெரிவித்தார் குகநாதனின் மனைவி.

இரண்டு நபர்கள் இரும்புக் கம்பியினால் ஒருவரைத் தாக்கிவிட்டு ஓடிச் சென்று மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றனர் என்று சம்பவத்தை நேரில் கண்ட வீதியில் சைக்கிளில் வந்த ஒருவர் விவரித்தார்.

பக் 27

## தோல்வியைச் சகிக்காதவர்களின் காடைத்தனமே இந்தத் தாக்குதல்

### சரவணபவன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 30

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றதேர்தலில் படுதோல்வியடைந்தவர்கள் அந்த தோல்வியை சகிக்க முடியாமலே உதயன் பத்திரிகையின் செய்தியாசிரியர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என உதயன், சுடரொளி நிறுவன உரிமையாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் ஏற்பட்ட படுமோசமான தோல்வியை சகிக்க முடியாதவர்களின் மிலேச்சத்தனமான தாக்குதலாகவே இச் சம்பவத்தை நான் பார்க்கிறேன்.

பக் 27

## தெருவிளக்குப் பூட்டவா ஜனாதிபதி வடக்கே வந்தார்?

### பஸிலின் கருத்துக்கு அரியநேந்திரன் எம்.பி. பதில்

மட்டக்களப்பு, ஜூலை 30

தெருவுக்கு விளக்கு போடுவதற்காகவும் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்காகவும் தானா உள்ளூராட்சித் தேர்தலில் ஜனாதிபதியும் அமைச்சர்களும் வடக்கில் முகாமிட்டு பிரசாரம் செய்தார்கள்?என்று கேள்வி எழுப்பி உள்ளார் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தெரு விளக்குகளைப் பொருத்தும் ஆணையையே தமிழ் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கியுள்ளனர் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியிருந்தார். இந்த வெற்றியை தமிழ் மக்களின் அரசியல் கருத்தாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

பக் 27

## அரசியல் கட்சிகள் கடும் கண்டனம்

கொழும்பு, ஜூலை 30

உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் தாக்கப்பட்டதற்கு அரசியல் கட்சிகள் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

''இந்த தாக்குதல் மிலேச்சத்தனமானது. இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாகக் கண்டிக்கிறது. தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுத்து வரும் உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் தாக்கப்பட்டுள்ளமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகிறது. உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த கையோடு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது குறித்தும் அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டி இருக்கிறது'' - என்று கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தொலைபேசியில் தெரிவித்தார்.

தோல்வியைப் பொறுக்க முடியாதவர்கள் கருத்துச் சுதந்திரத்தை அச்சுறுத்த முயற்சிக்கும் செயலின் வெளிப்பாடே இது என்று ஜனநாயக மக்கள் முன்னணி கண்டித்துள்ளது.

''வடக்கில் கருத்துச் சுதந்திரம் நிலவக் கூடாது. அப்படி நிலவினால் தங்களின் நோக்கங்களை அடைய முடியாது என்று கருதுபவர்களே இத்தகைய கொடூரத்தை நிகழ்த்தி உள்ளனர்'' என்று அக்கட்சியின் செயலாளர் குமரகுருபரன் தெரிவித்தார். (உ)

## தமிழ் எம்.பிக்களின் எண்ணிக்கையை குறைத்து சிங்களப் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது அநீதி

### ஐ.தே.க. அறிக்கை

கொழும்பு, ஜூலை 30

யாழ். மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அதைக்கொண்டு சிங்களப் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது ஜனநாயகத்துக்கு எதிரானதும், அநீதியானதுமாகும் என ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த நடவடிக்கை மூலம், பகிரங்கமாகவே தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் சிங்கள மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அரச நிர்வாகத்தில் இந்த நாட்டு தமிழ் மக்களை மேலும் ஒதுக்கும் சிங்களவர்களின் முடிவாகவே அவர்கள் அதை அர்த்தப்படுத்துவார்கள்.

சுதந்திரத்தின் பின்னர் காலம் முழுவதும் இந்தக் குற்றச்சாட்டு தமிழ் அரசியல்வாதிகளால் மட்டுமல்லாமல் ஜனநாயக உரிமைகளுக்காகப் பேசுபவர்களாலும் அரசின் மீது சுமத்தப்பட்டு வந்துள்ளது.

இந்த விடயத்துக்காக நிலையான அரசியல் தீர்வு இல்லாமல், யாழ். தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இவ்வாறு குறைப்பது அநீதியான

பக் 27

### யாழ். எம்.பிக்கள் 6 ஆக குறைந்தது ஏன்?

மக்கள் புலம்பெயர்ந்து சென்றமை, யுத்தத்தினால் இடம்பெயர்ந்து ஏனைய மாவட்டங்களுக்குச் சென்றமை இதனால் ஏற்பட்ட வாக்காளர் வீழ்ச்சியே யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆறாகக் குறைவடையக் காரணம்.

இவ்வாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்

பக் 27

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானம் காணப்படும் சாத்தியம்.

# அரசியல் தீர்வு எட்டப்படும்வரை யாழ். மாவட்டத்தில் எம்.பிக்கள் எண்ணிக்கை குறைக்கப்படக்கூடாது

## மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 30

யாழ். மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை ஒன்பதிலிருந்து ஆறாக குறைக்கப்படவிருக்கிறது எனத் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். இதற்கான அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு இருந்தாலும்கூட, இதன் பின்னணி அரசியல் அடிப்படைக் கொண்டதாகும்.

எனவே, அரசியல் ரீதியான தீர்வு காணப்படும் வரை இந்த நடவடிக்கை இடைநிறுத்தப்படவேண்டும்.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

யாழ். மாவட்டத்தில் 2009 வரை 8 இலட்சத்து 16 ஆயிரத்து 5 வாக்காளர்கள் பதிவாகி இருந்தனர். இதில் 3 இலட்சத்து 31 ஆயிரத்து 214 பெயர்கள் அகற்றப்பட்டு, தற்போதைய 2010ஆம் வருட பதிவில் 4 இலட்சத்து 84 ஆயிரத்து 791 எஞ்சியுள்ளன. இந்த அடிப்படையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ். மாவட்ட பதிவிலிருந்து குறைக்கப்பட்ட சுமார் 3 இலட்சத்து 30 ஆயிரம் பேரில் ஒரு தொகுதியினர் வெளிநாடு சென்றுவிட்டனர். பிறிதொரு தொகுதியினர் மேல் மாகாணத்துக்கு குடிபெயர்ந்துவிட்டனர் எனக் கூறப்படுகிறது.

நாட்டைவிட்டுத் தமிழர்கள் வெளியேறி உள்ளமைக்குப் போரும், தேசிய இனப்பிரச்சினையும் முக்கிய காரணங்களாக அமைந்திருக்கின்றன. இன்று வெளிநாடுகளில் குடியேறியுள்ள அனைவருமே அந்தந்த நாடுகளின் குடியுரிமை பெற்றுவிட்டார்கள் என்று கூற முடியாது.

அத்துடன் சுமார் ஒரு இலட்சம் இலங்கையர் தமிழ்நாட்டிலே அகதிகளாக இருக்கின்றார்கள். அத்துடன், வழமையிலிருந்த இரட்டை குடியுரிமை முறைமையையும் தற்சமயம் அரசியல் நோக்கத்துடன் கடுமையாக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் தேசிய இனப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவையாகும்.

எனவே தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் வரை இந்த நடவடிக்கை ஒத்திவைக்கப்படவேண்டும். இவ்விவகாரம் அரசுக்கும், கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெறும் பேச்சுகளில் விவாதிக்கப்படவேண்டும்.

மேல்மாகாணத்துக்கு குடிபெயர்ந்த அனைவரும் கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் புதிய பதிவுகளை பெற்றுக்கொண்டுள்ளார்கள் என்று கருதப்படுவதும் தவறாகும். ஒரு சிறுதொகையினரே இவ்விதம் புதிய பதிவுகளை பெற்றுள்ளனர்.

கடந்த 10 வருடங்களாக கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் உள்ள தமிழ் வாக்காளர்கள் எண்ணிக்கையில் இயற்கையான அதிகரிப்பு மாத்திரமே காணப்படுகின்றது.

உண்மையில் தேசிய ரீதியாக சனத்தொகையில் 69 விகிதமானவர்கள் வாக்காளர்கள். அந்த அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் வாழ்கின்ற 3 இலட்சம் தமிழர்களில், 2 இலட்சம் தமிழ் வாக்காளர்கள் இருக்க வேண்டும்.

கம்பஹா மாவட்டத்தில் வாழ்கின்ற ஒரு இலட்சம் தமிழர்களில், சுமார் 70 ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் இருக்கவேண்டும். இந்தளவுக்கு தமிழ் வாக்காளர்கள் இங்கே இல்லையென்று தேர்தல் ஆணையாளருக்குத் தெரியும்.

இதுபற்றிய தகவல்களை அவருக்கு நான் வழங்கியுள்ளேன். இது வாக்காளர்களை வருடா, வருடம் பதிவு செய்யும் முறைமையில் உள்ள குளறுபடியாகும். ஆகவே இத்தகைய குளறுபடிகளுக்கெல்லாம் தீர்வு காணப்படும் வரை இந்நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்படவேண்டும்.

இது சம்பந்தமாக தமிழ் அரசியல் கட்சிகளினதும், தேர்தல் கண்காணிப்பாளர்களின் நிறுவனங்களினதும் விசேட மாநாட்டை தேர்தல் ஆணையாளர் நடத்தவேண்டும்.

- இவ்வாறு மனோ கணேசன் தெரிவித்தார்.

(ஒ-சி)

# சாவகச்சேரி - வரணி ஊடாக பருத்தித்துறை பஸ் சேவை ஆரம்பம்

தென்மராட்சி, ஜூலை 30

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் - சுமார் 25 வருடங்களின் பின்னர் - சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து வேம்பிராய் மந்துவில் ஊடாக பருத்தித்துறைக்கு செல்லும் 754 மார்க்க பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் இந்த பஸ் நுணாவில் சந்தி, கனகம் புளியடி, வேம்பிராய், மந்துவில், வரணி ஊடாக பருத்தித்துறை சென்றடையும்.

(ஒ- 207)

# கைதிகளில் 48 பேர் பட்டதாரிகள்

கொழும்பு, ஜூலை 30

சிறைக் கைதிகளுள் 48 பேர் பட்டதாரிகள் என சிறைச்சாலைகள் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இவர்களில் தமிழ்க் கைதிகளும் அடங்குவர்.

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் சுமார் 800இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் எட்டு பேர் பட்டதாரிகள் என்றும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுள் அநேகமானோர் உயர்தரம் வரை கல்வி பெற்றுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

சிறைச்சாலைகள், திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் மேலும் பல விடயங் கள் குறித்து விரிவாக ஆராயப் பட்டுள்ளன.

(ஒ-சி)

# ரணிலை தலைவராகக் கொண்டு ஒன்றிணைந்து செயற்படுவோம்

## ஹரின் பெர்னாண்டோ எம்.பி. அழைப்பு விடுக்கிறார்

கொழும்பு, ஜூலை 30

மிகத் திறமையும் அனுபவமும் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவையே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக வைத்துக்கொண்டு அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு செயற்படுவதே சிறந்தது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ நேற்றுக் கூறினார்.

அரசில் தான் வைத்திருந்த சிறப்புரிமைகளை எல்லாம் தூக்கி வீசிவிட்டு வந்த கரு ஜயசூரிய கட்சியின் தலைமைத்துவப் பதவிக்காக அலைபவர் அல்லர் என்றும் ஹரின் பெர்னாண்டோ கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பதவியை கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார். கட்சி விரும்பினால் நான் ஏற்றுக்கொள்வேன் என்று கரு ஜயசூரிய பதிலளித்துள்ளார்.

கரு ஜயசூரிய பதவிகளுக்காக அலைபவர் அல்லர். அவர் அரசில் இருந்தபோது சிறப்புரிமைகளை அனுபவித்தவர். அந்த சிறப்புரிமைகளை எல்லாம் தூக்கி வீசிவிட்டு அவர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் திரும்பினார். அவர் பதவிகளுக்காக அலையமாட்டார்.

ரணில் விக்கிரமசிங்க மிகவும் திறமையும் அனுபவமும் மிக்கவர். அவரைத் தலைவராக வைத்துக்கொண்டு எல்லோரையும் ஒன்றிணைத்துக்கொண்டு செயற்படுவதே மிகவும் பொருத்தமானதாக அமையும்.

எதிர்வரும் தேர்தலில் நாம் நிச்சயம் வெற்றிபெறுவோம். அரசு துண்டுதுண்டாகத் தேர்தலை நடத்துவதால்தான் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அரசு முடிந்தால் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்தட்டும் - என்றார்.

(ஒ-சி)

# 72ஆவது ஆண்டுக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

இலங்கை வங்கியின் 72ஆவது வருடக் கொண்டாட்டங்கள் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கிளைகளில் இடம்பெறும்.

பிரதான நிகழ்வு யாழ். சுப்பகிறேட் அலுவலகத்தில் அன்று காலை இடம்பெறும்.

இந்த கொண்டாட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(ஐ)

# நிகழ்வுகள்

### கலை நிலா அரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 30

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் நடத்தப்படும் 'கலை நிலா அரங்கு' இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரான்ஸ் திருமறைக்கலாமன்றத்தின் இணைப்பாளர் டேமியக் சூரி கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்களின் நடனம், பாட்டு, ஒகன் இசை ஆகியன இடம்பெறும்.

(ற)

### 37ஆவது ஆண்டு விழா

வடமராட்சி, ஜூலை 30

புலோலி கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தீபஜோதி விளையாட்டுக் கழக மைதானத் தலைவர் க.மகேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த. கலாமணியும் கௌரவ விருந்தினராக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் வி.தபேந்திரகுமாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ற-236)

### 56ஆவது ஆண்டு விழா

வடமராட்சி, ஜூலை 30

புலோலி அறிவகம் சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலையத்தலைவர் சி.ரஜனிக்காந் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் ஜெகத் அபய சிங்க, பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் சோ.ஜெ.வசீகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ற-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சனல்-4'க்கு எதிராக பிரிட்டன் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## கோத்தபாய கோரிக்கை

கொழும்பு, ஜூலை 30

'சனல் - 4' தொலைக்காட்சி பொறுப்பற்ற முறையில் வீடியோக்களை ஒளிபரப்புவது தொடர்பில் பிரிட்டிஷ் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

'சனல் - 4' தொலைக்காட்சி 'சிறிலங்காவின் கொலைக் களம்' என்று புதிய வீடியோ ஒன்றை ஒளிபரப்பியது. இறுதி யுத்தத்தில் சரணடைந்த புலித் தலைவர்களைச் சுட்டுக் கொல்லுமாறு அப்போது வன்னி கட்டளைத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வாவுக்கு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டார் என இறுதி நாள்களில் கடமையாற்றிய இரண்டு இராணுவச் சிப்பாய்களின் செவ்வியை 'சனல்-4' ஒளிபரப்பியது.

இந்த வீடியோ முற்றிலும் போலியானது எனத் தெரிவித்த கோத்தபாய ராஜபக்ஷ, இறுதி யுத்தத்தில் என்ன நடந்தது என சவேந்திர சில்வா கூறுவார். இலங்கையில் அப்போது ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியாக இருந்த நீல் பூனே யாரும் சரணடைவது குறித்து தமக்கு அறிவிக்கவில்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இறுதி யுத்தத்தில் 40ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என ஐ.நா. சபை எவ்வாறு கூறமுடியும்? எனவும் கோத்தபாய கேள்வி எழுப்பினார். (ஒ-சி)

# லண்டனில் ரணில் - லியம்பொக்ஸ் சந்திப்பு

லண்டன் சென்றுள்ள எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்றுமுன்தினம் பிரித்தானிய பாதுகாப்பு செயலாளர் லியாம் பொக்ஸை சந்தித்துள்ளார்.

இதன் போது இலங்கையின் தற்போதைய அரசியல் விடயங்கள் தொடர்பாக பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்கில் போரினால் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது.இதேவேளை 13ம் திருத்தச் சட்டம் மற்றும் அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்பில் அரசு மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு இடையில் இடம்பெறுகின்ற பேச்சு வார்த்தைகள் தொடர்பில் ரணில் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தூண்டி தமிழ் மக்களை அழிவுக்கு ஆளாக்கிய பங்கினை கொண்டவர்களில் ரணில்விக்கிரமசிங்கவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

# இலங்கையில் காணாமற் போனோர் விசாரணைக்கு ஐ.நா. அழுத்தம்

இலங்கையில் காணாமற்போனோரின் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்று ஐ.நா மனிதஉரிமைகள் ஆணைக்குழு இலங்கை அரசிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளது.

கடத்தப்பட்டுகாணாமற்போயிருந்தமனித உரிமை அமைப்பு ஒன்றின் பணிப்பாளர் வாழைச் சேனையில் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டதை அடுத்தே ஐ.நா இவ்வாறு வலியுறுத்தி யுள்ளது.

இதுதொடர்பாக ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ரவீனா சம்டசானி மேலும் தகவல் வெளியிடுகையில், இலங்கையில் 5600 இற்கும் அதிகமான காணாமற்போனவர்கள் பற்றிய முறைப்பாடுகள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் காணாமற்போயுள்ள 5653 பேர் பற்றிய விசாரணகளை இலங்கை அதிகாரிகள் உடனடியாக மேற்கொண்டு அவற்றுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்திக் கூறியுள்ளார். (ஒ-எ)

## மாணவர்களுக்கு இலவச பஸ் சேவை;

# அமைச்சர் பொய்ப்பிரசாரம் வழக்குத் தொடர முஸ்தீபு

கொழும்பு, ஜூலை 30

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சைக் காலங்களில் இலவசமாக தனியார் பஸ்களில் பயணம் செய்யலாம் என்று பொய்ப் பிரசாரம் செய்த கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளோம்.

-இவ்வாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன நேற்றுத் தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியிலுள்ள தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் இலவசமாகத் தனியார் பஸ்களில் பயணம் செய்யலாம் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்துள்ளார் என்று பத்திரிகைகளில் வாசித்துத் தெரிந்துகொண்டேன்.

வாழ்க்கையின் மிக முக்கியமான பகுதிக்குக் காலடி எடுத்து வைக்கும் உயர்தர மாணவர்களை நெருக்கடிக்கு ஆளாக்கும் செயலே இது. உண்மையிலேயே பாடசாலைக்குச் சென்று, பரீட்சை எழுதியவர்கள் இவ்வாறான அறிவிப்பை விடுக்க மாட்டார்கள்.

கல்வியமைச்சர் இது தொடர்பாக எம்மிடம் பேச்சு நடத்தவில்லை. இத்திட்டம் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். பரீட்சைக்குச் செல்லும் உயர்தர மாணவர்கள் பரீட்சை அனுமதிப்பத்திரத்தை (Admission) பஸ் நடத்துநரிடம் காட்டிப் பயணிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அச்சந்தர்ப்பத்தில் அந்தப் பத்திரத்தை நடத்துநர் வாங்கி இரண்டாகக் கிழித்தால் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும். அத்துடன், பஸ்ஸில் சன நெருக்கடிக்கு மத்தியில் பத்திரத்தை மாணவர் எடுக்கும்போது அது கீழே விழுந்துவிடலாம். அதேபோன்று, பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் மாணவர்களை நடத்துநர்கள் பஸ்ஸில் ஏற்ற மறுக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன. அதனை அடுத்து வேலைநிறுத்தம், கைதுகள் போன்ற பல பிரச்சினைகள் தோன்றும்.

எனவே, இவ்வாறு வீணானதும், மாணவர்களைப் பாதிக்கக் கூடியதுமான பிரசாரத்தைச் செய்த கல்வி அமைச்சருக்கு எதிராகவும் அந்தப் பிரசாரத்தைச் செய்யத் தூண்டுதல்களை மேற்கொண்ட பிரிவினருக்கு எதிராகவும் வழக்குத் தொடரத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ஒ-சி)

# ஏழு வருடங்களுக்கு முன் காணாமற் போன இராணுவ அதிகாரி நேற்று சடலமாக மீட்பு!

கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்ததாகக் கூறப்படும் இராணுவத்தின் லெப்டினன் பதவிநிலை வகித்த அதிகாரி ஒருவரின் சடலம், இரகசிய பொலிஸாரால் கல்கமுவ பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

நிலந்த அல்விஸ் என்ற இராணுவ அதிகாரியின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார்தெரிவித்தனர்.

இருப்பினும் சடலத்துக்குரிய நபரை உறுதி செய்வதற்காக அவரது நெருங்கிய உறவினரது இரத்தம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2004ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி அஹங்கம பிரதேசத்திலிருந்து சைக்கிளொன்றைகொள்வனவு செய்வதற்காக குருநாகல் பிரதேசத்துக்கு சென்ற இவர் காணாமல் போயிருந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (எ)

## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த

# ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு இலவச பஸ் பயண 'டோக்கன்'

கொழும்பு, ஜூலை 30

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் மாணவர்கள் இலவசமாகத் தனியார் பஸ்களில் பயணிக்கக்கூடியதான திட்டம் ஒன்றைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் முன்னெடுத்துள்ளது.

இதற்காக மாணவர்கள் செய்ய வேண்டியவை வருமாறு:-

கிராம சேவகர் மற்றும் பாடசாலை அதிபரைச் சந்தித்து உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றைப் பெற்று அதனை பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ள தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் காரியாலயத்தில் ஒப்படைக்க வேண்டும்.

அவ்வாறு ஒப்படைக்கும் போது குறித்த மாணவருக்கு (டோக்கன்) அட்டை ஒன்று வழங்கப்படும். அல்லது பயணத்துக்கான பணம் வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் சார்பாக இந்த அட்டையைப் பெறுவதற்குப் பெற்றோருக்கு முடியும் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கூறினார்.(ஒ-சி)

# போர் குற்ற விசாரணை செய்வது இலங்கை அரசின் கடமை

## கண்காணிப்பது ஐ.நா.வின் பொறுப்பு

இலங்கையின் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்குற்றங்கள் குறித்து விசாரணை செய்வது இலங்கை அரசாங்கத்தின் கடமை எனவும் அதனை கண்காணிப்பது ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்பு எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரித்தானியாவிலுள்ள சனல் - 4 தொலைக்காட்சி கடந்த புதன்கிழமை இரவு வெளியிட்ட இலங்கையின் போர் குற்ற ஆதார காணொளி குறித்து நேற்றுமுன்தினம் ஐ.நா. அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கேள்வி எழுப்பப்பட்டது.

சனல் 4 காணொளி குறித்து ஐநா நடவடிக்கை எடுக்குமா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ஐநா செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்க்கி, சனல் 4 கூறிய விடயங்கள் நிபுணர் குழு அறிக்கையிலும் உள்ளடக் கப்பட்டுள்ளதென தெரிவித்தார்.

நடவடிக்கை எடுப்பது குறித்த விடயங்களை ஐக்கிய நாடுகளின் நிர்வாக பிரிவுகளிடம் ஒப்படைப்பது குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக மார்டின் நெசர்க்கி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் கொலைக் களங்கள் காணொளியை, ஐ.நா பொதுச்செயலாளரின் சிரேஷ்ட ஆலோசகர்கள் பார்த்துள்ள நிலையில், பொதுச் செயலாளர் பார்த்தாரா இல்லையா என்பது தொடர்பில் தன்னால் கூறமுடியாது என மார்ட்டின் கூறியுள்ளார். (ஒ-எ)

# பிள்ளையான் அணியைச் சேர்ந்த ஆறு பேர் கைது

பிள்ளையான் அணியைச் சேர்ந்த 6 பேர் இந்தியாவிற்கு தப்பிச் செல்லும் நோக்கில் மன்னாரில் தங்கியிருந்த நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து முப்படையினரின் உதவியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

மட்டக்களப்பு மாவட்டம் புதூர் வங்கி ஒன்றில் இருந்து கடந்த மாதம் பல கோடி ரூபாய் பணம் மற்றும் நகைகள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டது.

இந்தச் சம்பவத்துக்கு பின்னணியில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் என அழைக்கப்படும் பிள்ளையானின் குழு ஒன்று செயல்பட்டு வந்ததாக தகவல்கள் வெளியாகி இருந்தது. இதனையடுத்து விசேட அதிரடிப்படையினர், கடற்படை, இராணுவம் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து குறித்த விடுதியினை சுற்றிவளைத்து [illegible] கொள்ளையர்களையும் கைது செய்துள்ளனர். (எ)

## நுணாவில் மேற்குப் பகுதியில்

# 10 தினங்களுக்கு முன் கடத்தப்பட்ட 15 வயதுச் சிறுமி மீட்கப்பட்டார்

தென்மராட்சி, ஜூலை 30

சாவகச்சேரி நுணாவில் மேற்குப் பகுதியில் பத்து தினங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் 15 வயதுச் சிறுமியை பொலிஸார் மீட்டதுடன் அவரைக் கடத்திச் சென்ற நபரையும் கைது செய்துள்ளனர்.

இந்தச் சிறுமி காணாமற் போனது தொடர்பாக அவரது பெற்றோரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் மேற்கொண்ட முயற்சியின் பயனாக பத்து தினங்களின் பின்னர் அவர் மீட்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நுணாவில் மேற்கைச் சேர்ந்த நபரையும் மீட்கப்பட்ட சிறுமியையும் பொலிஸார் நேற்றுமுன் தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் மா. கணேசராஜா இந்த நபரை ஒகஸ்ட் 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் சிறுமியை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்து மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணித்தார்.

(ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் கேள்வித்தாளில் மாற்றமிருக்காது

## பரீட்சை ஆணையாளர் நாயகம் உறுதி

கொழும்பு, ஜூலை 30

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான கேள்வித்தாளின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தில் எதுவித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் அனுரா எதிரிசிங்க தெரிவித்துள்ளார். ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் இப்பரீட்சையின் கால அளவிலும் மாற்றமிருக்காது என்று அவர் தெரிவித்தார்.

வழமைபோலவே இரண்டு கேள்வித்தாள்கள் இருக்கும். முதல் தாள் பரீட்சார்த்தியின் உள்ளார்ந்த திறமையைச் சோதிப்பதாய் இருக்கும். இரண்டாம் கேள்வித்தாளானது மாணவர் 3, 4, 5 ஆகிய தரங்களில் கற்ற விடயங்களைச் சோதிப்பதாய் அமையும் என்று எதிரிசிங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இரண்டாவது கேள்வித்தாளில் இடம்பெறும் கேள்விகள் யாவும் பாடப் புத்தகங்களின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டவையாக இருக்கும். 3, 4, 5 தரங்களில் படித்துள்ள பிள்ளைகள் ஏற்கனவே இந்தப் புத்தகங்களில் உள்ள விடயங்களை படித்திருப்பார்கள். இந்தப் புத்தகங்களைக் கற்றுள்ள மாணவர்களுக்கு கேள்விகளை எதிர்கொள்வதில் எதுவித கஷ்டமும் இருக்கமாட்டாது என்று கூறினார்.

இந்தப் புத்தகங்களுக்கு அப்பால் எதுவித கேள்விகளும் இருக்கமாட்டாது என்று வலியுறுத்திய ஆணையாளர் ஓகஸ்ட் 30 ஆம் திகதி 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் கேள்வித்தாள்கள் பகுப்பாய்வு ஆரம்பிக்கப்பட்டு, செப்ரெம்பர் 6 ஆம் திகதி வரை அது நீடிக்கும் என்று குறிப்பிட்டார். கல்வி அமைச்சரின் ஆலோசனைக்கு ஏற்ப பெறுபேறுகளை விரைவாக வெளிப்படுத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது என்று மேலும் தெரிவித்தார். (ப)

# இலங்கை வங்கியின் 5 கிளைகள் மீள்குடியமர்வுப் பகுதிகளில்

## திங்கட்கிழமை திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

வாடிக்கையாளர் சேவையில் 72 வருடகால சேவையை வழங்கும் இலங்கை வங்கி வடமாகாணத்தில் எதிர்வரும் முதலாம் திகதி 5 விரிவாக்கல் கிளைகளை ஆரம்பித்து வைக்கவுள்ளது.

மீள்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களில் உள்ள பொதுமக்களின் வங்கிச் சேவையை இலகுபடுத்தும் நோக்கில் கணினி வலைப்பின்னல் இணைப்புடனும் சகல வசதிகளுடனும் இயங்கக் கூடிய இந்த 5 கிளைகளும் திறந்து வைக்கப்படவுள்ளன.

பரந்தன் , உரும்பிராய், கொடிகாமம் ஆகிய பிரதேசங்களில் கணினி வலைப்பின்னலுடன் கூடிய புதிய கட்டடங்களிலும், முழங்காவில், ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசங்களில் விரிவாக்கல் கிளைகளும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

வடமாகாணத்தில் இலங்கை வங்கி பொதுமக்களுடன் இணைந்து சேமிப்பு வைப்புக்களை மட்டுமல்லாது விவசாயக் கடன், மீன்பிடித்துறைக் கடன், வீடமைப்புக்கடன் என்பவற்றையும் குறைந்த வட்டியுடன் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதுவரை வடமாகாணத்தில் 17 கிளைகளும், 25 விரிவாக்கல் கிளைகளும், 19 தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரங்கள் போன்ற சேவைகளை வாடிக்கையாளருக்கு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த 5 விரிவாக்கல் கிளைகளில் கொடிகாமம் கிளையைத் திறந்து வைக்கும் நிகழ்வில் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் கே.இ.டி.சுமணசிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ம-313)

# வாக்காளர் விரலில் மைபூசுவது அவர்களை அவமதிக்கும் செயல்

## தேர்தல்கள் ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 30

வாக்காளர்களின் விரலில் மைபூசுவது அவர்களை அவமானத்துக்கு உள்ளாக்கும் செயல்.

காலம் கடந்துபோன இந்தச் சட்டத்தை தேர்தல் சட்டப் புத்தகத்தில் இருந்து நீக்கிவிட வேண்டியுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

1970 ஆம் ஆண்டில் இருந்தே இந்தச் சட்டவிதி நீக்கிவிடப்பட வேண்டியுள்ளது.

இதனைப் பதவிகளிலிருந்த தேர்தல்கள் ஆணையாளர்கள் சுட்டிக்காட்டியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

செல்லுபடியாகும் அடையாள அட்டை ஒன்று முன்வைக்கப்படுவதால் மாத்திரமே வாக்களிக்க அனுமதி கிடைக்கிறது.

விரலில் மைபூசும் முறைமை தற்காலத்துக்குப் பொருந்தாததொரு சட்டவிதியே எனவும் தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்திருந்தார். (ம-22)

# சர்வதேச கப்பல் மார்க்கத்தில் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை

## கடற்படை ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜூலை 30

இலங்கையின் மேற்கு மற்றும் தெற்கு கடற்பிராந்தியத்தில் அமைந்துள்ள சர்வதேச கப்பல் பயண மார்க்கத்தின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு இலங்கை கடற்படை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கைக் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கோசலவர்ணகுலசூரிய இத்தகவலைத் தெரிவித்தார்.

பெருமளவிலான சர்வதேச வர்த்தகக் கப்பல்கள் மேற்படி கப்பல் பயண மார்க்கத்தினூடாகப் பயணங்களை மேற்கொள்கின்றன.

அதன் காரணமாக அதிகபட்ச பாதுகாப்பை வழங்கும் நோக்கில் கடற்படையின் ஆழ்கடல் கண்காணிப்புக் கலங்கள் மேற்கு மற்றும் தென்பகுதிக் கடற்பிராந்தியத்தில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளன.

அரேபியக் கடற்பிரதேசத்தில் தற்போது தலைதூக்கியுள்ள சோமாலியக் கிளர்ச்சியாளர்களின் அச்சுறுத்தல்கள் இலங்கையின் கடற்பிராந்தியத்தில் இல்லை.

இலங்கையை அண்டியுள்ள சர்வதேச கப்பல் பயண மார்க்கத்துக்கு அதிகபட்ச பாதுகாப்பை வழங்கும் நோக்கை முன்னிட்டே இப்புதிய அணுகுமுறைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

## அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு வலயக் கேட்போர் கூடத்தில் நடைபெறுமென கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ம-207)

## காப்புறுதியின்றி வாகனம் செலுத்திய நபருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூலை 30

சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதி ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய மிருசுவில் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா இந்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் இரண்டு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ம-207)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 1950 – 08 – 19

விண்ணில் 2011 – 06 – 30



## அமரர் வீரசிங்கம் குமரேசபிள்ளை
## (முத்துமாரி ஒலி, ஒளி அமைப்பாளர்)

விழிகள் கரைகிறது
வேதனை நெஞ்சை முட்டுகின்றதே...
ஓடி ஓடித் திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியதேனோ
உங்கள் பிரிவின் துயரச் செய்தி கேட்டு

காற்றுக்கூட வீச மறுக்கின்றதே
வார்த்தைகள் கூட மௌனமாகின்றதே
உங்கள் பாசத்தால் கவர்ந்த உள்ளங்கள்
கண்ணீரில் மிதப்பதைத் தவிர்க்க
ஒரு கணம் மீண்டும்
கண்திறக்க மாட்டீர்களா அப்பா!

எமது குடும்பத் தெய்வத்தின் இழப்புச் செய்திகேட்டு ஓடோடி வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் இழவுத்துயரிலும் சமயக்கிரியைகளிலும் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசியூடாக துயர் பகிர்ந்தோர்க்கும் துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு வெளியிட்டோருக்கும் மற்றும் அனைத்து வழியிலும் உதவியளித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

தம்பாட்டி,
ஊர்காவற்றுறை.

(6336)

குடும்பத்தினர்.

## அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் – 2011

| | |
|---|---|
| கொடியேற்றம் | 30.07.2011 சனி காலை 8 மணி |
| பக்தோற்சவம் | 04.08.2011 வியாழன் காலை 8 மணி |
| தீபபூஜை | 05.08.2011 வெள்ளி பி.ப. 4 மணி |
| சுமங்கலிப்பூசை | 09.08.2011 செவ்வாய் காலை 7 மணி |
| வசந்தோற்சவம் | 10.08.2011 புதன் |
| வேட்டை, சப்பரம் | 11.08.2011 மு.ப. வியாழன் |
| தேர் | 12.08.2011 காலை 8.30 மணி |
| வரலக்ஷ்மிபூசை | 12.08.2011 பி.ப. 2 மணி |
| சமுத்திரத் தீர்த்தம் | 13.08.2011 காலை 6 மணி |
| பூரணை அபிஷேகம் | 13.08.2011 பி.ப. 2 மணி |
| கொடி இறக்கம் | 13.08.2011 பி.ப. 5 மணி |
| வைரவர் சாந்தி | 15.08.2011 பி.ப. 4 மணி |

மு.கு.: தீர்த்தம் முடிவுற்றதும் சுவாமி போன பாதையால் மு.ப. 10 மணிக்கு நேரே ஆலயத்தை வந்தடையும்.

(சி/574782) நிர்வாகம்.

## அக்கராயன் ப.நோ.கூ.சங்கம் (வ-து)

பதிவு இல: K/N 150

**கிளை பொதுச்சபைக் கூட்டம் பிற்போடல்**

அக்கராயன் ப.நோ.கூ.சங்கக் கிளைக்குழுத் தெரிவு நாளை (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்தது. மேற்படி கிளைக்குழுத் தெரிவு தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறாது என்பதை சங்க அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம். கிளைக்குழுத் தெரிவு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செயலாளர்
அக்கராயன் ப.நோ.கூ.சங்கம்.

(சி/574780)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அலட்சியப்போக்கு இனிமேலும் நல்லதல்ல

ஆடி அமாவாசை தினமான இன்று பிதிர்க்கடன் தீர்க்கும் கைங்கரியத்தை இந்துக்கள் மேற்கொள்கிறார்கள். குறிப்பாக தந்தையரை இழந்துள்ளவர்கள் மறைந்த அவர்களின் ஆன்மாக்கள் சாந்தி அடைய வேண்டும் என்பதற்காக நோன்பிருந்து சமயக் கடமைகளை நிறைவேற்றிப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டு இன்றைய நாளை மிகப் புனிதமான நாளாகப் பயன்படுத்துவார்கள்.

இந்த நாள் ஏன் மிகப் புனிதமாக இந்துக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றது என்பதை நேற்று எமது பத்திரிகையில் வெளியாகியிருந்த கட்டுரையொன்று விளக்கியிருந்தது.

அன்றைய தினம் வெளியாகியிருந்த இன்னொரு செய்தியும் வாசகர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கமுடியும். இறுதிப் போரில் உயிர் நீத்த சகல உறவினர்களதும் ஆத்ம சாந்திக்காக கிளிநொச்சியில் 25 இந்து ஆலயங்களில் ஆடி அமாவாசை தினமான இன்றையதினம் மோட்ச அர்ச்சனைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளும் நடைபெறவிருப்பதான செய்தியாகும் அது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வேண்டுகோளின்பேரில் வடக்கு மாகாண ஆளுநர் இதற்கான பணிப்புரையை விடுத்திருந்தார் என்று செய்தி கூறுகிறது.

இந்துக்களின் வழமையான ஒரு சமய அனுட்டானத்துக்கு ஆளுநரின் தலையீட்டுப் பங்களிப்புக்கு அவசியமிருப்பதாகத் தெரியவில்லை. அது ஒருபுறம் இருக்க -

இறுதிப்போரில் இறந்தவர்களின் உறவினர்கள் கோரும் பட்சத்தில் அவர்களின் சமயாசார கைங்கரியங்களை நிறைவேற்றிக்கொள்ள அனுசரணைகளை அரசு வழங்கவேண்டும் என்று ஐ.நா.நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிபந்தனையை நிறைவேற்றியதான ஒரு குறிப்புக்காகவும் அரசு சார்பில் அனுசரனை காட்டப்படுவதாகவும் கொள்ள இடமுண்டு.

எதுவானாலும் போரில் இறந்தவர்கள்-பெரும்பாலான சாதாரண பொதுமக்கள்-தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் மற்றும் இலங்கை இராணுவப் பிரிவுகளைச் சேர்ந்த படையினர் அனைவரது ஆன்மாக்களதும் நற்கதிக்காகவே இந்தப் பிரார்த்தனைகளும் அர்ச்சனைகளும் பொதுவாக நடத்தப்படுவதாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால் வன்னிப்போரின் இறுதிக் கட்டத்தில் சாதாரண பொதுமக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டார்கள் என்பதை யாராலும் மறந்து விடவோ மறைத்துவிடவோ முடியாது. போரின்போது அப்பகுதியிலிருந்து வெளிநாட்டு அரசு சாரா நிறுவனங்கள், ஐ.நா. குழுவினர் மற்றும் ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்பட்டிருந்த நிலையில் அங்கு இடம்பெற்ற சம்பவங்கள் வெளியில் தெரிவதற்கு சாத்தியமில்லாமல் போய்விட்டது. தப்பிவந்த பொதுமக்கள் கூறிய, தெரிவித்துக் கொண்டிருக்கின்ற விவரங்களோடு வெளியிலுள்ளவர்கள் கேட்டு மனம் புழுங்கிக் கொண்டிருப்பதைத்தவிர வேறு வழியின்றித் தவித்தார்கள்.

இந்த நாடு தனித்துப்போய் - ஒரு தீவாகக் கடலில் கிடக்கிறது, அதனால் இங்கு நடப்பவை ஒன்றும் வெளியில் தெரியவராது என்று நினைத்தவர்கள் இன்று திண்டாடுகிறார்கள் .

முதலில் ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை வெளிவந்தது. இலங்கை விவகாரங்கள், சட்டதிட்டங்கள், அரசமைப்பு வரலாறுகள் என்று சகலதையும் சாங்கோபாங்கமாக ஆராய்ந்து இலங்கை அரசின் போர் நடவடிக்கைகளையும், மனித உரிமை மீறல்களையும் கண்டித்ததுடன் இலங்கை அரசு மேற்கொள்ளவேண்டிய சிலபல செயற்பாடுகளையும் பரிந்துரை செய்திருந்தது. ஆனால் அந்த அறிக்கையை முற்று முழுதாக அரசும் அமைச்சர்களும் மறுத்து நிராகரித்துவிட்டார்கள்.

பின்னர் சனல்-4 காணொளி ஆவணங்களின் இரண்டாம் கட்டம் வெளிவந்தது. அது உலகம் முழுவதும் பரவலாகப் பார்க்கப்பட்டது. அதைப் பார்த்த மனித உணர்வு பெற்ற அனைவருமே உணர்ச்சிவசப்பட்டுப் போனார்கள். இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட சோடிக்கப்பட்ட காட்சிகள் எனக் கூறி மறுத்துரைத்தது இந்நாட்டு அரசு. புலிகள் செய்ததை தமது படைகள் செய்ததாகக் காட்டப் பார்க்கிறார்கள் என்பது போல் வியாக்கியானம் செய்யப்பட்டது மட்டுமல்ல இதற்கெல்லாம் ஆதாரம் எங்கே- நிரூபிக்கமுடியுமா? என்றும் கேட்கப்பட்டது.

இதற்கிடையில் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பை அரசு தரப்பு அலட்சியம் செய்ய முற்படுவது கவலை தருவதாகும். இத்தேர்தலில் அரச தரப்பு வெற்றிபெற்றிருப்பின் அதற்கான விளக்கம் வேறுவிதமாக இருந்திருக்கும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி அவர்களை வடக்கு கிழக்கு மக்களின் சார்பில் விலாவாரியாக பேசவும் ஒரு தீர்வுக்கு வித்திடவும் வழிவகுத்துள்ளதைப் புறம் ஒதுக்கிவிட முடியாது.

இந்த நிலைமையில்தான் சனல்-4 இன் அடுத்த ஆவணமும் வெளிவந்து அரசு தரப்பினரை மேலும் குலைநடுங்க வைத்துள்ளது. வழமைபோல் இதனையும் அரசு மறுத்துரைத்திருக்கிறது.

உண்மையில் போரின் இறுதிக்கட்டத்தில் என்னதான் நடந்து முடிந்தது? அது தொடர்பான உண்மை வெளிப்படையாகும் வரை சனல்-4 ஆவணங்களும் அறிக்கைகளும் வெளிவந்துகொண்டுதான் இருக்கும்போல் தெரிகிறது. எனவே முறையான, நம்பகத்தன்மையான, சகலரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உயர்மட்ட அப்பழுக்கற்ற சர்வதேச மட்ட நீதியாளர்கள் அடங்கிய விசாரனைக் குழுவொன்றை அமைத்து விரிவான விசாரணைகளுக்கு அரசு ஏற்பாடு செய்வது சாதுரியமாக இருக்கும். அதன் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தவும் அரசு ஆயத்தமாய் இருப்பது அவசியம்.

இந்த நிலைமையில் கிளிநொச்சி மற்றும் போர் நடைபெற்ற இடங்களில் மட்டுமல்ல ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் போரின்போது உயிர் நீத்த உறவுகளின் ஆன்ம சாந்திக்காக இந்த நாளில் அனைவருமே பிரார்த்தனையில் ஈடுபடுவது வேண்டற்பாலது. இது அவர்களுக்கு புறம் ஒதுக்க முடியாத கடமையுமாகும்.

# உணவு, மருந்துப் பொருள்களை பரிசோதிக்க பூரண அதிகாரம்

கொழும்பு, ஜூலை 30

இலங்கையின் எப்பிரதேசத்திலும் விற்பனைக்கு வைக்கப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் மருந்து வகைகளைச் சோதனையிடுவதற்கு உணவுகள் மற்றும் மருந்துகளைப் பரிசோதிக்கும் பரிசோத கர்களுக்கு பூரண அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன.

சுகாதார அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய சட்டத்துக்கு அமைய தாம் சேவையாற்றும் பிரதேசத்தில்உள்ள உணவு வகைகள் மற்றும் மருந்து வகைகளை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களில் மட்டுமே சோதனைகளை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அது எந்த வகையிலும் போதுமானதல்ல என்று சுகாதார அமைச்சு கூறுகிறது.

இனிவரும் நாள்களில் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் உள்ள விற்பனை நிலையங்களையும் சோதனையிடும் அதிகாரம் உணவு மற்றும் மருந்துவகைகளைப் பரிசோதிக்கும் பரிசோதகர்களுக்குக்கிட்டவுள்ளது.

அது தொடர்பான விதி நியமங்கள் அடங்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

(ம-22)

# சிறுபோக நெல் கொள்வனவுக்கு நெல் சந்தைப்படுத்தல் சபை தயாராம்

கொழும்பு, ஜூலை 30

சிறுபோகத்தில் விளைவிக்கப்படும் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தல் சபை தயாராக இருப்பதாக அதன் தலைவர் கே.பீ. ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் நெல்லைக் கொள்வனவு செய்யும் கருமங்கள் கடந்த வாரத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் 25 ஆம் திகதி முதல் நெல் கொள்வனவு செய்யப்பட்டுவருகிறது.

இம்முறை சிறுபோகத்தில் விவசாயிகளிடம் இருந்து இரண்டு லட்சம் மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்பட்டது.

கடந்த போகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு லட்சத்து 28 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் அரச களஞ்சியங்களில் கையிருப்பில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டரிசிக்கான ஒரு கிலோ நெல்லுக்கு அரசின் உத்தரவாத விலை 28 ரூபாவாகும். ஒரு கிலோ சம்பா நெல்லுக்கான உத்தரவாத விலை 30 ரூபாவாகும்.

(ம-22)

# 20 ஆயிரம் சிறார்கள் சிறுவர் இல்லங்களில் உள்ளனர்

கொழும்பு, ஜூலை 30

இலங்கையில் உள்ள சிறுவர்களில் சுமார் 20 ஆயிரம் பேர் சிறுவர் இல்லங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் தாய், தந்தையரைப் பெறும் முறைமை ஒன்றை அறிமுகப்படுத்தி அவர்களை அந்த இல்லங்களிலிருந்து விடுவிக்கும் முறையான திட்டம் ஒன்றை கட்டமைக்கப்பட வேண்டியுள்ளது.

சட்டம் மற்றும் நியாயத்துக்கான அமைப்பு மற்றும் குழந்தைச் செல்வங்களைப் பேணிக் காக்கும் நிறுவனத்தின் தலைவரான சட்டத்தரணி சுமேத சான் சேனாநாயக்க இவ்வாறு தெரிவித்தார். திருமணமான நூற் றுக்கு பத்துமுதல் பன்னிரண்டு வீதமான தரப்பினர் குழந்தைச் செல்வங்கள் இல்லாத நிலையில் உள்ளனர். அவர்களுக்கு இந்த இல்லங்களில் உள்ள குழந்தைகளை விடுவித்துக் கொள்வதற்கு உதவ முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-22)

# பேராசிரியர் சிவத்தம்பியின் அஸ்தி நாளை சொந்த ஊர் கரவெட்டிக்கு

## பிற்பகல் அஞ்சலி நிகழ்வுகள்

வடமராட்சி, ஜூலை 30

அமரர் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் அஸ்தி நாளை ஞாயிற்றுக்கிழமை அவரது சொந்த இடமான கரவெட்டிக்கு எடுத்துவரப்படுகிறது.

மரணத்தின் பின்னர் தனது அஸ்தி சொந்த ஊர் பொது மயானத்தில் விதைக்கப்படவேண்டும் என அமரர் சிவத்தம்பி கொண்டிருந்த விருப்பத்துக்கமைய அவரது அஸ்தி இங்கு எடுத்துவரப்படுகிறது.

கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம், நவசக்தி சனசமூக நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் எடுத்து வரப்படும் அன்னாரின் அஸ்தி பிற்பகல் அவரது பிறந்த வீடான பராசக்தி நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். தொடர்ந்து நவசக்தி சனசமூக நிலைய மைதானத்தில் அஞ்சலி உரைகள் இடம் பெறும்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், கரவெட்டி விக்கினேஸ் வரக் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம், மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ. இராகவன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்துவார்கள்.

தொடர்ந்து பிற்பகல் 4 மணிக்கு அங்கிருந்து அஸ்தி ஊர்வலமாக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு விதைக்கப்படும்.

(ஒ-236)

# மறைந்துவாழும் முன்னாள் புலிகள் உடன் சரணடைய வேண்டும்

## புனர்வாழ்வு ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

புனர்வாழ்வுக்கு ஆளாகாத விடுதலைப் புலிகள் அமைப்பின் பெரும் எண்ணிக்கையான முன்னாள் உறுப்பினர்கள் இன்னமும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மறைந்திருக்கக் கூடும் என்று புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமான சுதந்த ரணசிங்க தெரிவிக்கிறார்.

அத்தகைய தரப்பினருக்கு புனர்வாழ்வளிப்பது தொடர்பாக அவசியமான அனைத்து வசதிவாய்ப்புக்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் இராணுவ முகாம் ஒன்றில் அவர்கள் அச்சம் ஏதுமின்றி சரணடையுமாறு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இது குறித்து சுதந்த ரணசிங்க கருத்துத் தெரிவிக்கையில்:

தொடர்ந்தும் ஒளிந்து மறைந்து வாழாது சரணடையுமாறும் எந்தவொரு முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினருக்கும் முழுமையான பாதுகாப்பு வழங்கப்படும். அவர்கள் தம்மை புனர்வாழ்வுக்கு உட்படுத்திக் கொண்டதன் பின்னர் சிறப்பான வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கு அவசியமான வசதிவாய்ப்புக்கள் அனைத்தையும் அரசு செய்து கொடுத்துள்ளது. எனவே சம்பந்தப்பட்ட முன்னாள் உறுப்பினர்கள் உடனடியாக சரணடைந்துவிட வேண்டும் என்றார்.

(ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் 20 வீதமானோர் இதுவரை மீள்குடியமர்ந்துள்ளனர்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் இதுவரை 20 சதவீதமானோரே மீளக்குடியமர்ந்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களில் அதிகளவான மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளதாக தெல்லிப்பழை பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் கட்டமாக 3 கிராம சேவகர் பிரிவுகளில் மீளக்குடியமர்வு இடம்பெற்றது. அதன் பின்பு இந்த வருடம் மே மாதம் இரண்டாம் கட்டமாக சில இடங்களில் மக்கள் மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இந்தப் பிரதேசங்களில் மீளக்குடியமர்வுக்கு அனு மதிக்கப்பட்டும் மக்கள் குறைவாகவே இந்தப் பகுதிகளில் குடியமர்ந்தனர்.

தற்போது மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட சகல பிரதேசங்களிலும் வீதிகள் துப்புரவாக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

வீதிகள்துப்புரவாக்கும் பணிகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து மின்சாரம் வழங்குவதற்காக மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளன. அத்துடன் வீதிகள் பல செப்பனிடும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து மக்கள் மீளக்குடியமரும் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. கடந்த இரு மாதங்களிலேயே அதிகளவான மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இதுவரை விடுவிக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பின் சனத்தொகையின் இருபது சதவீதமே மீளக்குடியமர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-15)

# யாழ்.பொது நூலக சிறுவர் பகுதி நவீனமயத்துடன் கையளிப்பு




யாழ்ப்பாணம்,ஜூலை 30

சிங்கப்பூர் அரசின் 3 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் நவீனமயப்படுத்தப்பட்ட யாழ். பொது நூலகத்தின் சிறுவர் பகுதி நேற்று கையளிக்கப்பட்டது.

இதன் அரங்க நிகழ்வுகள் யாழ். பொது நூலகக்கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் ஜோ, யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவிடம் யாழ். பொது நூலக சிறுவர் பகுதியின் பெயர்ப் பலகையைக் கையளித்தார்.

அத்துடன் சிங்கப்பூர் இன்ரநஷனல் பவுண்டேசன் குழுவினரால், யாழ்.பொது நூலகத்தின் பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம், யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா,ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

யாழ்.மாநகரசபை முதல்வர், சிங்கப்பூர் முன்னாள் வெளிவிவகார அமைச்சருக்கு யாழ்ப்பாணத்தை போற்றும் வகையில் நினைவுச் சின்னத்தை வழங்கினார்.

பின்னர் நவீனமயப்படுத்தப்பட்ட சிறுவர் பகுதியை யாழ்.மாநகர சபை முதல்வர் திறந்து வைத்தார். சிறுவர் பகுதியில் சிறுவர்களுடன் கலந்துரையாடியதோடு கதை சொல்லும் நிகழ்விலும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சிங்கப்பூர் இன்ரநஷனல் பவுண்டேஷன் ஆளுநர் வினோத் குமாரசாமி, சிங்கப்பூர் தேசிய நூலகத்தின் பணியாளர் எட்வின் சாம், பாரம்பரிய கைத்தொழில்கள் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் கலந்து கொண்டனர்.(ம-311)

# வீதியோரங்களில் வீசப்படும் மிருகங்களின் எச்சங்கள்

## கொழும்புத்துறையில் சுகாதாரச் சீர்கேடு

கொழும்புத்துறை,ஜூலை 30

கொழும்புத்துறை விதானையார் வீதியில் இறைச்சிக்காக வெட்டப்படும் மிருகங்களின் கழிவுகள் விஷமிகளால் கொட்டப்படுவதால் அந்தப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரச் சீர்கேடும் நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

அந்தப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் ஆடு, மாடு போன்ற மிருகங்களை இறைச்சிக்காக வெட்டுவோர் எச்சங்களை பொதி செய்து அந்தப் பகுதியில் வீதியோரங்களில் வீசிவிட்டுச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கழிவுகளை நாய்கள் இழுத்து வந்து வீதிகளில் பரப்புவதால் துர்நாற்றம் வீசுகின்றது.

இந்தப் பகுதியால் பயணம் செய்பவர்கள் மட்டுமன்றி இங்கு குடியிருப்போரும் இதனால் பெரும் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்கொள்கின்றனர்.

இதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ம-135)

# பன்றிகளால் பயிர்கள் அழியும் நிலை

வடமராட்சி,ஜூலை 30

உடுப்பிட்டிப் பகுதியில் பன்றிகளின் தொல்லையால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இரவு வேளைகளில் தோட்டங்களுக்குள் நுழையும் பன்றிகள் வெங்காயப் பயிரையும் மற்றும் மரக்கறிப் பயிர்களையும் அழித்து வருகின்றன.

பன்றிகளால் பயிர்கள் நாசமடைவதால் விவசாயிகள் மிகுந்த வேதனையடைந்துள்ளனர்.

(ம-236)

# குடி தண்ணீர் தேவையை முன்னிட்டு புன்னாலைக்கட்டுவன் ம.விக்கு நிதி

வலி.வடக்கு, ஜூலை 30

புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலய மாணவர்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் நிதி வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக 75 ஆயிரம் ரூபா நிதியை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கியுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் ஏற்கனவே இருந்த குடிதண்ணீர் பெறும் கிணறு கடந்த கால யுத்தத்தைத் தொடர்ந்து பாதிப்படைந்துள்ளது.

தற்போது மாணவர்கள் குடிதண்ணீர் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த நிதியில் புதிய குழாய்க்கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ம-86)

# குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

தேசிய நீர்வழங்கல் சபையால் சுன்னாகம் ஊடாக கந்தரோடை - கட்டுடை மற்றும் நவாலி பிரதேசத்துக்கு குழாய் மூலம் வழங்கப்படும் குடிதண்ணீர் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படும்.

இதன் முதற்கட்டமாக சங்குவேலியில் உள்ள பம்ஹவுஸ் மீள்புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. மின்மோட்டர் மற்றும் நீர்ப்பம்பிகள் பொருத்துவதற்கான அறை 3 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதேவேளை - புதிய மின்மோட்டர் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கையை தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் பா.தபேந்திரகுமார் மேற்கொண்டுள்ளார்.

(ம- 302)

# மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாவட்ட மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவுவிழா நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கன்னாதிட்டியிலுள்ள மக்கள் வங்கியின் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட மாற்றுவலுவுள்ளோருக்கு அன்பளிப்புகள் வழங்கப்படவுள்ளன. (ம-313)

# தனியார் ஒருவரின் ரூ.5 லட்சம் நிதியில் புற்றுநோய் பிரிவுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோயாளர் சிகிச்சைப் பிரிவில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு உணவுப்பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் உள்ளடங்கலான பொதி வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் சிறுவர் பகுதியில் இடம்பெற்றது.

கொழும்பை நிரந்தர வதிவிடமாகவும் ஓமான் நாட்டில் தொழில் புரிபவருமான திருமதி வதனி மோகனசங்கர் இதற்கான நிதியுதவியை வழங்கி பாதிக்கப்பட்ட சிறார்களுக்குச் சத்துணவு பொதிகளையும் கையளித்தார்.



கடந்த ஒருவருட காலமாக யாழ்.போதனா வைத்தியசாலையின் சிகிச்சைப் பிரிவுக்கு மருந்துப் பொருள்களை வாங்குவதற்கான நிதியுதவியை வழங்கிவரும் வதனி மோகனசங்கர் நேற்று நேரடியாக வைத்தியசாலைக்கு வருகைதந்து இந்த உதவியை வழங்கியுள்ளார்.

சிறுவர் இல்லங்கள் மற்றும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு பல்வேறு சமூக சேவைகளை வழங்கி வரும் இவர் ரூபா 5 லட்சம் பெறுமதியான பொருள்களை நேற்றைய தினம் வழங்கினார்.

கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த புற்றுநோயால் பாதிப்படைந்த சிறார்கள், அவர்களின் பெற்றோர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த மாவட்டங்களிலிருந்து 65 இற்கும் மேற்பட்ட சிறார்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் வைத்திய நிபுணர் எஸ்.ஜெயக்குமாரன், வைத்திய கலாநிதி ரி.துசியந்தன் ஆகியோரும் கலந்துகொண்டு சிறார்களுக்கு சத்துணவுப் பொதிகளை வழங்கினர்.

வடமாகாணத்திலிருந்து 5 மாவட்டங்களைச் சேர்ந்த புற்றுநோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தருவதால் நோயாளிகளுக்கான தேவைகள் அதிகமாக உள்ளன.

இதுபோன்ற சமூக சேவையாளர்கள் இவ்வாறான கொடைகளைச் செய்வதற்கு முன்வர வேண்டும் எனவும் வைத்தியர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

(ம-313-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில்லறை மீதிக்கு இனிப்புப்பண்டம் வழங்குவது நிறுத்தப்பட வேண்டும்

## வர்த்தகர்களுக்கு அறிவுறுத்து

வலி.வடக்கு,ஜூலை 30

யாழ்.மாவட்டத்தில் வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்கள் போன்றவற்றில் பொருள்களை வாங்கும் பொதுமக்களுக்குச் சில்லறை மீதிப்பணத்துக்குப் பதிலாக இனிப்புப் பொருள்களை வழங்குவது நிறுத்தப்படவேண்டும்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரம் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் வணிகர்கழக உறுப்பினர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையே வியாழக்கிழமை வணிகர் கழக மண்டபத்தில் வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தலைமையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் செய லாளர் ஆர்.ஜெனக்குமார்,உப செயலாளர் எஸ்.சிவகுமார் மற்றும் நிர்வாக அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பிலேயே மேற்கண்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. மேலும் கூறப்பட்டதாவது:

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலத்தில் சில்லறைக் காசுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது. இதனால் வர்த்தகர்கள் தம்மிடம் பொருள்கள் வாங்கும் பொது மக்களுக்குச் சில்லறைப் பண மீதிக்குப் பதிலாக இனிப்புப் பண்டங்களை வழங்கி வருகின்றனர்.

இத்தகைய நடவடிக்கை பொதுமக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கியுள்ளன.

வர்த்தகர்களின் நன்மதிப்பும்கூட இதனால் பாதிக்கப்பட்டு வந்தது. இது சம்பந்தமாக யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் பொது மக்களும்கூட எமது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்கள்.

நாம் இது சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் இயங்கும் வங்கிகளுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து வங்கிகள் சில்லறையை வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

இதுவரை இருந்த சில்லறைத் தட்டுப்பாடு எதிர்காலத்தில் இருக்காது எனவும் அவர் மேலும் கூறினார்.(ம-68-311)

# மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

யாழ்.மாவட்ட மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கன்னாதிட்டியிலுள்ள மக்கள் வங்கியின் பிராந்திய அலுவலகத்தில் இந்த நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட மாற்றுவலுவுடையோருக்கு உபகரணங்களும் பல்வேறு உதவிகளும் வழங்கப்படவுள்ளன என்று சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ம-313)

# வேலையற்ற இளையோருக்கு தொழிற்பயிற்சி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை 30

வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்குத் தொழில் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் தொழில் பயிற்சிகளைப் பெறவிரும்பும் 18 முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள் இந்தப் பயிற்சிகளில் கலந்து கொள்ள முடியும்.

நல்லூர்ப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அல்லது தத்தமது பிரிவின் கிராம அலுவலர்களுடன் ஆர்வமுள்ளோர் தொடர்பு கொண்டு அதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் மேலதிக விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம் என்று நல்லூர்ப் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ம-7)

## மாவணவர்களுக்காக...




நினைவூட்டல்:- மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசு தின விழாவில் நிறுவுநர் நினைவுரையை நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியை திருமதி வதனா கேதீஸ்வரசர்மா நிகழ்த்துகின்றார். மேடையில் பிரதம விருந்தினரான மக்கள் வங்கியின் சங்கானைக்கிளை முகாமையாளர் ச.சர்வானந்தன், அதிபர் திருமதி சி.சுந்தரபாரதி, சிறப்பு விருந்தினரான ஒஸ்மானியாக் கல்லூரி ஆசிரியை திருமதி சிவராணி நந்தகுமார், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திருமதி ஜெஜீவமலர் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ம)

# விசேட தேவையுடையோரை வலுப்படுத்தச் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை30

விசேட தேவை உடையவர்களை வலுப்படுத்தும் செயற்றிட்டம் ஒன்று உடுவில் பிர தேச செயலாளர் பிரிவில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சால் கடந்த புதன், வியாழன் ஆகிய இரண்டு நாள்களும் முன்னெடுக்கப்பட்டன.

உடுவில் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் சமூக சேவை அலுவலர் எஸ்.சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசிய மொழிகள் சமூகமேம்பாட்டு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.எல்.எம்.ஹாசிம், சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.சி.எல்.பெர்ணான்டோ மற்றும் வளவாளர்களாக எம்.ஆர். சாந்தகுமார், மாசா பண்டாரா நிலுகா கேதீஸ்வரன், யாழ். மாவட்ட இணைப்பாளர் என். ஜனனி ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

இந்தச் செயலமர்வில் விசேட தேவை உடையவர்களுடன் அவர்களை பராமரிப்பவர்கள் மற்றும் சமுதாய மட்ட புனர்வாழ்வுத் தொண்டர்கள் எனச் சுமார் எண்பதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டார்கள். (ம-86)

# நல்லூர் ஆலயச் சூழலில் வீடியோக் கமெராக்கள்

## திருவிழாவை முன்னிட்டு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை 30

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாக் காலங்களில் ஆலயச்சூழலில் வீடியோ கமெராக்கள் பொருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்தத் திருவிழா ஆரம்பமாகவுள்ளதை முன்னிட்டு ஆலயச் சுற்றாடல் பகுதிகளைச் சுத்தமாக வைத்திருக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

அங்கப் பிரதிஷ்டை மற்றும் அடியழிக்கும் பக்தர்களின் நலன் கருதிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 200 லோட் மணல் ஆலய வீதிகளில் பரவப்படவுள்ளது.

ஆலயப் பகுதியில் மின்வெளிச்சங்களைச் சீராக வழங்குவதற்கான வேலைகள் இடம்பெறுவதுடன் தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கும் பணிகளும் இடம் பெற்றுள்ளன என்றும் முதல்வர் மேலும் கூறினார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆலயத் திருவிழா ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# துண்டி ஐயனார் ஆலய புனரமைப்பு ஆரம்பம்

கொழும்புத்துறை,ஜூலை 30

கொழும்புத்துறை துண்டி ஐயனார் ஆலயப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் இந்த ஆலயம் சேதமடைந்து காணப்படுகின்றது.

அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்த இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆலயப் புனரமைப்புப் பணிகளை ஐயனார் ஆலயப் பரிபாலன சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்தப் பகுதிக்கு மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் அண்மையில் இந்த ஆலயத்திலிருந்த பெறுமதி மிக்க விக்கிரகங்கள் திருட்டுப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-135)

# யாழ்ப்பாணத்தின் சுற்றுலாத் துறையே முன்னேற்றமாக உள்ளது

## சுற்றுலா சபை இயக்குநர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

யாழ்ப்பாணத்தின் சுற்றுலாத் துறையே தற்போது முன்னேற்றமாக உள்ளது என்று கூறியுள்ளார் சுற்றுலாச் சபையின் இயக்குநர் உபாலி ரத்னாயக்கா.

இலங்கைச் சுற்றுலாச் சபையின் நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.நகரிலுள்ள 'ரில்கோ' ஹோட்டலில் இந்த நடமாடும் சேவையைச் சுற்றுலாச் சபையின் இயக்குநர் உபாலி ரத்னாயக்கா தொடக்கி வைத்தார்.

இதனைத்து தொடங்கி வைத்துக் கருத்துக்கூறும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்யக்கூடிய வகையில் இங்குள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு அடையவேண்டும். குறிப்பாக போக்குவரத்து, மின்சாரம் போன்ற துறைகளில் வளர்ச்சியடைய வேண்டும்.

அத்துடன் இங்குள்ள ஹோட்டல்களில் சேவை வழங்குநர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். இதற்காக நீங்கள் கொழும்புக்கு வந்து 3 நாள்கள் செலவிட வேண்டியிருக்கும். அவ்வாறு உங்கள் நேரத்தை வீணாக்கக் கூடாது [illegible] இங்கேயே நடமாடும் சேவையை நடத்துகின்றோம்.

கொழும்பில் நீங்கள் செய்ய வேண்டிய வேலையை உங்களுக்கு இங்கே செய்து தருவதற்காக எமது சுற்றுலாச் சபையின் 15 அங்கத்தவர்கள் வந்துள்ளனர். இந்த நடமாடும் சேவை இன்று ஆரம்பமாகியுள்ளது.

நாளையும் இதை உரிய வகையில் இங்குள்ள சேவை வழங்குநர்கள் பயன்டுத்திக் கொள்ளவேண்டும்.

இந்தப் பகுதியில் சுற்றுலாத் துறையை வளர்ப்பதன் மூலம் வேலை வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முடியும். அத்துடன் இந்தச் சுற்றுலாத்துறை மூலம் பல்வேறு நல்ல பலாபலன்கள் கிடைத்தாலும் சில தீய நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. இதைக்கட்டுப்படுத்திச் சுற்றுலாத் துறையைச் சிறப்பாக முன்னேற்ற வேண்டும்.- என்றார். (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் நிர்க்கதியான இலங்கையர்கள் நாட்டுக்கு

ஈராக்கில் பல வருடங்களாக சம்பளம் வழங்கப்படாமல் நிர்க்கதியான நிலையில் உள்ள இலங்கைப் பணியாளர்கள் 41 பேரை எதிர்வரும் இரண்டு வாரத்துக்குள் நாட்டுக்கு அழைத்துவர உள்ளதாக இலங்கை வெளி விவாகர அமைச்சு தெரிவித்துள்ளது.

ஈராக்கிற்கு பணியாளர்களாகச் சென்று பல வருடங்களாக சம்பளம் வழங்கப்படாத நிலையில், அண்மையில் 41 இலங்கையர்களும் ஈராக் அல் அமாரா என்ற பிரதேசத்தில் உண்ணா விர தப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இந்தநிலையில் வெளிவிவகார அமைச்சு ஈராக் அரசுடன் பேச்சு நடத்தி இவர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுத்துள்ளது. ஈராக்கில் தங்கியுள்ள 41 இலங்கையர்களுக்கும் 350,000 ரூபா வழங்க அந்த நாட்டு அரசு ஒப்புதல் அளித் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(வ)

# இந்தியக் கடற்படையால் கைதாகிய இலங்கை மீனவர்கள் விளக்கமறியலில்

ஒரிசா மாநிலம் பாரதீப் கடல் பகுதியில் அத்து மீறி மீன்பிடி நடவடிக் கையில் ஈடுபட்ட மேலும் 11 இலங்கை மீனவர்கள் இந்திய கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப் பட்டவர்கள் பாரதீப் கொண்டு செல்லப் பட்டு பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்டனர். அதன்பின் 11 மீனவர்களும் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

3 நாள்களுக்கு முன்பும் இதே கடல் பகுதியில் இலங்கையைச் சேர்ந்த 13 மீனவர்கள், 3 இயந்திரப் படகுகளுடன் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# சோமாலிய கடல் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கையர் விடுவிப்பு

சோமாலிய கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கையர் ஒருவர் உள்ளடங்கிய கப்பல் மற்றும் அதன் பணியாளர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையர் அடங்கிய குறித்த கப்பல் கடந்த வாரம் சோமாலிய கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்டிருந்தது.

கடத்தப்பட்ட கப்பலையும் அதிலிருந்த பணியாளர்களையும் விடுவிக்கவென கப்பல் நிறுவனமானது கடற்கொள்ளையர்கள் கோரியிருந்த 2 லட்சம் அமெரிக்க டொலர் கப்பத்தை செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற 'புள்ளி விவரவியல் ஓர் ஆரம்பம்' என்னும் தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் யாழ்.பல் கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அறிவழகன் கருத்துரை வழங்குகிறார். கருத்தரங்கிற் [illegible] கலந்து கொண்டடோர் அமர்ந்திருக்கின்றனர். (வ)

# இன்டர்போல் பொலிஸாரால் தேடப்படுவோரில் சந்தேகத்தில் கைதான தமிழருக்கு விடுதலை

## சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

இன்டர்போல் பொலிஸ் எச்சரிக்கை பட்டியலில் உள்ளவர் எனச் சந்தேகிக்கப்பட்டு இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழரை விடுதலை செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த 52 வயதுடைய கன்யூட் ஸ்ரீபாலன் பீரிஸ் கடந்த 26 ஆம் திகதி சென்னை விமான நிலையத்தில் குடியுரிமை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சர்வதேச ரீதியில் தேடப்படுவோர் பட்டியலிலும் இன்டர் போல் பொலிஸ் எச்சரிக்கை பட்டியலிலும் பெயர் இருப்பதாக இவர் மீது குற்றம்சாட்டப்பட்டது.

இதுதொடர்பில் கன்யூட் ஸ்ரீபாலன் பீரிஸின் மனைவி லூர்து பெனில்டா பீரிஸ் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆள்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவில் அவர் கூறியுள்ளதாவது:

எனது கணவர் பீரிஸ் கடந்த 26 ஆம் திகதி இலங்கை செல்வதற்காக சென்னை விமான நிலையத் தில் காத்திருந்தார்.

அப்போது சர்வதேச ரீதியில் தேடப்படுகிறவர்கள் பட்டியலிலும் இன்டர் போல் பொலிஸ் எச்சரிக்கை பட்டியலிலும் பீரிஸின் பெயர் இருப்பதாகக் கூறி எனது கணவரைக் குடியுரிமை அதிகாரிகள் கைது செய்தனர்.

இந்தக் கைது நடவடிக்கை சட்ட விரோதமானதாகும். எனவே அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, விடுதலை செய்ய உத்தரவிட வேண்டும் என்று அந்த மனு வில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்த மனு மீது நீதிபதிகள் சி.நாகப்பன், எம்.சத்தியநாராயணன் ஆகியோர் முன்னி லையில் கடந்த புதன்கிழமை விசாரணை நடை பெற்றது. இதனையடுத்து பீரிஸை விடுதலை செய்யுமாறு நீதிபதிகள் உத்தர விட்டனர். (வ)

## மரண அறிவித்தல்

திருமதி
**அல்பிறெட் யோசேப் லூர்த்தம்மா**



பருத்தித்துறை புனித அந்தோனியார் பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அல்பிறெட் யோசேப் லூர்த்தம்மா 28.07.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்ற அல்பிறெட் யோசேப் (தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் அன்ரன் ராஜசேகரன், ஆன் இலங்காதேவி (கனடா), லோறன்ஸ் ராஜேந்திரகுமார் (லண்டன்), காலம் சென்ற றஞ்சித்குமார் ஆகியோரின் தாயும் வாசுகி (ஆசிரியர், யா/கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்), சுரேன் (கனடா), தவமலர் ஆகியோரின் மாமியாரும் பிரவீனின் (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி நிகழ்வுக்காக இன்று (30.07.2011) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், அயலவர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ.அன்ரன் ராஜசேகரன் (மகன்)
புனித அந்தோனியார் ஒழுங்கை,
பருத்தித்துறை,
(6329)

Special Offer
மலிவு விற்பனை
Tharish Enterprises
தரிஸ் என்ரபிறைசஸ்




வீட்டுக்குத் தேவையான சகல தளபாடங்களும் விசேடமாக மொறட்டுவவிலிருந்து தருவிக்கப்பட்டது.
புதிய டிசைன்களிலான சாப்பாட்டு மேசைகள், கட்டில்கள், ஸ்ரீல் அலுமாரிகள்,
மின்சார பல்புகள், சார்ச்சர் லைற் பிளாஸ்ரிக் கதிரைகள்.
கூரைத்தகடுகள், ஓடு, சீற் வகைகள்.
அனைத்தும் மலிவு விலையில்
A.09 வீதி, (சியாமளா மில் வீதி முகப்பு), பத்தர் சந்தி, மிசாலை.

மனமார்ந்த நன்றிகள்
வலி. தென்மேற்கு
பிரதேச சபைத் தேர்தல் 2011



மேற்படி தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு (த.தே.கூ) வெற்றியை ஈட்டிக் கொடுத்ததுடன் விருப்பு வாக்குகள் மூலம் என்னையும் ஒரு உறுப்பினராகத் தெரிவுசெய்ததற்கு நன்றி கூறுகின்றேன். மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற இறை ஆசி வேண்டுகிறேன்.
சில்லையூர் சூ.மரியநாயகம்.
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

நன்றி... நன்றி... நன்றி...



தமிழ் மக்களுக்கு வலி தந்தோரை உணர்வெழுச்சியுடன் தோற்கடித்து தமிழினத்தின் விதிவெல்ல வாக்களித்த வலி. வடக்கு பிரதேச மக்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.
அச்சமும் பேழமையும் அழமைச் சிறுமதியும் உச்சத்தில் கொண்டோரின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாது தமிழ்வாழ, தமிழர் வெல்ல, தமிழ் உணர்வோடு செயற்பட்ட உங்களை வணங்குகிறேன்.
எந்த நிலையிலும் உங்களுக்காக...
உங்களோடிணைந்து உங்கள் உயர்வுக்காக உழைப்பேன் என உறுதி கூறுகிறேன்.
நாம் எல்லோரும் சரிநிகர் சமானமாக வாழ ஒருமையுணர்வுடன் உழைப்போம்... வெல்வோம் வாழ்வோம்.
எனது வெற்றிகரமான தெரிவுக்காக உழைத்த ஆதரவாளர்கள், நண்பர்கள், உறவுகள் மற்றும் ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் என் பணிவான நன்றிகள்.
என்றும் அன்புடன் ச.சஜீவன்
வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

ஜனஜய லொத்தர்
உத்தியோகப்பூர்வ முடிவுகள்
வாரம் 248
சீட்டிழுப்புத் திகதி 28.07.2011
வெற்றி இலக்கங்கள்: 34 54 58 64
சுப்பர் இலக்கம்: 09
சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 7,184,750/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 74716 | ரூ. 20/= | ரூ. 1,494,320 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 6806 | ரூ. 40/= | ரூ. 272,240 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 5808 | ரூ. 100/= | ரூ. 580,800 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 533 | ரூ. 200/= | ரூ. 106,600 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 143 | ரூ. 1,500/= | ரூ. 214,500 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 6 | ரூ. 3,000/= | ரூ. 18,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 7,184,750/= | |
| மொத்த எண்ணிக்கை | 88013 | | ரூ. 3,686,460/= |

நாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 7,411,850/= உட்பட வரிவிலக்குற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்
வளமான வாழ்வித்த அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்புக்கு மாறாக எவரையும் தலைவராக நியமிக்க முடியாது

## திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்



கொழும்பு,ஜூலை30

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்புக்கு புறம்பாக எந்த வகையிலும் எவரையும் கட்சியின் தலைவராக நியமிக்க முடியாது என அந்த கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியை ஏற்றுமாறு விடுத்த கோரிக்கை பிரதித் தலைவர் கரு ஜயசூரிய ஏற்றுக் கொண்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளமை தொடர்பாக பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சியின் யாப்பின் பிரகாரம் தற்போதைய தலைவர் ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் அதேவகையில் கட்சி செயற்படும்.

2010 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட கட்சியின் புதிய யாப்புக்கு அமைய கட்சியின் தலைவரை செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்ய வேண்டும்.இதன்போது பிரச்சினைகள் ஏற்பட்டால் தலைவரை தெரிவு செய்யும் நடவடிக்கையில் நாடாளுமன்றக் குழுவை இணைத்து கொள்ள வேண்டும்.

கட்சியின் தலைவர் பதவியில் மாற்றங்களை செய்ய முடியாது, கட்சியின் யாப்பில் உள்ள சட்டத்திட்டங்களுக்கு அமையவே அதனை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (ச)

## மீண்டும் என்ன குழப்பம்...?



ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு அந்தக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய இணக்கம் தெரிவித்தமையை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச, நாடாளுமன்ற உறுப்பினர்களான , தலதா அத்துகோரள, ரோசி சேனநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

# 3,174 அழகியல் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கினார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 30

அழகியற் கலை பட்டதாரிகள் மூவாயிரத்து 174 பேருக்கு நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஆசிரியர் சேவையின் கடமைகளை நிறைவேற்றும் வகையில் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் செயற்படுவார்கள் என தான் நம்புவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை கருத்திற் கொண்டு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அழகியற் கலை பட்டதாரிகளுக்கு ஆகக்கூடுதலாக ஒரே தடவையில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# அரசு - கூட்டமைப்பின் அடுத்த பேச்சின் பின்பே தெரிவுக்குழு அமைப்பது குறித்து ஆராயப்படும்

## அமைச்சர் தினேஷ் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 30

அரசு - தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு இடையில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள பேச்சுக்களின் பின்னரே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை தயாரிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி அரசு - கூட்டமைப்பின் 10 ஆவது சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சுக்களின்போது கூட்டமைப்பு முன்வைக்கும் கருத்துக்கள் - யோசனைகள் குறித்து வெகு கவனமாக, ஆழமாக ஆராய்ந்து அதற்கேற்றவாறு அடுத்த நகர்வு இடம்பெறும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தற்போதைய நிலமை குறித்து விவரிக்கையிலேயே ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

கூட்டமைப்பின் யோசனைகளையும் கவனத்திற்கொண்டு தெரிவுக்குழுவுக்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைக்கவே எதிர்பார்க்கின்றோம்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பில் கூட்டமைப்பு எடுக்கும் முடிவின் அடிப்படையிலேயே தமது கட்சியின் தீர்மானம் தங்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த நிலையிலேயே தெரிவுக் குழு தொடர்பில் தமிழ்க் கூட்டமைப் பின் யோசனைகள் பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றன.

எனவே கூட்டமைப்புடனான சந்திப்பின் பின்னர் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்- என்றார். (ஒ-ச)

# கட்சியின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க கரு ஜயசூரியவுக்கு விசேட பொறுப்பு

## பிரிட்டனில் இருந்தே அதிகாரம் வழங்கினார் ரணில்



கொழும்பு,ஜூலை30

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ளவர்கள் கட்சிக்குள் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு பலவாறான கருத்துக்களை கொண்டுள்ளபோதும் கட்சியின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கவும் அதனை கட்டியெழுப்பவும் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவுக்குதான் விசேட பொறுப்புக்களை வழங்கியுள்ளதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் கிளை அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கட்சி முக்கியஸ்த்தர்களுடனான சந்திப்பின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்சிக்குள் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது இந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் தன்னை வந்து சந்தித்த விடயத்தையும் அதன் போது கூறப்பட்ட கருத்துக்கள் தொடர்பில் கரு ஜயசூரிய தனக்கு அறிவித்ததாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தான் வெளிநாடு சென்றுள்ளதால் கட்சியில் இடம்பெறும் விடயங்கள் குறித்து தொலைபேசி ஊடாக தனக்கு அறிவிக்குமாறு கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய மற்றும் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி கிளை அலுவலகங்களை மேம்படுத்தி 2012 ஆம் ஆண்டளவில் வலுவான சர்வதேச வலையமைப்பாக அவற்றை மாற்றவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ச)

# அங்குலானை இரட்டைக்கொலை வழக்கின் தீர்ப்பு ஒக். 25 இல்

கொழும்பு, ஜூலை 30

அங்குலானை இரட்டைக் கொலை வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி வழங்கப் படவுள்ளது.

இந்த வழக்கு மீதான தீர்ப்பு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் அடங்கிய குழுவால் அறிவிக்கப்படவுள்ளது. இந்த வழக்கின் பிரதிவாதிகளாக அங்குலானை பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி உள்ளிட்ட நான்கு பொலிஸார் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட இவர்கள் தொடர்ந்தும் நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வழக்குடன் தொடர்புடைய சாட்சியங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், இந்தத் திகதியில் தீர்ப்பு வழங்கப்படுமென நீதியரசர்கள் குழு குறிப்பிட்டுள்ளது.

அங்குலானை பிரதேசத்தில் பொலிஸாரால் கூட்டிச் செல்லப்பட்ட இரு இளைஞர்கள் மறுநாள் சடலமாக மீட்கப்பட்டதையடுத்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை சிறப்பு வழக்காகக் கருதி விசாரணை செய்யவென முன்னாள் பிரதம நீதியரசர், மூன்று நீதிபதிகள் கொண்ட குழுவை அமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரயில் கடவைகளுக்கு இனி இலத்திரனியல் சமிக்ஞைகள்

கொழும்பு,ஜூலை30

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு இலத்திரனியல் மணிகளையும் சமிஞ்சைகளையும் பொருத்துவதற்காக ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

இந்த நடவடிக்கைக்காக 9 கோடி ரூபாவை சர்வதேச விலை மனு கோரல் நடைமுறைக்கு அமையவும், 10 கோடி ரூபாவை உள்நாட்டு விண்ணப்பதாரிகளுக்கான விலை மனு கோரல் மூலமும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ரயில்வே பொதுமுகாமையாளர் பி.ஏ.பீ.ஆரிய ரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத் திட்டத்தை இந்த வருட இறுதிக்குள் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்றிட்டம் காரணமாக ரயில்வே கடவைகளில் இடம்பெறும் விபத்துக்களை குறைத்துக்கொள்ள முடியுமென அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் 630 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் இருப்பது தெரிய வந்துள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவிக் கின்றது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதார உதவிகளை இழந்து நிற்கும் கிளிநொச்சி இரத்தினபுரம் கிராம மக்கள்

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி இரத்தினபுரத்தில் மீள்குடியமர்ந்து தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்ற சுமார் 20 குடும்பங்கள் சொந்தமாகக் காணியில்லாததால் வாழ்வாதார உதவிகளைப் பெறமுடியாத நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு சுமார் 400 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இதில் 120 குடும்பங்கள் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றன. இவர்களுள் சுமார் 20 குடும்பங்களுக்குச் சொந்தமாகக் காணிகளோ அல்லது காணி அனுமதிப்பத்திரங்களோ இல்லை. இதனால் இவர்கள் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இந்தப் பகுதியில் என்.ஆர்.சி. நிறுவனம் வீடு கட்டுவதற்கான மரப்பொருள்களை வழங்கியது. 50 குடும்பங்கள் இவற்றைப் பெற்றுக் கொண்டன. மேலும் 50 குடும்பங்களுக்கு வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. மீதி 20 குடும்பங்களுக்கும் காணியில்லாததால் இந்த உதவிகள் வழங்கப்படமாட்டாதெனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கவலை அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக இந்தக் குடும்பங்கள் தங்கள் பகுதியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பிரதேச செயலர் ஆகியோருக்கு அறிவித்த போதிலும் இதுவரை பயன் எதுவும் கிடைக்கவில்லையெனவும் எல்லோரும் தமது விடயத்தில் நழுவல் போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

அரச அதிபர் தமது விடயத்தில் தலையிட்டுத் தமக்கு உதவ வேண்டுமென இவர்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

# வலய மட்டப் போட்டிகளில் வட்டக்கச்சி ம.வி. சாதனை

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி, வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவர்கள் வலய மட்டத் தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடம், இரண்டாம் இடங்களைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் இருந்து பிரிவு - 4 இல் கட்டுரை எழுதுதல் போட்டியில் பங்குபற்றிய மாணவி பொன்னுத்துரை நீலாம்பரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். பிரிவு 1 இல் கதை கூறுதல் போட்டியில் பங்குகொண்ட மாணவன் கிருபானந்தன் சுஜீத்தனனும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன் திறந்த போட்டி விவாதத்தில் குழுவாகப் பங்கு கொண்ட மாணவிகளான யோகானந்தன் சியாம், சுப்பிரமணியம் மீராளப்சிபா, விக்னராஜா இலதாங்கி ஆகியோர் இரண்டாம் இடத்தைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

இந்தப் பாடசாலையில் வளப் பற்றாக்குறைகள் இருந்த போதிலும் அதிபர், ஆசிரியர் ஏனையோரின் ஊக்கமும், ஆதரவும் காரணமாகக் கல்வியிலும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்த நிலையில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-426)

## இரும்புப் பாலம் புனரமைப்பு

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் இருந்து திருவையாறு செல்லும் பகுதியில் அமைந்திருந்த இரும்புப் பாலம் புனரமைக்கப்பட்டுள்ளது.


இந்தப் பாலத்தில் பல தட்டுகள் நீண்ட காலமாக இல்லாதிருந்தது. இதனால் இந்தப் பாலத்தினூடாகப் பயணிப்பவர்கள் பயப்பீதியுடனேயே பயணித்தனர்.

தற்போது அந்தத் தட்டுக்கள் போடப்பட்டு முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பாலத்தினூடாகப் பயணிகள் பயமின்றிப் பிரயாணம் செய்கின்றனர்.

இந்தப் பாலம் மீள்குடியமர்வுக்குப் பின் தற்போது தான் புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-405)

**மகத்தான சேவை...**



சேவைக்குக் கௌரவம்: வவுனியாவில் 2009 ஆம் ஆண்டு முதல் நலன்புரி நிலையங்களில் பணியாற்றிய சுகாதார மேம்பாட்டாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வின்போது வருகைதந்த விருந்தினர்களும் கௌரவிக்கப்படும் சுகாதார மேம்பாட்டாளர்களும் காணப்படுகின்றனர். (421)

## ஆங்கில தினப் போட்டிகள்

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி வலய, மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

நாளைய போட்டிகள் யாவும் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் நாளை மறுதினம் நடைபெறும் போட்டிகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார்.

நாளைய போட்டியில் தரம் 3 -13 வரையான உறுப்பமைய எழுதுதல், கவிதை கூறல் ஆகிய போட்டிகளும் தரம் 6-13 வரையான சொல்வதெழுதல், ஆக்க இலக்கியம் ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன.

ஏனைய போட்டிகள் யாவும் நாளைமறுதினம் நடைபெறும். (க-405)

# ஆமை வேகத்தில் நகரும் உட்கட்டுமான வேலைகள்

முல்லைத்தீவு, ஜூலை 30

முல்லைத்தீவு மாவட்டத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழான உட்கட்டுமான வேலைகள் எதிர்பார்த்த அளவுக்கு நிறைவேற்றப்படவில்லையென இங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது இங்கே மீள்குடியமர்ந்த மக்களுக்குப் பாடசாலைகள், பிரதான வீதிகள், நீர்ப்பாசனக் குளங்கள் என்பன அவசிய தேவைகளாக உள்ளன.

ஆனால் இந்த மாவட்டத்தின் பிரதானமான குளமாகிய முத்துஐயன்கட்டுக் குளத்தின் கீழ் உள்ள பிரதான வாய்க்கால்கள், கிளை வாய்க்கால்கள் என்பன இன்னமும் புனரமைக்கப்படாத நிலையிலேயே உள்ளன.

இதனால் மீள்குடியமர்ந்த மக்களால் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் போதிய நீரின்றி அழியும் நிலையில் உள்ளன. குளத்தில் போதியளவு நீரிருந்தும் இந்தப் பரிதாபகரமான நிலை தோன்றியுள்ளது.

மேலும் போரினால் அழிந்த பாடசாலைக் கட்டடங்கள் பல இன்னமும் சேதமடைந்த நிலையிலேயே உள்ளன. இதனால் மாணவர்களின் கல்வி நிலையில் பெரும் பாதிப்புக்கள் தோன்றியுள்ளன. இனிவரும் மழை காலத்தில் இத்தகையவர்களின் நிலைமை மோசமாகவே மாறக்கூடிய அபாயநிலை தோன்றியுள்ளது.

வீதிகளைப் பொறுத்தவரை சொல்லவே தேவையில்லை. புனரமைக்கப்பட்ட உள்வீதிகள் கூட கற்கள் எல்லாம் சிதைவடைந்து பரிதாபமாகக் காட்சியளிக்கின்றன. பிரதான வீதிகள் கூட கிரவல் இடப்பட்டே புனரமைக்கப்பட்டுள்ளன. மழைகாலம் ஆரம்பிக்கும்போது சேறு சகதிக்குள் மக்கள் அவலப்பட வேண்டிய நிலையே உருவாகவுள்ளது.

திட்டங்களை அறிவிக்கும் அதிகாரிகள் அவற்றை உரிய முறையில் நிறைவேற்றித்தர வேண்டுமென்பதே இங்கு வாழும் மக்களின் கோரிக்கையாகும். (க-500)

## முடிவு திகதி நீடிப்பு

வவுனியா, ஜூலை 30

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தினால் நடத்தப்படும் நான்காவது ஆராய்ச்சி அமர்வுக்கான ஆய்வுக் கட்டுரைகளை ஓகஸ்ட் 8 ஆம் திகதி வரை அனுப்பி வைக்கலாம் என இந்த நிகழ்வின் இணைப்பாளர் கந்தையா ஸ்ரீகணேசன் அறிவித்துள்ளார்.

முன்னர் முடிவு திகதி ஜூலை 25 ஆம் திகதியெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. (க-421)

## தங்கத்துரை, குட்டிமணிக்கு மன்னாரில் நினைவஞ்சலி

*மன்னார், ஜூலை 30*

*மன்னாரில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஆரம்ப காலத் தலைவரான தங்கத்துரை மற்றும் குட்டிமணி ஆகியோருக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இவர்கள் இருவரும் 1983 ஜூலை மாதம் 25, 27 ஆம் திகதிகளில் கொழும்பு வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்டனர்.*

*இதன் 28 ஆவது நினைவஞ்சலி தினமே நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் மாவட்ட ரெலோ அலுவலகத்தில் நினைவு கூரப்பட்டது.*

*இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ இயக்கத் தலைவருமாகிய செல்வம் அடைக்கலநாதன் இருவரினதும் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.*

*இதில் ரெலோ இயக்கத்தின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் ஆர். பற்றிக் வினோ உட்பட உறுப்பினர்கள் பலர் கலந்து நினைவு அஞ்சலி செலுத்தினர்.* (க-601)

# அரச வனத்தில் மரங்களை வெட்டியோர் விசேட பொலிஸ் படைப்பிரிவால் கைது

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சியில் அமைந்துள்ள அரச வனத்தில் உள்ள மரங்களை அனுமதியின்றிச் சட்ட விரோதமான முறையில் வெட்டிக் கொண்டிருந்த நால்வர் விசேட பொலிஸ் படைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள முறிப்பு ஊற்றுப்புலம் அரசவனத்தில் சந்தேக நபர்கள் மரங்களை வெட்டிக் கொண்டிருந்தபோதே கையும் மெய்யுமாகக் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் பெருந்தொகையான மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் இவர்கள் வசமிருந்த நான்கு இயந்திர அறுவை வாள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நால்வரில் இருவர் கொக்காவில் பிரதேசத்தையும் இருவர் ஊற்றுப்புலம் பிரதேசத்தையும் சேர்ந்தவர்களாவர்.

இவர்களால் அரிந்து அடுக்கி வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான பாலை, தீராந்திகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

முறிப்பு ஊற்றுப்புலம் அரச வனத்தில் சட்டவிரோதமான முறையில் மரங்கள் தறிக்கப்படுவதாகக் கிடைத்த தகவலொன்றின் பிரகாரம் பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் கைப்பற்றப்பட்ட மரங்கள், தீராந்திகளுடன் நீதிமன்றச் செயற்பாடுகளுக்காகக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப சுகாதார நிலையம் புனரமைக்கப்படாததால் தாய் சேய் போசாக்குத் திட்டங்களுக்குப் பாதிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 30

முல்லைத்தீவு, பாண்டியன் குளம் பகுதியில் இயங்கி வந்த ஆரம்ப சுகாதார நிலையம் இன்னமும் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதால் தாய் சேய் போசாக்குத் திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த கால யுத்தம் மற்றும் இடப்பெயர்வு காரணமாக முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பகுதியில் அமைந்திருந்த ஆரம்ப சுகாதார நிலையமும் அதனுடன் இணைந்த மருத்துவ மாது விடுதியும் முற்றாக அழிக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

**மாதாந்தம் நடைபெறும் தாய் சேய் போசாக்கு மற்றும் கர்ப்பவதிகளின் சிகிச்சைகள் பெரும் சிரமத்தின் மத்தியில் நடைபெறுகின்றன.**

இதனால் தற்போது பாண்டியன்குளம் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் தாய் சேய் போசாக்கு நலத்திட்டங்களில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாதாந்தம் நடைபெறும் தாய் சேய் போசாக்கு மற்றும் கர்ப்பவதிகளின் சிகிச்சைகள் என்பன பெரும் சிரமங்களின் மத்தியில் நடைபெற்று வருகின்றன.

இவை தற்போது மாதாந்தம் மரநிழல்களிலும் தனியார் வீடுகளிலும் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உரிய அதிகாரிகள் இனியும் தாமதம் செய்யாது ஆரம்ப சுகாதார நிலையத்தைப் புனரமைத்து வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## முன்னாள் செஞ்சிலுவை அதிகாரி வவுனியாவில் விபத்தில் மரணம்

வவுனியா, ஜூலை 30

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி விபத்தில் மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறித்த முன்னாள் நிறைவேற்று அதிகாரியான எஸ். சிவபாதசுந்தரம் வவுனியா பிரதான வீதியில் பேருந்திலிருந்து இறங்கிச் சென்று கொண்டிருந்தபோது வாகனமொன்று இவரை மோதியுள்ளது.

இதனால் மயக்கமடைந்த இவர் உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

ஆனால் சிகிச்சைகள் பயனின்றி நேற்று அதிகாலை இவர் மரணமானார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (க-421)

## இரத்தினபுரத்தில் 3 வீடுகளில் திருட்டு

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி இரத்தினபுரத்தில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் நான்கு வீடுகளுக்குள் திருடர்கள் புகுந்துள்ளனர். மூன்று வீடுகளில் திருடியவர்கள் பின்னர் அங்கிருந்த தமக்குத் தேவையற்ற பொருள்களை வீதியில் எறிந்து விட்டுச் சென்றுள்ளனர்.

மேலும் ஒரு வீட்டில் படுத்திருந்த பெண்ணின் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை திருடன் ஒருவன் அறுக்க முற்பட்டபோது அந்தப் பெண் கூச்சலிடவே அவன் வெளியே தப்பி ஓடிவிட்டான்.

காலையில் வீதிகளில் வீசப்பட்டிருந்த தமது பொருள்கள் மற்றும் ஆவணங்களைப் பறிகொடுத்தவர்கள் அவற்றைச் சேகரிப்பதைக் காணமுடிந்தது.

இரத்தினபுரத்தில் திருட்டுச் சம்பவங்கள் இதுவரை இடம்பெறவில்லையெனவும் தெரிய வருகின்றது.

இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்த கையோடு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை இரத்தினபுரம் மக்களைப் பீதியில் ஆழ்த்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க)

## வெற்றிச் சான்றிதழ்...




வணிகத்துக்கு முக்கியத்துவம்: கிளிநொச்சி, திருவையாறு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வணிக விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற மாணவன் ஒருவருக்கு பாடசாலையின் அதிபர் க.மதுரநாயகம் வெற்றிச் சான்றிதழ் வழங்குகின்றார். (405)

## கொள்ளைச் சம்பவம்; 6 சந்தேக நபர்கள் கைது

மன்னார், ஜூலை 30

மட்டக்களப்பு, புதூர் பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 6 பேரை மன்னார் பொலிஸார் நேற்று முன்தினம் மதியம் மன்னாரில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து கைது செய்துள்ளனர்.

மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த 6 பேரும் முப்படையினரின் உதவியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார் மூர் வீதியில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான விடுதியில் தங்கியிருந்த போது குறித்த 6 கொள்ளையர்களும் கடற்படை, இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் உதவியுடன் கைது செய்யப் பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் மேலதிக விசாரணைக்காகக் குற்றப்புலனாய்வுப் பிரிவால் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். குறித்த 6 கொள்ளையர்களும் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் இந்தியாவுக்கு தப்பிச் செல்லும் நோக்குடன் மன்னார் வந்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது. (க-601)

## கசிப்பு உற்பத்தி, விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு தண்டம்

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சி, தருமபுரம், விசுவமடு ஆகிய பகுதிகளில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டவர்களிடமிருந்து சுமார் எழுபதாயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, தருமபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படும் சுமார் பத்தாயிரத்து ஐநூறு மில்லி லீற்றர் கோடாவை வைத்திருந்த ஒருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 26 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த நபருக்குச் சுமார் அறுபதாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது. தண்டப் பணம் செலுத்தத் தவறின் ஆறுமாத கால சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை விசுவமடுப் பகுதியில் 750 மில்லிலீற்றர் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படும் கோடாவை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

குறித்த நபருக்கு சுமார் பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது. இதனைச் செலுத்தத் தவறின் இருமாத சாதாரண சிறைத் தண்டனை வழங்கப்படும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. (க-6)

## பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்து

மன்னார், ஜூலை 30

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள இரண்டாம் கட்டைச் சந்தியில் பேருந்து ஒன்றும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசரப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு 7.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மன்னாரில் இருந்து குறித்த வீதியூடாகச் சென்ற இலங்கை அரச போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்தும், அந்த வீதியூடாக மன்னாரை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களுமே நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரது கால் ஒன்று முறிந்துள்ளதோடு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பஸ் சாரதியை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் பஸ் சாரதியும் மதுபோதையில் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-601)

# மன்னார் கல்வி வலய சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள்

மன்னார், ஜூலை 30

மன்னார் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டி முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அவை வருமாறு:-

**பிரிவு - 1 தரம் 6**

முதலாமிடம் - ஜெ.சரோமிக்கா (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - இ.சான்டிக்கா (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் - நா.சரணியா (சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி).

**தரம் 7**

முதலாமிடம் - சி.துவாரகா (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), இரண்டாமிடங்கள் - ஏ.ஜெரோமிலோகு (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), ரி.திவாகர் (புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி)

**தரம் 8**

முதலாமிடங்கள் - ஏ.அருண் கிருபா குருஸ் (புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி), வி.தர்மிதா (சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் - கி.ஜெகப்பிரியன் (சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி).

**தரம் 9**

முதலாமிடம் - செ.அகிலன் (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - ரே.புஸ்ரீனா (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் பி.பூவிழி (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி).

**தரம் 10**

முதலாமிடம் - ம.சலோமி (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் எச்.ஆன் பியாந்தி (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), மூன்றாமிடம் ஜே.ஆன்சாளினி பீரீஸ் (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி).

**தரம் -11**

முதலாமிடம் - வி.றொமலின் குருஸ் (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), இரண்டாமிடம் - த.பாலசங்கர் [?] (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் சு.கிருஜன் (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி).

**தரம் - 12, 13**

முதலாமிடம் - ம.அபிநயா (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - மு.யோகலட்சுமி (சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), மூன்றாமிடம் - எஸ்.லக்ஸனா (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி).

**பிரிவு - 2 தரம் 6**

முதலாமிடம் - அ.நிரூசன் குலாஸ் (புனித ஆனாள் ம.ம.வி), இரண்டாமிடம் - வெ.மேரிதிரேஸ் லெம்பேட் (புனித ஆனாள் ம.ம.வி), மூன்றாமிடங்கள் - சா.கி.கிளன்சன் மிராண்டா (பற்றிமா ம.ம.வி), எம்.எவ்.மஸ்லா (புத்/றிசாட் பதியுதீன் ம.வி).

**தரம் 7**

முதலாமிடம் - எம்.ஆர்.எப்.றிவ்வா (புத்/றிசாட் பதியுதீன் ம.வி), இரண்டாமிடம் எ.அக்ரா (புத்/றிசாட் பதியுதீன் ம.வி), மூன்றாமிடம் - பி.மெக்சுவல் (புனித ஆனாள் ம.ம.வி)

**தரம் 8**

முதலாமிடம் - எம்.வை.சராப் (புத்/றிசாட் பதியுதீன் ம.வி), இரண்டாமிடம் எ.ஸிறீன் (புத்/றிசாட் பதியுதீன் ம.வி), மூன்றாமிடம் இ.றியோடின் கிறிஸ்ரலன் குருஸ் (புனித ஆனாள் ம.ம.வி). (தொடரும்) (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா



**மேடம்:**
சவாலில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்யோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். முயற்சிகள் பலிதமாகும் நாள்.



**இடபம்:**
கடந்த இரண்டு நாள்களாக கணவன் மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். பணவரவு திருப்தி தரும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். முழுமையடையாத நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.



**மிதுனம்:**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் மனஉளைச்சல் ஏற்படும். குடும்பத்தில் பல விடயங்களையும் நீங்கள் பார்க்க வேண்டி வரும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் மிகுதிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் அதி காரிகளுடன் பொறாமை தொடர்பான பிரச்சினை வந்து நீங்கும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.



**கடகம்:**
மனதைப் பாதித்த சில விடயங்களை மறக்க முடியாமல் தவிக்கலாம். நீங்கள் நல்லது செய்ய முற்பட்டும், சிலர் உங்களை தவறாகப் புரிந்து கொள்ளலாம். வேலையாள்கள் கடனுதவி, பண உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம்.



**சிங்கம்:**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோர் ஒத்துழைப்பார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். பள்ளிப் பருவ உறவுகளை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். சிறப்பான நாள்.



**கன்னி:**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உறவினர்கள், நண்பர்களால் ஆதாயம் உண்டு. நம்பிக்கைக் குரியவர்களை ஆலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். மதிப்புக் கூடும் நாள்.



**துலாம்:**
கடந்த இரண்டு நாள்களாக இருந்த சோர்வு, சலிப்பு, கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். நேர்மறை எண்ணங்கள் தோன்றும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். திடீர் திருப்பம் ஏற்படும் நாள்.



**விருச்சிகம்:**
செலவுகள் அதிகமாகும். கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண் டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப் படுவீர் கள். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.



**தனுசு:**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை, ஆபரணம் சேரும். தாயார் ஆதரித்து பேசுவார். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.



**மகரம்:**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர்கள், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியாகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.



**கும்பம்:**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் வருங்காலம் குறித்து யோசிப்பீர்கள். சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். கனவு நனவாகும் நாள்.



**மீனம்:**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். கலைப் பொருள்கள் வாங்குவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் அதிரடிச் சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

# தமிழ் ம அரசுக் புகட்டிய பாடம்

## அரசியல் உரிமைகளுக் ஆசை வார்த்தைகள்

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தல சரவணமுத்து ஆங்கில பத்திரிகை ஒன்றில் எழுத**

**2011**ஆம் ஆண்டில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான இரண்டாம் கட்டத் தேர்தலானது வடக்கு தெற்கின் ஒரு பிரிவினைத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. வடக்கு, கிழக்குக்கு அப்பால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சௌகரியமான வெற்றி பெற்றிருக்கும் நிலையில் ஏனைய பகுதிகளில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெரும்பான்மையான உள்ளூராட்சி சபைகளை வெற்றிகொண்டுள்ளது. அரசியல் நெளிவு, சுழிவுகளின் போக்கை எடுத்துக் காட்டுவதால் இந்த முடிவுகள் பற்றி சகல அரசியல் கட்சிகளுக்கும் ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுனை ஆகிய இரண்டும் உள்சோதனைகளையும் மூலோபாயங்களையும் ஆழமாக மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளன. இவை இரண்டும் மிகக் கவலையளிக்கும் விதத்தில் பின்னடைவை சந்தித்துள்ளன. பொதுவில் உள்ளூராட்சி சபைகள் ஆட்சியிலிருப்ப வர்களுக்கே வெற்றியாக அமைவது வழக்கம் என்று இவர்கள் சொல்லிக்கொள்ளக் கூடும். ஆனால் அரச பிரசாரங்களை எதிர்த்துப் போராடி சாதனை புரிவதற்கான விடயங்கள் நிறையவே இருந்துள்ளன. ஊழல், நிதிமோசடிகள் போன்றவை திருப்பித் தாக்குதலுக்குரியவையாக பயன்படுத்தப் பட்டிருக்கலாம். இந்தத் தேர்தலில் அழிக்கப்பட்டுள்ள தீர்ப்பை இவர்கள் உதாசீனம் செய்வார்களானால் வரவிருக்கும் மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளுக்கான தேர்தல்களில் இவர்கள் அரசியல் கட்சிகள் என்று சொல்லிக்கொள்வதற்கே லாயக்கற்றவர்களாகிவிடநேரும்.

போருக்குப் பின்னரான சூழ்நிலையில் நல்லிணக்கத்துக்கான முயற்சிகள் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவம் போன்றவற்றில் அரசு காட்டிய அக்கறை - ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை மற்றும் சனல்-4 ஆவண காட்சிக்கு மத்தியில் வடக்கு, கிழக்கில் வெளியான தேர்தல் முடிவுகள் நிச்சயமாக ஆட்சியாளர்களுக்கு மூக்குடைபடும் கண்டனமாகவே இருந்துள்ளது. அதன் பேச்சுக்களும் பிரசாரங்களும் பயனற்றுப் போய்விட்டன. கடைசிக் கட்டத்தில் அவர்கள் வாக்காளர்களுக்கு வழங்கியவைகளாலும் பயனற்று போய்விட்டது. அது அவர்களுக்கு வழக்கப்பட்ட ஒரு செய்தியென்று கூறுவதைவிட ஒரு தூது என்று கூறுவது பொருத்தமாகவிருக்கும். இந்த பிரசார வேலைகள் இன்னும் சிறிது நாள்கள் நீடித்திருக்குமானால் முழு நாட்டையும் ஆட்சியாளர்கள் இழந்திருப்பார்கள் என்று தமிழர் கூட்டமைப்பை சாராத ஒருவர் கூறியது நினைவுக்கு வருகிறது.

சொல்லப்போனால் மக்கள் தம் கருத்தை கூறிவிட்டார்கள். வடக்கு கிழக்கில் அவர்கள் தமது அரசியல் உரிமைகளை பொருளாதார மற்றும் அபிவிருத்திகளுக்காக விட்டுக்கொடுத்துவிடவில்லை. நிபுணர் குழு அறிக்கையும் சனல்-4 காணொளியும் தங்கள் பங்கை செய்துள்ளன. இந்த நிலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசியல் பலத்தைக் காட்டுவதற்கான காரணம் தேவைப்பட்டது. எந்தவொரு பேச்சில் ஈடுபடுவதனாலும் எந்தவொரு தீர்வில் இறங்குவதானாலும் இது அவர்களுக்குஅவசியமாகும்.

இந்தச் செய்திக்கு செவிமடுக்கவேண்டியது ஆட்சியாளரின் கடமை. இல்லையெனில் அமைதி என்பது எட்டாக்கனியாகிவிடும். நல்லிணக்கத்துக்கான செயற்பாடு ஒன்று நடைபெற்று வருவதாக அரசு தெரிவித்துவந்துள்ளது.

தேர்தல் காலத்தில் வழக்கமான அரச வளங்கள் பயன்படுத்தப்படுவது அரசியல் எதிரிகள் மீது அச்சுறுத்தல்கள் போன்ற குற்றச்சாட்டுகள் போக தேர்தல் மிகவும் இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியில் நடத்தப்பட்டுள்ளது. சில இடங்களில் வாக்குச் சீட்டுகள் கணிசமான அளவில் அபகரிக்கப் பட்டமை பற்றிய தகவல்களும் உண்டு. இருந்தும் மக்கள் வாக்காளிப்புக்குச் சென்று அரசுக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

தடிக்குமுன்னே கரட் கிழங்கு நீட்டப்படுவது

> **தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஓர் எச்சரிக்கை வார்த்தை இருக்கிறது. இந்தத் தேர்தல் வெற்றியானது வாக்கு வங்கி இருக்கிறது என்பதற்காக திருப்தியுடன் இருந்து விடுவதற்கோ பிழவாதமான நிலைப்பாடுகளை வளர்த்துக் கொள்ளவோ இடமளிப்பதாய் இருத்தலாகாது. இன்றுள்ள கள நிலைமைகளுக்கு ஏற்றவாறு மக்கள் தீர்ப்பை வைத்துச் செயற்பட வேண்டும்.**




போன்று பொருளாதார அபிவிருத்திக்கான வாக்குறுதிகளுக்குப் பின்னால் அச்சுறுத்தல்களும் பயமுறுத்தல்களும் இருக்கவே செய்தன. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி தனது சொந்த புகழையும் கூட இந்தப் பிரசாரத்திலே பயன்படுத்தினார்.அதுவும் ஓர் உள்ளூர் கிராமிய தேர்தல் அரங்கில் என்பதை நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

**வடக்கு, கிழக்கு முடிவுகளின் செய்தி**

நிச்சயமாக வடக்கு, கிழக்குத் தேர்தல் முடிவுகளின் செய்தியானது, பொருளாதார அபிவிருத்திகளோ அல்லது அவ்வாறான வேறு வாக்குறுதிகளோ அரசியல் உரிமைகளுக்கு மாற்றீடாக இருக்கமுடியாது. அவைகளை விட்டுக்கொடுக்க முடியாது என்பதே.


ஜனநாயகம் மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்களில் மட்டுமல்ல அரசியல் தீர்வொன்றைக் காண்பது என்பதில் உண்மையான அர்ப்பணிப்புக் காணப்படுகிறதா என்பதிலும் கூட ஒருவித குறைபாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ழ் மக்கள்
# க்கு
# ழயுள்ள
# ம்

கைளுக்கு 'அபிவிருத்தி'
தைகள் மாற்றீடாக

லையத்தின் தலைவர் கலாநிதி பாக்கியசோதி
 ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையின் தமிழ் வடிவம்






வாக்குறுதி
முறுத்தல்
அதிகார
யும் கூட
துவும் ஓர்
 நினைவு

ய்தி
ல் முடிவு
விருத்தி
திகளோ
முடியாது.
ன்பதே.
விடயங்
காண்பது
ணப்படு
பாடுகள்

இருப்பதை உணரமுடிகிறது. அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்கு ஜனாதிபதி தமது நல்நோக்க தீர்வுச் சிந்தனையுடன் செயல்பட முடியாது. ஏனென்றால் ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி போன்றவை அவ்வாறு அவரை செயற்பட விடமாட்டா என்று கூறப்படுகிறது. இந்தக் கருத்தில் எனக்கு ஒருபோதும் உடன்பாடு இருந்ததில்லை. அப்படியான தீர்வொன்றைப்பற்றி அவர்களுக்கு அவர் தெரிவித்தாலும் கூட மீண்டும் இன மோதலுக்குத்தான் நாட்டை இட்டுச் செல்லும் என்கிறார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யானது வடக்கு கிழக்குக்கு வெளியில் தேர்தலில் வெற்றிபெற்றிருப்பது அவர்களின் நிலைப்பாட்டை எடுத்துக்காட்டுவதாய் உள்ளது. எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் ஓர் அர்த்தமுள்ள தீர்வை செய்துகொள்ள ஆட்சியாளர்கள் முயல்வார்களாகில் அந்த ஆதரவை இழக்க நேரிடலாம் என்றும் விவாதிக்கப்படலாம். இம்மாதிரியான ஒருகட்டத்தில் தான் தெற்கு மக்கள் மத்தியில் ஜனாதிபதியானவர் ஒரு தூதுவர் என்ற வகையில் திறமையுடன் செயல்பட வேண்டியிருக்கும். துணிச்சல், ராஜதந்திரம் ஆகியவை தத்துவநோக்கு மற்றும் குறுகிய அரசியல் வெற்றிக்கு மேலாகத் தேவைப்படும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் ஓர் எச்சரிக்கை வார்த்தை இருக்கிறது. இந்தத் தேர்தல் வெற்றியானது வாக்கு வங்கி இருக்கிறது என்பதற்காக திருப்தியுடன் இருந்து விடுவதற்கோ பிடிவாதமான நிலைப்பாடுகளை வளர்த்துக் கொள்ளவோ இடமளிப்பதாய் இருத்தலாகாது. இன்றுள்ள கள நிலைமைகளுக்கு ஏற்றவாறு மக்கள் தீர்ப்பை வைத்துச் செயற்பட வேண்டும்.

வெற்றியை வைத்துக் கொண்டு கொள்கை வடிவமைப்பை வெளியிட வேண்டிய கால கட்டம் தோன்றியுள்ளது. அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு அது உதவியாக இருக்கும் அத்துடன் தமிழ் அரசியல் சமூகத்தை ஒன்றிணைக்கும் புலம்பெயர்ந்த தமிழர்குழுக்கள் இன்னமும் பிரிவைச் சிந்தனையாட்பட்டவர்களாகவே இருந்துவருகிறார் கள். அவர்கள் இந்த முடிவுகளை கவனத்தில் கொண்டு, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழரின் அரசியல் அபிலாசைகளைக் கொண்ட திட்டம் ஒன்றை தீர்மானிக்க இடமளிக்க வேண்டும். பிரிவினைக்கு ஆதரவில்லாத புலம் பெயர் தமிழ் அமைப்புகள் இதற்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும்.

**தமிழில்: கோகுலன்**

மீள்குடியேற்றம் அபிவிருத்தி,மற்றும் மீள் இணக்கம் ஆகியவற்றுக்கான தீர்ப்பினை முதல் முறையாக இப்பகுதிமக்கள் வழங்குவதற்கான சந்தர்ப்பத்தை உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் வழங்கியிருந்தன. பார்ப்பதற்கு எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் உணர்வுகளைப் பொறுத்தவரை மோசமாகவே உள்ளன என்றவாறு அப்பகுதியிலுள்ள ஒருவர் கூறியதை நான் முன்னொரு சமயம் குறிப்பிட்டிருந்தேன்.அங்குள்ள மக்களின் தீர்ப்பு இதுவாகத்தான் உள்ளது, கவலையும் துரதிஷ்டமும் தருவதாக. ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் தமது நடவடிக்கைகளை ஒன்றுபடுத்தி தேச ஒற்றுமை, மீள் நல்லிணக்கம் ஆகியவை தொடர்பாக செயற்பட வேண்டிய காலம் உருவாகியுள்ளது. தேவானந்தாவும் அவர் [illegible] டிய நேரம் உதயமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் செய்யும் பெரிய திருப்பணி



ராகு காலத்தில் துர்க்கைக்கு எலுமிச்சை விளக்கேற்றி வழிபடும் பெண்களுக்கு ஒரு வேண்டுகோள்!

விளக்கை மட்டும் கோயிலுக்குள் ஏற்றுங்கள். எலுமிச்சைச் சாற்றை துர்க்கை சந்நிதியில் தரையில் பிழிந்து தரையைப் பழுதாக்காதீர் கள். சந்நிதியைச் சமநிலைப் படுத்தி தரையாக்கி திருப்பணி செய்து வைத்தால் , அமிலத் தன்மையுடைய எலுமிச்சம் சாற்றை அதில் பிழிந்து தரையை அரிக்கச் செய்யலாமா? கிட்டத்தட்ட அது கோயிலை இடிக்கும் தவறுதான்!

தன்னுடைய பெண்களுக்குத் திருமணம் ஆகவில்லையே என்று பெற்ற தாய்க்கு இருக்கும் கவலையை விட துர்க்கைக்குத்தான் அதிக கவலை. ஏன் தெரியுமா? திருமணம் நடக்கும் வரைக்கும் இப்படியே விளக்கேற்றி வந்தால் எலுமிச்சைச் சாற்றின் அமிலத் தன்மையால் கோயிலில் ஒரு சுரங்கப் பாதையே உண்டாகிவிடக் கூடும்!

அதனால் பெண் பார்த்துவிட்டுப் போகும் மாப்பிள்ளைப் பையனிடம் பெண்ணைப் பிடித்திருக்கிறதா? என்று கேட்டால், மாப்பிள்ளை 'ஆமாம்' என்று தலையாட்டுகிறாரோ இல்லையோ துர்க்கையே அவனுக்கள் புகுந்து தலையை ஆட்டி வைத்துவிடுவாள். கோயில் தரையைக் காப்பாற்ற வேண்டாமா?

அந்தப் பெண்ணுக்குத் திருமணம் நடந்ததும் பெற்ற தாயை விடத் துர்க்கைக்குத்தான் சந்தோஷம் அதிகம். "அப்பாடா! இனி மேல் எலுமிச்சையோடு கோயிலுக்கு வரமாட்டாள். கோயில் தரைக்கு ஆபத்தில்லை" என்று துர்க்கை மகிழ்ச்சியாகச் சிரிக்கும்போதே, அவள் தங்கை எலுமிச்சையுடன் வந்து விடுகிறாள். துர்க்கைக்கு மறுபடியும் கலவரம்தான்.

சரி, நகைச்சுவை போதும், விஷயத்துக்கு வருகிறேன். எலுமிச்சைச் சாற்றைக் கிண்ணத்தில் பிழியுங்கள். அல்லது வெளியிலேயே பிழிந்து விட்டுத் தோலை மட்டும் உள்ளே கொண்டு போங்கள். "பக்தி, வழிபாடு என்ற பெயரில் கோயிலில் ஒரு சுரங்கப்பாதையையே தோண்டிவி டாதீர்கள்.

அதேமாதிரி சனீஸ்வரனுக்கு எண்ணெய் ஊற்றிவிட்டுக் கோயில் சுவரில் தடவாதீர்கள். சனீஸ்வரர் பலமாக உங்களைப் பிடித்துக் கொள்வார்.கோயில் சுவரைக் கெடுத்த பாவத்துக்கும் சேர்த்துக் கஷ்டம் தருவார். எவ்வளவு செலவு செய்து கோயிலில் திருப்பணிகள் செய்கிறார்கள். நாம் பணம் கொடுக்கா விட்டாலும் பரவாயில்லை. கோயிலை அழுக்காக்காமல் திரும்புவதே பெரிய திருப்பணி அல்லவா?

பெருமாள் கோயிலில் பொங்கலை அருந்திவிட்டு எண்ணெய்ப் பசையைத் தூணிலேயே தடவலாமா? மறுபடியும் தூணைப் பிளந்து கொண்டு நரசிம்மர் வருவார். பக்த பிரகலாதனைக் காப்பாற்ற அல்ல. பொங்கல் நாற்றத்தை எவ்வளவு நாள் பொறுப்பார்.

நெய்விளக்கேற்றி, எலுமிச்சை விளக்கேற்றித்தான் அம்மன் அருளைப் பெறவேண்டும் என்றில்லை. நம்பிக்கையுடன் அம்பிகையின் மந்திரங்களை உச்சரித்தாலே போதும். நற்பயன் கிடைக்கும்.

ஒரு மருத்துவமனையில் ஒரே நோய் தாக்கிய நோயாளிகளை இரு பிரிவாக்கி வைத்தியர்கள் சிகிச்சை அளித்தனர். ஒரே மருந்துதான் அவர்களுக்கு கொடுக்கப் பட்டது. என்றாலும் ஒரு குழுவினரிடம் மருந்தின் மகத்துவம், வலிமை பற்றி அடிக்கடி விளக்கமாகச் சொல்லப்பட்டது. அந்தக்குழு முழுமையாக விரைவாகக் குணமடைந்தது.

மற்றக் குழுவிடம் தக்கமருந்து கிடைக்காததால் கிடைத்த மருந்தைக் கொண்டு வைத்தியம் செய்வதாகச் சொல்லப்பட்டது. இதனால் குணம் அடைவதில் தாமதம் ஏற்பட்டது. இதற்கு நம்பிக்கைக் குறைவே காரணம். இதைப்போன்றே நம்பிக்கையுடன் சொல்லப்படுகின்ற மந்திரங்களாலும் பலன் அடைய முடியும்.

ஒவ்வொரு பெண்ணும் கோயிலின் புதுமை கெடாமல் பாதுகாப்பது புதிய கோயிலைக் கட்டுவதற்குச் சமம் என்று புரிந்து கொள்ளுதல் அவசியம். இதுவே பெண்கள் செய்யும் பெரிய திருப்பணி.

சுகி. சிவம்

**இறைச்சிக் கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

**வீடுவாடகைக்கு** யாழ்ப்பாணம், இருபாலை புதிய செம்மணி வீதியில் சகல வளங்களுடன்-கல்வீடும் வளவும் உடன் வாடகைக்கு வழங்கப்படும்- தரகர் தேவையில்லை.
0772824852

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

1 கிழமை, 2கிழமை, 3கிழமை 4கிழமை ஊர் கலவன் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
விவரங்களுக்கு :-
கிருஷ்ணா பாம்
S.கிருஷ்ணகுமார்,மானிப்பாய்.
தொடர்பு:-0772338084

# வளன்புரம் வீதியை புனரமைக்க கோரிக்கை

கொழும்புத்துறை,ஜூலை30

கொழும்புத்துறை வளன்புரம் சென். ஜோசப் வீதி நீண்டகாலமாகத் திருத்தம் செய்யப்படாத நிலையில் மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது.

இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில் இந்த வீதியின் பாவனை அதிகரித்துள்ளது.

இந்த வீதியைப் புனரமைப்பதற்கு யாழ்.மாநகரசபையில் திட்டமுன் வரைபுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

இந்தப் பகுதியில் புனித சவேரியார் குருமடம், சென்.ஜோசப் வித்தியாலயம் என்பன அமைந் துள்ளன.

இந்த வீதியூடான போக்குவரத்தை இலகுபடுத் தும்வகையில் விரைவில் புனரமைத்து உதவுமாறு இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(ம-135)

# நாகபாம்பு தீண்டியது

தென்மராட்சி, ஜூலை30

ஆலய முன்றிலில் அமர்ந்திருந்தவர் நாக பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் கைதடி தெருவோரப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது.

ஆலயப் பணியாளரான கைதடி தெற்கைச் சேர்ந்த முருகேசு நாகேந்திரன் (வயது 45) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார்.

இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுவருகிறார். (ம-207)




சீட்டிழுப்பு இலக்கம் 771 திகதி 28-07-2011

வெற்றி எண்கள்

13 27 28 56 O (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 10,402,360/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 10,402,360/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 18 | 50,000/= | 900,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 325 | 1,000/= | 325,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 638 | 1,000/= | 638,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14878 | 60/= | 892,680/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7820 | 40/= | 312,800/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 194105 | 20/= | 3,882,100/= |
| ஆங்கில எழுத்து | 28086 | 20/= | 561,720/= |
| | | மொத்தம் ரூ. 7,912,300/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 700459531-2-22 |
| குருநாகல் | 700440094-7-47 |
| புத்தளம் | 700441161-3-23 |
| மாத்தறை | 700441982-8-38 |
| யாழ்ப்பாணம் | 700441551-3-43 |
| கம்பஹா | 700458601-7-37 |
| கொழும்பு | 700453443-0-30 |
| கேகாலை | 700451398-3-43 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,312,300/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 10,782,600/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஓகஸ்ட் 01 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7

Enriching Your Life
DEVELOPMENT LOTTERY

**பரத நிருத்திய அரங்கேற்றம்**

**அழைப்பு**



திரு.திருமதி அருளாளன் தம்பதியரின் புதல்வியும்
ஸ்ரீமதி குமுதினி ஸ்ரீகாந்தன் அவர்களின் மாணவியுமான
**செல்வி அஜந்தா அருளாளன்** அவர்களின்
பரத நிருத்திய அரங்கேற்றம் நிகழும் கர வருடம் ஆடிமாதம் 15ஆம் நாள் நாளை (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.
தலைவர்: பேராசிரியர் அ.சண்முகதாஸ்
பிரதம விருந்தினர்: பேராசிரியர் நா.சண்முகலிங்கன்
✱கலைஞர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை நாடும்:

Mr.&.Mrs.Arulalan,
34,Casemore Rd,
Toronto,Ontario, MIX 156 Canada.
web:lathudigital.weebly.com

திரு.திருமதி
தயானந்தன்,
166/3, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**முதலாம் ஆண்டு நினைவலைகள்**

அமரர்
இரத்தினசிங்கம் செல்லம்மா
திதி:அமாவாசை



தோற்றம் 19.07.1929
மறைவு 09.08.2010

ஓராண்டு ஆனதம்மா
ஆறிடுமோ எம் நெஞ்சம்
அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் கவர்ந்துவிட்டு
ஆடி அமாவாசையில் எமை விட்டுச்
சென்றதேனோ?
அழியாத நினைவுகளாய்
என்றும் நீங்கள் எம்
நெஞ்சில் வாழ்ந்திடுவீர்

குடும்பத்தினர்.
'சிவமஹால்', கற்பக்குணை,
கந்தரோடை, சுன்னாகம்.

காரைநகர் - பலகாடு

**அமரர் இராமலிங்கம் திருவாதிரை**

அவர்களின்



**உருவப்படத் திரை நீக்கமும் ஆத்ம சாந்தி வழிபாடும்**

இடம்: கணபதீஸ்வரக் குருக்கள் நூலகம், வியாவில்,காரைநகர்
காலம்: 30.07.2011 சனிக்கிழமை மு.ப. 10.30 மணி

தலைமையுரை: மகாராணி க.சோமசேகரம் ஜே.பி.
அறங்காவலர், வியாவில் ஐயனார் தேவஸ்தானம்

பிரதம விருந்தினர் உரை: திரு.ப.விக்னேஸ்வரன்
வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்

சிறப்பு விருந்தினர் உரை: செஞ்சொற்செல்வர் தேசபற்று
இரா.செல்வவடிவேல்

கௌரவ விருந்தினர் உரை: திரு.ந.கணேசமூர்த்தி (ஆசிரியர்)

**உருவப்படத் திரை நீக்கம்**

நன்றியுரை: கவிஞர் இ.குகதாசன்

அன்னாரின் ஆத்ம சாந்தி வழிபாட்டிலும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

**German, Swiss வகுப்புக்கள்**

தமிழ்மொழி பெயர்ப்புக்களுடன் நடைபெறுகின்றது Embassy யால் கேட்கப்படும் AL Certificate க்கு ஏற்றவாறு Book மற்றும் CD விளக்கங்களுடன்
10, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
0771604823

**வீடு விற்பனைக்கு**

இல.56, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற விலாசத்தில் அமைத்துள்ள 6 அறைகள், 2மலசலகூடம், ஒரு குளியலறை, கிணறு, சுற்றுமதிலுடன் கூடிய 3 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம்:-0774346417

**காணி விற்பனைக்குண்டு**

உரும்பிராயில் ஒஸ்கா வீதிக்கும் பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கும் இடையில் பலாலி வீதிக்கு சமீபமாக 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. T.P No. 0777031293

**ஓம் சக்தி ஜோதிட நிலையம்**

ஜோதிடர் - நரேந்திரன் சுவாமி
தொ.பே.: 0779759393
0756794959

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் ஜாதகம், கைரேகை, கம்பியூட்டர், ஜோதிடம் என்பன நல்ல முறையில் கூறுவார்.
சந்திக்கும் நேரம்: காலை 7 மணி பி.ப 7மணி
தொடர்பு: [illegible]
இல.452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**கோழிக் குஞ்சு விநியோகம்**

தரமான No.1 Prima புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் 04.08.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| ★ சூட்டிபாம் சென்ரர் | - 0778996085 |
| ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு | - 0776904590 |
| ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம் | - 0774656377 |
| ★ நல்லூர் பாம் சென்ரர், பருத்தித்துறை | -0771392593 |
| ★ நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி | - 0776225944 |

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். 021 222 6944

**திருமறைக் கலாமன்றம்**
**நாடகப் பயிலகம்**
**விண்ணப்பம் கோரல்**

எமது மன்றத்தின் நாடகப் பயிலகத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறியின் புதிய பிரிவில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெறவிரும்புபவர்களுக்கும் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக இந்தப் பயிற்சி நெறி அமையும். பயில விரும்புவோர் யாழ். திருமறைக்கலாமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி 12.08.2011 வெள்ளிக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2393

பிரதி இயக்குநர்,
திருமறைக் கலாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவிக்கப்படாத தமிழ் ஈழம்

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் அளித்த வெற்றி சொல்லும் அறிவிப்புகள் பல. இலங்கையில் தமிழர்களுக்குத் தமிழீழம் அளிக்கப்படா விட்டாலும், தமிழர்கள் வாழும் பகுதிகள் அறிவிக்கப்படாத தமிழீழமாகத்தான் நீடிக்கும். இதை யாராலும் மாற்றிவிட முடியாது என்பது அதில் முதன்மையானது.

தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் தினமணி நாளேடு 28-07-20 அன்றுவெளியிட்ட ஆசிரியர் தலையங்கத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளது. அதன் முழு விவரம் வருமாறு:

மக்களாட்சியில் வாக்குச் சீட்டுகள் மக்களின் மனச்சாட்சியாக இருக்கின்றன என்பதற்குஇலங்கை உள்ளூராட்சித் தேர்தல் மற்றொருமுறை சான்றாகி உள்ளது.

இலங்கை உள்ளூராட்சித் தேர்தலில், அந்தத் தீவு முழுவதிலும் 65 மாகாணங்களில் போட்டியிட்ட ராஜபக்ஷ சார்ந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மொத்தம் 45 இடங்களில் வெற்றி பெற்றிருந்தாலும், தமிழர்களின் வசிப்படமாகிய வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி யில் உள்ள 5 மாவட்டங்களில் 5 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான தமிழரசுக் கட்சி 20 இடங்களில் வெற்றிபெற்றிருப்பதும், புலிகள் இயக்கத்துக்குக் கொள்கையளவில் மாறுபட்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி 2 இடங்களில் வெற்றி பெற்றிருப்பதும், ராஜபட்ஷ மீதான கோபத்தை, இலங்கைத் தமிழர்கள் ஒட்டுமொத்தமாக உலகுக்கு அறிவித்துவிட்டார்கள் என்பதையே காட்டுகிறது.

தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குங்கள் என்று ராஜபக்ஷவுக்கு அறிவுரை கூறும் வகையில் ஒரு நிகழ்ச்சியில் பேசியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தன்னுடைய தகப்பனார் பண்டாரநாயக்க தலைமையிலான அரசு உள்பட அனைத்து அரசுகளுமே தமிழர்களின் கோரிக்கைகளை முறையாகப் பரிசீலித்து அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறியதால்தான் இந்தப் பிரச்சினை இப்படிப் பூதாகரமாக வளர்ந்து இலங்கையை 30 ஆண்டுகளுக்கு நெருக்கடியில் தள்ளியது என்று கூறியிருப்பது, இலங்கைவாழ் தமிழர்களின் பலத்தை யும் தமிழர் அரசியலையும் புரிந்துகொள்ளும் சூழலை இந்தத் தேர்தல் வெற்றி உருவாக்கியுள்ளது என்பதை உணர்த்துகிறது.

தமிழர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதால், நம் வலிமை குறைந்து விடாது. மாறாக, அவர்களது உழைப்பு, திறமை, அறிவாற்றல் என்பவற்றால் இலங்கைக்கு எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி ஏற்படும் என்று சந்திரிகா இன்று கூறுவதை, தமிழருக்கு ஆதரவு தெரிவித்துவரும் சிங்களவர்களும் கூறிவருகிறார்கள்.

அற்றை நாள் முதலாக இலங்கையின் வளர்ச்சி, தமிழர்கள் சார்ந்ததாகவே இருந்து வந்தது. தமிழரின் இந்த ஆற்றல் மீதும், அறிவுப் புலத்தின் மீதும் சிங்களவர்கள் கொண்ட பொறாமையின் விதைகள்தான் கடந்த 30 ஆண்டுகளாக சிங்களப் பேரினவாதக் கொள்கைக்கு இடமளித்து, இலங்கையின் பொருளாதாரத்தைச் சிதைத்தது. இப்போதுதான் அவர்களுக்குப் புரிகிறது, தமிழர்கள் நம்முடன் இருந்திருந்தால் பெரும் வளர்ச்சியைப் பெற்றிருப்போம் என்று!

இந்த வெற்றி சொல்லும் அறிவிப்புகள் பல. இலங்கையில் தமிழர்களுக்குத் தமிழீழம் அளிக்கப்படாவிட்டாலும், தமிழர்கள் வாழும் பகுதிகள் அறிவிக்கப்படாத தமிழீழமாகத்தான் நீடிக்கும். இதை யாராலும் மாற்றிவிட முடியாது என்பது அதில் முதன்மையானது.

இலங்கை அரசியலில் தமிழர்களின் பங்கு இல்லாமல், தமிழர்களைத் தவிர்த்துவிட்டு எந்தவோர் ஆட்சியாளரும் எதையும் செய்துவிட முடியாது. எந்தவொரு கட்சியும் இலங்கையில் முழுமையான ஆட்சி அதிகாரத்தைப் பெறவேண்டுமானால் தமிழர் ஆதரவு கட்டாயமாகத் தேவை.

அரசியல் சக்தியாக மாறும் முடிவை, தேர்தல் மூலம் ஆளும்கட்சிக்கு நெருக்கடிதரும் அரசியல் தீர்வை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்றுக் கொண்டிருந்தால் - தனது இறுக்கத்தைத் தளர்த்தி, நிலைப்பாட்டை மாற்றியமைத்துக் கொண்டிருந்தால் - ஒருவேளை பல இழப்புகளையும், பின்னடைவையும் தமிழீழப் போராளிகள் தவிர்த்திருக்கக் கூடும் என்கிற சிந்தனைக்கு இடமளித்திருக்கிறது இந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள். இலங்கைத் தமிழர் இன்று அரசியல் களத்தில் கொள்கையளவில் ஒன்றுபட்டு நின்றபோதிலும் அவர்களை வழிநடத்தப் பலமான இயக்கமோ, தலைமையோ இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறதே என்கிற ஆதங்கம் மேலெழுகிறது.

தமிழர் பகுதியில் சிங்களவர்களைக் குடியமர்த்தி, சிங்கள-தமிழ் கலப்பினத்தை உருவாக்கி, தமிழர் குரலை ஒடுக்கிவிட முடியும் என்கிற இலங்கை அரசின் எண்ணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் மூலம் மண் விழுந்திருக்கிறது என்பது திண்ணம். இருபது ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்டு, துன்பப்பட்டு மடிந்து மடிந்து ஒரு தஞ்சமும் இல்லாமல் மடியும் நிலைமைக்குத் தள்ளப்பட்டபோதும், மீண்டும் எழுந்து நிற்கும் தமிழர்கள் மத்தியில் ஊடுருவிகளாகக் குடியேற சிங்களவர்கள் இனிமேல் ஒரு முறைக்கு நான்கு முறை யோசிப்பார்கள். இனிமேல் சிங்களவர்களைக் குடியமர்த்தும் நடவடிக்கைகளைத் தொடர இலங்கை அரசும் துணிவு கொள்ளுமா என்பது கூடச் சந்தேகம்தான்.

இந்த வெற்றியை இலங்கையின் ஆளும்கட்சியோ அல்லது எதிர்க்கட்சியோ கூடத் தாங்கிக் கொள்ளாது. இந்த வெற்றியைச் சிதைப்பதற்குத் தமிழர் மத்தியில் புதிய புதிய கட்சிகளை உருவாக்கி, வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளும் வாய்ப்பும் அதிகம். இதற்காக எத்தனை கோடி கொடுத்தும், புதிய தமிழர் அமைப்புகளை உருவாக்கச் சிங்கள அமைப்புகள் உதவக்கூடும்.

இத்தனை காலம் சிந்திய ரத்தத்தின் நிறம் மாறாத மண்ணுக்காகவும், தாங்கள் இழக்க நேர்ந்த தமிழர் உயிர்களுக்காகவும், இப்போதும்கூட காணாமல் போனோர் பட்டியலில் உள்ள ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கருத்தில் கொண்டும், அந்த மண்ணில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சி மட்டுமே தனித்து நிற்கவும், அந்த அரசியல் பலத்தின் மூலம் இலங்கை வாழ் தமிழர்கள் தங்களது நியாயமான சம உரிமையைப் பெறவும் உறுதிபூண வேண்டும்.

இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை அளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குக் கோரிக்கை வைத்த கட்சிகளுக்குப் பின்னர் அதைப் பற்றி யோசிக்கவே நேரமில்லாதபடி எண்ணற்ற கவலைகள் இருக்கின்றன. எனவே அந்தக் கோரிக்கையைக் கைவிட்டுப் பதிலாக இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கையின் வடபகுதியில் குடியமரச் செய்து, தமிழர்களின் வாக்கு வங்கியை மேலும் வலுப்படுத்த முயற்சிப்பதைப் பற்றி ஏன் யோசிக்கக் கூடாது?

இலங்கையில் ஜனாதிபதி நேரடியாக வாக்குகள் மூலமே தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சிமுறை நடைமுறையில் இருக்கும் வரை, சிறுபான்மைத் தமிழர்களின் நலன் பேணப்படாது. மீண்டும் நாடாளுமன்ற ஆட்சிமுறைக்கு இலங்கையின் அரசியல் சட்டம் மாற்றப்பட்டால் மட்டுமே, தமிழர்களுக்கு மரியாதையும், ஆட்சியில் உரிய பங்கும், தமிழர்கள் வாழும் பகுதியில் வளர்ச்சியும் உறுதிப்படுத்தப்படும். அதற்கு யார் குரல் கொடுக்கப் போகிறார்கள் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி?

(உ)

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லையா சாரதாதேவி



தனங்கிளப்பைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கு, நெல்லியடி முருகன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லையா சாரதாதேவி 26.07.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் நல்லையாவின் அன்பு மனைவியும் கேதீஸ்வரனின் (லண்டன்) பாசமிகு தாயும் வதனகுமாரியின் அன்பு மாமியும் திசேந்தன், நிவேதன், தணிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கனகசபாவதி, விநாயகமூர்த்தி, தவமணி மற்றும் பத்மநாதன், ஞானபூபதி (லண்டன்), திருச்செந்தூர்ச்செல்வி(கனடா), சறோஜினிதேவி (லண்டன்), சற்குணானந்தன் (லண்டன்) சச்சிதானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்லாரை கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியடி முருகன் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை

தகவல்:செ.பத்மநாதன்
(அண்ணா)

மாபெரும் பிரமாண்டமான ஆடித் தள்ளுபடி

இன்றும் நாளையும் மட்டும்..!

சிறுவர் முதல் பெரியோர்வரை புத்தம் புதிய தெரிவுகளுக்கு.... அதிரடி விலையில்...

ஆடை உலகின் அரசன் சரவணா...!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகும் எளிமையும் நிறைந்த 'காத்தான் கூத்து'

## பாரம்பரியம் மாறாமல் படைத்த மாதனை இளைஞர்கள்



தூம்பளை, நெல்லண்டை அம்பாள் ஆலயத்தில் மாதனை இளைஞர்களின் முயற்சியால் கடந்த முதலாம் திகதி ''காத்தான் கூத்து'' என்று அறியப்படும் காத்தவராயனின் கதை மிகவும் சிறந்த முறையில் மேடையேற்றப்பட்டது.

மிக நீண்ட காலமாகவே மாதனைக் கலைஞர்கள் இந்தக் கூத்தையும், வேறுபல பாரம்பரியக் கலைகளையும் மேடையேற்றி வந்துள்ளனர். வியக்க வைக்கும் முறையில் மாதனை இளைஞர்களால் ஆடப்பட்ட இந்தக் கூத்து பல விடயங்களை எங்களுக்கு கூறுகிறது.

இது கூறும் முதலாவது விடயமாக அழகும், எளிமையும் நிறைந்த பாரம்பரியக் கலைகள் என்றைக்குமே மனிதரின் நெஞ்சை நிறைக்க வல்லவை என்பதாகும். ''காத்தான் கூத்து'' மிக அற்புதமாகக் கையாளப்படும் எளிமையான காலசைவுகளுடன் ஆடப்படும் ஒரு கலை வடிவமாகும். இந்த அசைவுகளை மெருகூட்ட கையசைவுகளும், தலையசைவுகளும் இடையிடையே வரும். எத்தனை முறை பார்த்தாலும் இந்த அசைவுகள் மனதைக் கவர்ந்திழுக்கும் தன்மை கொண்டவை.

இந்தக் கூத்தின் கதையும், சம்பவங்களும் சிக்கலற்றவை. காத்தலிங்கன் அல்லது காத்தவராயனின் பிறப்பின் பின்னணியிலுள்ள விடயங்களையும், வளர்ந்து வாலிபனான காத்தவராயன், தாயாகிய முத்துமாரியின் கடும் நிபந்தனைகளையெல்லாம் திருப்தி செய்து எவ்வாறு தன் மனம் கவர்ந்த ஆரியப்பூமாலை என்னும் பெண்ணை மணம் முடிக்கிறான் என்பதையுமே கதை கூறுகிறது.

பெரும்பாலான பாடல்கள் இலகுவான மெட்டிலமைந்த இருவரிக் கவிதைகளாகும். இந்தப் பாடல்கள், அவற்றின் எளிமையான வடிவத்தாலும் இனிமையான சந்தத்தாலும், கேட்டு எத்தனையோ நாள்களின் பின்னும் மனதைவிட்டு நீங்காமலிருக்கும் தன்மை கொண்டவை.

நம்பமுடியாத சம்பவங்களிருந்தாலும், எளிமையான வாழ்க்கை வாழ்ந்த எம் முன்னோர்களின் கள்ளங்கபடமற்ற மனங்களிலிருந்து தோன்றியவை என்பதால் அவை எல்லாம் இரசிக்கத் தக்கவையாகவே உள்ளன.

இரண்டாவதாக இது கூறும் விடயம் அழகும், எளிமையும் நிறைந்த பாரம்பரியக் கலைகள் இன்றைக்கும் ஒரு மனிதனின் மன அழுக்குகளை நீக்கி சுத்தம் செய்யக் கூடியவையாகும். ''காத்தான் கூத்து'' போன்ற கலை வடிவங்கள், உழைத்துக் களைத்த மக்களுக்குச் சோர்வை நீக்கிப் புத்துணர்ச்சி கொடுக்கும் நோக்கத்தையும் கொண்டு தோன்றியவை.

இன்று இதனைப் பார்க்கும்போது கூட எத்தனையோ காட்சியமைப்புக்களையும், கவர்ச்சி அம்சங்களையும் கொண்ட பல திரைப்படங்களைப் பார்த்தும் பெறமுடியாத மன அமைதியையும் சாந்தத்தையும் பெறக்கூடியதாகவுள்ளது.

இன்றைய திரைப்படங்களைப் பார்க்கும் ஒருவர் முடிவில் மகிழ்ச்சி, கோபம், வெறுப்பு, தன்னலப்பற்று, ஆச்சரியம் போன்ற உணர்ச்சிகளை அடையலாம். ஆனால் மனச் சாந்தத்தைத் தரும் திரைப்படம் என்று கூறக் கூடியவை மிக, மிகச் சிலவே.

இந்தக் கூத்துச் சொல்லும் மூன்றாவது விடயம் இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமான ஒன்றாகும். இன்றைய இளைஞர்களின் பொறுப்பற்ற தன்மையும், அழிவுக்குணமுமே பலருடைய பேச்சாக இப்போது உள்ளது.

பாரம்பரிய கூத்து ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதன் வடிவம் மாறாமல் பழகி, பெண் வேடங்களைக் கூட மிக நேர்த்தியாகச் செய்து, தம்மிலும் வயது கூடியோருக்கும், வயதில் குறைந்தோருக்கும் மகிழ்ச்சியையும்,மன நிறைவையும் தரும் வகையில் ஓர் இளைஞர் கூட்டம் அதனை மேடையேற்றியுள்ளது. இவர்களுக்கு இந்தப் பொறுப்புணர்ச்சியைக் கொடுத்தது எது? அழிவுப் பாதையிலிருந்து விடுபட்டு, மற்றவர்களின் மனதைக் குணமாக்கும் ஆக்கப் பாதையில் இவர்களை நடத்தியது எது? பாரம்பரியக் கலைகளுக்கு இந்தச் சக்தியுண்டா? ஏனைய இளைஞர்களுக்கும் இது சாத்தியமா? இதனையே மூன்றாவது விடயமாக இந்த மேடையேற்றம் தெரிவிக்கிறது.

எத்தனையோ புறச் சூழல்கள் எமது தனித்தன்மையை அழிக்கக் கூடியதாகவுள்ள இந்தக் காலகட்டத்தில், வெறும் தன்னல வேட்கைக்காக கலைகளில் மாற்றம் நிகழும் இன்றைய நாள்களில், நீண்ட காலப் பரிணாம வளர்ச்சியால் உருவம் பெற்ற ஒரு கலை வடிவத்தை, அதன் தூய்மை மாறாமல் மாதனை இளைஞர்கள் தந்துள்ளனர். ✱

கலாநிதி நா.சிவபாலன்,
(இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

# பாரதி மஹாகவியாக திகழ்ந்தது ஏன்?



தமிழ் இலக்கிய வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டு வரை மரபுக் கவிதையே செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளது. பாரதியோ சொல்புதிது, சுவைபுதிது, பொருள்புதிது எனப் புதுமை படைத்து நவீனக் கவிதை படைத்திருக்கிறார். புதுக்கவிதைக்கு வித்திடுகிறார்.

அந்தவகையில் வரலாற்றில் புதுமை படைத்தார் பாரதி. பாரதி படைத்த கவிதைகள் நவீன கவிதையாக இலக்கிய வரலாற்றில் தனி இடம் பிடித்திருக்கின்றன.

பாரதியைத் தொடர்ந்து பாரதிதாசன் முதலாக இன்றுவரை பல கவிஞர்கள் அவருடைய வழியைப் பின்பற்றி இருக்கின்றனர். வள்ளுவர் அறநூல்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தது போல், இளங்கோவடிகள் காப்பியங்களுக்கு வழி காட்டியாக இருந்ததுபோல் பாரதி நவீன கவிதைகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறார்.

உலகக் கண்ணோட்டத்துடன் கவிதைகளைப் படைத்தவன். குறித்த படைப்பானது குறிப்பிட்ட இலக்கையோ, குறிப்பிட்ட மதத்தையோ, குறிப்பிட்ட மொழியையோ, குறிப்பிட்ட மக்களையோ மையமாகக் கொண்டு படைக்கப்பட்டிருப்பின் அது அந்த அந்தக் குறிப்பிட்ட இனம், மதம், மொழி மக்களிடையே மட்டுமே வெற்றி பெறும். ஆனால் பாரதியோ உலகக் கண்ணோட்டத்துடன் உலக மக்கள் யாவருக்கும் புதுமையான ஒரு கவிதையைப் படைத்துள்ளார். பிரஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழி இலக்கியங்கள் வெற்றி பெற்றிருக்கக் காரணம் அவர்களுடைய உலகக் கண்ணோட்டமே ஆகும்.

அந்தவகையில் பாரதியினுடைய விடுதலை கோரிய பாடல்கள் உலகத்தின் அடிமைப்பட்ட தேசங்களில் எல்லாம் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இது விடுதலை கோரிப் போரிடும் பலஸ்தீனத்திலும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

காலத்தால் அழியாத கவிதைகள் படைத்தவர் இன்று புற்றீசல்களாய் ஏராளமான இலக்கியப் படைப்புகள் வெளிவந்த வண்ணமே உள்ளன. ஆனால் அந்தப் படைப்புக்கள் யாவும் கால ஓட்டத்தினால் அடித்துச் செல்லப்பட்டுவிடும். ஆனால் காலதேச வர்த்தமானங்களைக் கடந்து எந்தவொரு படைப்பானது நிலைத்திருக்கிறதோ அந்தக் கவிதைகளைப் படைத்தவர் மஹாகவி ஆகிறார். சமுதாய மாற்றத்தைத் தனது படைப்பினால் ஏற்படுத்தியவர் பாரதி. குறித்த சமுதாயத்தில் இருந்து தோற்றம் பெறுகிற இலக்கியங்கள் மற்றோர் சமுதாயத்தை உருவாக்கி நிற்குமாயின் அந்தப் படைப்பு உயிருள்ள படைப்பு ஆகும்.

பாரதி அடிமைப்பட்ட சமுதாயத்தில் இருந்துகொண்டு விடுதலை கோரி விடுதலை வேண்டிய சமுதாயத்தைப் பார்த்தார். இதனால் கவிதைகளுடைய தாக்கத்தால் விடுதலை கோரிய சமுதாயம் உருவாக்கம் பெற்றது. அந்தவகையில் பாரதி மஹாகவி ஆகிறார்.

உண்மையான கவிஞன் முக்காலத்தையும் உணர்ந்தவனாகத் திகழ்கின்றான் பாரதி. அடிமைப்பட்ட சமுதாயத்தில் இருந்து கொண்டே சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று பாடிய பாடல்களை வைத்து அவருடைய தீர்க்க தரிசனம் நன்கு தெரியும்.

(தொடரும்)

அ.ஜெயவதனா

தொ…
(கா…

தமிழ் இலக்கிய…
தமிழுக்கு இலக்கண…
தொல்காப்பியமாகு…
தாருக்கும், கடைச்ச…
என்பது நக்கீரர் வாக்…
'ஒல்காப் பெரும்…
போற்றப்படும் தொ…
டைய ஆசிரியர். இவ…
என்பதே ஆகும். எ…
என்னும் இயற்பெயர்…
இந்த நூல் ''நிலத்…
வனுடைய சபையி…
முன்பாக அரங்கேற்…
பாயிரம் இயற்றிய …
னார்'' கூறுகின்றார்…
பொருள் என்றவா…
அதிகாரப் பரப்பை உ…
ஒவ்வோர் அதிக…
ஒவ்வோர் இயலும்…
கொண்டும் அமைந்…
இலக்கண நூலாக இ…
யர் கால (சங்ககால)…
வாழ்வியல் சிறப்புக்…
மாகிய பொருளதிகா…
சங்ககால மக்கள் 5 …
வகைய… பிரிக்…
அந்த மக்கள் அ…
தனித்தனி சிறப்…
வாழ்வியல் அம்சங்…
தத்தம் நிலத்துக்…
யையும், வழிபட்டு…
விவசாயம் செய்தல்…
போன்ற தமக்கே…
கொண்டு கூட்டுக்…
னர்-மக்களாக வாழ்…
கள்.
இவர்களது வாழ்க்…
சிறப்புக்கள் இல்வ…
பண்பு அகத்திணை…
றும் தொழில்துறை …
இரு முக்கிய பிரிவு…

வாய்மை…

உண்மை, வாய்மை, மெய்மை என்…
சொற்களாகும். உள்ளத்திலிருந்து பெறப்…
உண்மை என அழைக்கப்படுகின்றது. வா…
தூய்மைத் தன்மை வாய்மை என்றும் உ…
விருந்து) பெறப்படும் தூய்மைத்தன்மை…
கூறுவர். வாய்மை அழியாது; என்றும்…
ராலும் விரும்பப்படுவது பொய்மையை …
அழித்திட முடியும். ஆனால் எமது உள்…
வாய்மை என்ற மை விண்ணுள்ளவ…
அழியாது புகழ் சேர்க்கும் என்பர். வாய்மை…
ரும், மேன்மை நிலைக்கும், உண்மை பே…
பொய்யின்றி வாழ்தல் வாய்மைக்கு ஊ…
''புறத்தூய்மை நீரான் அமையும்;
அகத்தூய்மை வாய்மையால் கா…
திருவள்ளுவர். உடலைத் தூய்மைப்…
குளிக்கிறோம். உள்ளத்தைத் தூய்…
பேசுதலே ஒரே வழியாகும். இதனை வ…
''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்; உ…
உள்ளத்துள் எல்லாம் உளன்'' என்கி…
உண்மை வழியிற் செல்வோன்…
வகையிலும் முன்னிலை பெறுவான். இ…
உண்மையை நாம் மனதில் கொண்டு…
பொய்மை மாறக்கூடியது. நீண்ட நாள்களு…
ஆனால் உண்மை எத்தனை முறை சொ…
மாற்றம் அடையாது. உண்மையாகத்தா…
லும் மறக்கமுடியாது. ''பொய் சொன்ன…
கிடையாது'' ; ''உண்மை பேசிக் கெட…
சொல்லி வாழ்ந்தாரும் இல்லை'' எ…
உண்மை பேசுதலின் சிறப்பையே உண…
நமது தமிழ் நூல்கள் எல்லாம் உ…
வலியுறுத்துகின்றன.
வாய்மை தவறாது நடக்கும்போது சி…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்காப்பிய (சங்க காலல) ஆடல்



ழ் இலக்கியப் பரப்பில், காலத்துக்கு முந்திய
கு இலக்கணம் கூறும் நூலாக விளங்குவது
காப்பியமாகும். இந்த நூல் இடைச் சங்கத்
தும், கடைச்சங்கத்தாருக்கும் பொதுவானது
நக்கீரர் வாக்காகும்.
காப் பெரும்புகழ் தொல்காப்பியன்' எனப்
ப்படும் தொல்காப்பியனாரே இந்த நூலினு
ஆசிரியர். இவரது இயற்பெயர் தொல்காப்பியன்
5 ஆகும். எனினும் சிலர் 'திரண தூமாகினி'
இயற்பெயர் இவருடையது என்பர்.
5 நூல் ''நிலத்தருதிருவிற் பாண்டியன்'' என்ப
டய சபையிலே ''அதங்கோட்டாசிரியரின்''
க அரங்கேற்றப்பட்டதாக இந்த நூலுக்குப்
இயற்றிய செந்நாப் புலவரான ''பனம்பார
கூறுகின்றார். இந்தப் புத்தகம் எழுத்து, சொல்,
ர் என்றவாறாக அமைந்த மூன்று பெரும்
ப் பரப்பை உடையது.
வோர் அதிகாரமும் ஒன்பது இயலாகவும்,
ார் இயலும் எளிய சூத்திரத்திரங்களைக்
டும் அமைந்துள்ளது. காலத்தால் முந்திய தமிழ்
ண நூலாக இருக்கின்றபோதும், தொல்காப்பி
(சங்ககால) மக்களது வாழ்க்கை அம்சங்கள்,
யல் சிறப்புக்களைப் பற்றி மூன்றாம் அதிகார
பொருளதிகாரம் விரிவாக விளக்கி நிற்கின்றது.
மக்கள் 5 வகை நிலத்துக்கேற்பவும் ஐந்து
பிரிக்கப்பட்டனர்.
5 மக்கள் அவரவர் நிலப்பிரிவுகளுக்கேற்ப
னி சிறப்புக்களையும் தனித்தனியான
யல் அம்சங் களுடனும் விளங்கினர்.
ம் நிலத்துக்குரிய கடவுளரையும், இயற்கை
, வழிபட்டுக் கொண்டு வேட்டையாடல்,
ம் செய்தல், தேன் பறித்தல், மீன் பிடித்தல்
தமக்கேயுரிய தொழில்களையும் மேற்
டு -கூட்டுக் குடும்பமாக ஆடிப்பாடி மன்
களாக வாழ்ந்து வந்தார்
களது வாழ்க்கை முறைச்
கள் இல்வாழ்வுக்குரிய
அகத்திணை, போர் மற
ழில்துறை சார்ந்த பண்பு புறத்திணை என்ற
க்கிய பிரிவுகளூடாக எடுத்துக்காட்டியிருப்பதைக் காண்கிறோம்.

இவர்களது வாழ்க்கை முறைகளில் அகத்திணைக்குரிய காதல் கூறும் விதத்தில் ஆடல் இசை, வாத்திய இசை என்பவை பயன்படுத்தப்பட்டமையையும், அதேவேளை புறத்திணைகளில் வீரத்தின் எழுச்சியின் நெறி புனைந்திருந்தமை வாழ்க்கைப் பண்பு பொருட்டு ஆடலையும் அறிகின்றோம். இவ்வாறு தொல்காப்பியம் எழுந்த காலத்தில் ஆடலும், பாடலும் மக்கள் வாழ்வியலுடன் ஒன்றிணைந்திருந்தமையைக் காண்கின்றோம். அந்த வகையில் தொல்காப்பிய ஆடல்களாக வெறியாட்டு, வாடாவள்ளி கூத்து, குரவை, கொற்றவையாடல் போன்றவற்றைக் கூறலாம்.

''வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை
.................................................
..........மலைத்த பூவும்
வாடாவள்ளி வயவர் ஒத்த.......'' (தொல். பொரு)

என்பது குறிஞ்சி நிலக் கரந்தையின் துறைகள் பற்றிக் கூறும் பாடலாகும். குறிஞ்சித் திணைக்குரிய கடவுள் குமரன். குமரக்கடவுளை வழிபட்டு வெறியாட்டு ஆடுவது இவர்களது வழமை. இதற்காக வெறியாட்டுப் பறையும், தொண்டகப் பறையும் கொண்டு இசை முழக்கி ஆடுவர். வெறியாடல் என்பது ''வெறியயர்தல், வெறிசெறிதல், வெறியுறுதல், வெறிகொள்ளுதல், வேலனாட்டு, காந்தட்கூத்து'' போன்ற பெயர்களால் குறிக்கப்பெறுகிறது. தெய்வமேறி ஓர் உணர்ச்சி மேலீட்டால் இவ்வெறியாட்டு நிகழ்ந்தமையால் ஒரே அமைப்பு நிலையான ஆடலை எதிர்பார்க்க முடிவதில்லை. அதாவது தற்கால உருவாடலுடன் ஒப்பிடலாம். சுற்றிச் சுழன்று ஆடுவதால் அணி மணிகளை இழந்து நிற்றலைக் காணலாம்.

(தொடரும்)

அ.உமாமகேஸ்வரி (B.F.A)
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

# தொன்மைத் தமிழும் அண்மைத் தமிழும் இன்மைத் தமிழும்

**(சென்றவாரத் தொடர்ச்சி)**

இனக்குழு என்பது ஒரு பெரிய உட்குழுவாகும். சமூக வகுப்புக்களுக்கும், முதனிலைக் குழுக்களுக்கும் குடும்பம் போன்ற பல நிறுவனங்களும் கொண்டது-இதனை வேறொரு வகையில் கூறினால், உயர்ந்த அமைப்பையுடைய இந்தச் சமூகத்தின் எல்லைக்குள்ளேயே ஒருவன் விரும்பினால் தொட்டில் முதல் சுடுகாடு வரையிலும் தன் வாழ்க்கையைப் பொருள் உள்ளதாகக் கழித்துக் கொள்ளமுடியும். இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் கேரளத்தில் மலையாளிகளும் தமிழர்களும் இருவேறு இனக்குழுக்களே.

**பண்பாட்டுத் தன்மயமாதல்**

ஒரு நாட்டில் குடியேறியவர்கள் தங்களின் புதிய சூழலுக்கு இயைந்து அதனைப் பின்பற்றுவதைப் பண்பாட்டுத் தன்மயமாக்குதல் என்று கூறுகின்றோம். முழுப் பண்பாட்டுத் தன்மயமாக்குதல் இரண்டு நிலையில் ஏற்படும். ஒரு நாட்டில் குடியேறியுள்ளவர்கள் தங்கள் சொந்தப் பண்பாட்டுத் தன்மைகள் அனைத்தையும் கைவிட்டுப் புதிய சமுதாயத்தின் தன்மைகளைப் பின்பற்றும்போது பண்பாட்டுத் தன்மயமாதல் ஏற்படும்.

குடியேறிய நாட்டில் உள்ளவர்களின் சமுதாயத்துடன் குடியேறிவர்கள் சமூகத் தொடர்பு முறைகளை எல்லா வகையிலும் ஏற்படுத்திக் கொள்ளும்போது வேறொரு நிலையில் அவர்கள் பண்பாட்டுத் தன்மயமாகுதலுக்கு ஆளாவார்கள். இது தவிர்க்க முடியாதது என்றும் கூற முடியாது. அதேபோல் எமது பாரம்பரிய நிலமும் வேற்றுச் சமூகத்தினால் பண்பாட்டுத் தன்மையாக்கலுக்கு உட்படும் தன்மையைக் காணலாம். உதாரணமாக 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வட இலங்கையில் சிங்களத்துவம் அரசியல் அதிகாரத்துடன் தமிழர்களது பொதுவாழ்வில் இணைக்கப் பட்டுவிட்டது.

உதாரணமாகப் பல சிங்களச் சொற்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அரச நிறுவனங்களால் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. இது ஒரு பலாத்காரத் தன்மயமாக்குதல் ஆகும்.

வீதி தொடர்பான அபிவிருத்தி 'மகநெகும' எனவும் மின்சக்திக்கு 'விதுனமு' லங்கா எனவும், அரச உரம் 'லக்பொஹெர' எனவும், கல்விக்கு 'வித்யாவள' எனவும், நிலையத்துக்கு 'நிவாச ' எனவும் 'சனச', 'சமுர்த்தி' எனப் பல சிங்களச் சொற்கள் அதிகார ரீதியில் தமிழ்ப்பிரதேசத்தில் தன்மயமாதலுக்கு விடப்பட்டுள்ளன. இவை தவறானதாகும்.

அதேபோல் தமிழ்ப்பிரதேசங்களில் பல பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் சேர நாட்டை மலையாளிகள் என்னும் ஆதித் தமிழர் முழுமையாக்கினரோ அவ்வாறே இலங்கையிலும் தமிழைக் காவுகொள்ளத் தொடங்கிவிட்டனர்.

**சிறுபான்மையர் சிக்கல்**

சிறுபான்மையர் தாங்கள் வாழும் நாட்டில் பெரும்பான்மையரின் சமூக, பண்பாட்டு, பொருளாதார முறைமைகளை ஏற்றுக் கொண்டவர்களாகக் காட்டிக்கொள்ள வேண்டும். சில நாடுகளில் பெரும்பான்மையர் சிறுபான்மையினரைச் சரிசமமாக நடத்துவதில்லை. சில நாடுகளில் மனிதர்களாகக் கூடக் கருதுவதில்லை.

இவ்வாறான சூழலில் பன்மொழி பேசி, பல இன மக்கள் வாழும் நாடுகளில் ஓர் இனம் தமது மொழியைப் பேணுவதுதான் பண்பாட்டைக் காப்பாற்றச் சிறந்த வழியாகும். சிறுபான்மையர் இதேநேரத்தில் பெரும்பான்மையர் வாழும் வழிகளைப் பின்பற்றித் தன்மயமாக்கும் முறைக்கு ஆளாகும் அபாயமும் இருக்கிறது. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் புலம்பெயர் சூழலில் இந்தத் தாக்கம் மிகவும் அதிகமாக இருக்கும்.

சிறுபான்மையினரின் பொருளாதார அமைப்புக்கள் நசிந்து சமூக முறைமைகள் சிதறுண்டு, கைத்தொழில்கள், கலைப்பண்பாடுகள் அழிந்து வரும்வேளையில் மொழி மட்டுமே அந்தச் சமூகத்தின் பண்பாட்டுச் சாதனமாக விளங்கும். மொழி மட்டுமே ஒரே ஓர் அடையாளச் சின்னமாக காணப்படும். இதன் காரணமாகத்தான் சிறுபான்மையர் எல்லா நாடுகளிலும் கல்வி, அலுவல் மற்றும் பொதுத் தொடர்பில் தங்கள் மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை எழுப்புகின்றனர். தமிழ்நாட்டில் வாழும் ஆந்திரர்கள்கூடத் தங்கள் தெலுங்கு மொழியில் தமிழ் நாட்டில் கல்வி போதிக்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்புகின்றனர். அதேபோல் ஈழத்தமிழர்களும் எந்த நாட்டில் இருந்தாலும் தமிழ்மொழிக் கல்வியைக் கற்றலே இனத் திரிபு ஏற்படாது இருக்க ஏதுவாகும்.

**மொழியும் குழந்தைக் கல்வியும்**

தாய்மொழி மூலம் கல்வி பெறுவது ஒரு குழந்தையின் இளமைக்காலக் கல்வியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சிறுபான்மையர் குழுவிலுள்ள குழந்தைகள் வாழ்விலும், தாய்மொழிக் கல்வி மிக முக்கியமான இடத்தைப்

(தொடரும்)

# (வாய்)மையே வெல்லும்

மெய்மை என்பன ஒரு பொருள் தரும்
ருந்து பெறப்படும் தூய்மைத்தன்மை
கின்றது. வாயிலிருந்து பெறப்படும்
என்றும் உடம்பினின்று (மெய்யி
மைத்தன்மை) மெய்மை என்றும்
து; என்றும் நிலைப்பது; எல்லோ
ாய்மையை எந்த நிலைமையினாலும்
எமது உள்ளம் தயாரித்து எழுதும்
ண்ணுள்ளவரை மண்ணுள்ளவரை
பர். வாய்மையாற்றான் நேர்மை வள
உண்மை பேசுதலே வாய்மையாகும்.
மைக்கு ஊன்றுகோலாகும்.
மையும்;
மையால் காணப்படும்''- என்றார்
தூய்மைப்படுத்தத் தினந்தோறும்
தைத் தூய்மைப்படுத்த உண்மை
இதனை வள்ளுவர்,
ஒழுகின்; உலகத்தார்
ான்'' என்கிறார்.
சல்வோன் உலகத்தில் எல்லா
றுவான். இதில் ஐயமில்லை. இந்த
கொண்டொழுகுதல் வேண்டும்.
ட நாள்களுக்கு நிலைக்க மாட்டாது.
முறை சொல்லிப்பார்த்தாலும் அது
மையாகத்தானிருக்கும். இதை யாரா
ய் சொன்ன வாய்க்குப் பொரியும்
பேசிக் கெட்டாருமில்லை பொய்
ல்லை'' என்னும் முதுமொழிகள்
மையே உணர்த்துகின்றன.
ல்லாம் உண்மை பேசுதலையே
ம்போது சில துன்பங்கள் நேரலாம். சோதனைகள் ஏற்படலாம்.

ஆனால் ஈற்றில் வாய்மையே வெல்லும். வாய்மையின் வெற்றிக்கு அரிச்சந்திர மகாராசாவினது கதையும் அவர் வழி நடந்த அண்ணல் காந்தியடிகளின் வாழ்வும் தகுந்த எடுத்துக்காட்டுக்களாகும். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பர். உண்மைதான். ஆனால் கற்றோராயினும் வாய்மையுடையவர்களையே சமூகம் மதிக்கும். வாய்மை இருப்பின் உறவினர், நண்பர் நம்மை விரும்புவர். பேனாவில் மை இல்லையென்றால் எழுதமுடியாது. எம் வாழ்வில் ஒழுக்கம் இல்லையென்றால் வாழ இயலாது. நேர்மை, தூய்மை நட்பின் திண்மை இவைகளுக்கெல்லாம் சான்றளிப்பது வாய்மைதான். ஒருவனது செயற்பாடுகளே அவன் நல்லவன் கெட்டவன் என்பதைக் காட்டிக் கொடுத்துவிடும். தீயவன் என்று பெயர் பெறுவதற்கு ஒருநாள் போதும். மற்றவர்கள் மத்தியில் நல்லவன், நேர்மையானவன் என்று பெயர் பெறப் பல மாதங்கள் கூட ஆகலாம்.

வாய்மை ஒருவனை நல்லவன் ஆக்குகிறது. பெருமை பெறச் செய்கிறது. அந்தப் பெருமை அவனுக்கு மட்டுமா? இல்லை. அவனது குடும்பச் சூழலுக்கும் கிடைக்கிறது. அவனைக் கற்பித்த ஆசிரியருக்கும் பெருமை சேர்க்கிறது. நாம் தவறு செய்யுமிடத்து தவறு என்று ஒப்புக்கொள்ள வேண்டும். தவறைச் செய்துவிட்டு அதை மறைக்கப் பல்வேறு பொய்களைக் கூறுதல் கூடாது. பொய் பேசுதலே குற்றச்செயல்கள், பாவங்கள் எல்லாவற்றுக்கும் மூலகாரணமாயுள்ளது. ''வாய்மையே வெல்லும்'' என்னும் பொன்மொழியை நாம் போற்ற வேண்டும். எத்தனை துன்ப துயரங்களை எதிர்கொண்டே வாய்மை வெல்லும். வாழ்வின் வெற்றியே புகழ் ஆகும். அந்தப் புகழும் வாய்மை வழியே வரும் போது நிலைத்த புகழாகமாறும்.

எனவே நாம் இளமையிலேயே வாய்மையின் மேன்மை உணர்ந்து அதனைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் ''நமது சொல்லிலும் செயலிலும் வாய்மை வேண்டும்''

சு.நிதர்ஷிகா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மக்கள் முகம்



சமாதான நீதிவானும் - சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் பெண்கள் சிறுவர் மேம்பாட்டு பணிப்பாளரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமாகிய திருமதி அ. மரிய கொறற்றி அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் கல்முனை திரு இருதயநாதர் வரவேற்பு மண்டபத்தில் கடந்த 26.06.2011 இல் "சாம ஸ்ரீ தேசமானி" விருது கொடுத்துக் கௌரவிக்கப்பட்டார்.



புத்தூர் மேற்கைச் சேர்ந்த ஐயாத்துரை ஜெகநாதன் அண்மையில் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ். கல்வித் திணைக்கள ஓய்வுபெற்ற சேவைக்கால விஞ்ஞானபாட கல்வி ஆலோசகர் ஆவார்.

தற்சமயம் வலி. கிழக்குப் பிரதேச அரச சேவையாளர் ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் பொருளாளராகவும் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளராகவும் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினராகவும் மட்டுவில் கல்லுவம் விநாயகர் ஆலய தர்மகர்த்தாவாகவும் உள்ளார்.

## வாசகர் திருமுகம்

# தொலைக்காட்சியும் மாணவர்களும்

தொலைக்காட்சிக்கு முன்னால் நேரத்தைச் செலவிடும் பல மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதன் காரணமாகப் பல பெற்றோர் தொலைக்காட்சி உபயோகத்தை முற்றாகவே நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இது உண்மையில் ஒரு சரியான தீர்வாக அமையாது.

தொலைக்காட்சி விடயத்தில் உள்ள உண்மையான அடிப்படை விடயம் என்னவென்றால் எதைப் பார்ப்பது என்று பார்வையாளர்களிடையே சரியான திட்டம் இல்லை. மாணவர்களுக்கு அறிவை விருத்திசெய்யக்கூடிய, அவர்களது ஆளுமையை வளர்த்தெடுக்கவல்ல, சில விஷேட தகைமைகளை ஊக்குவிக்கக்கூடிய பல அம்சங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இருக்கின்றன.

குடும்பத்திலுள்ளவர்கள் ஆராய்ந்து நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை உத்தேசித்து வசதியான நேரம் பார்க்கக் கூடிய ஏற்பாட்டைச் செய்யலாம். குறிப்பிட்ட நிகழ்ச்சியுடன் பார்ப்பதை முடித்துக்கொள்ளல் ஒரு சிரமமான காரியம் என்றும் சொல்லப்படுகிறது.

பாடசாலை, தனியார் கல்விச்சாலை ஆகியவற்றிலிருந்து மீண்டுவரும் பிள்ளைகள் தொலைக்காட்சி முன் உட்காருகிறார்கள். இவர்களுக்கு வசதியான நேரத்தில் நல்ல நிகழ்ச்சி இருக்கும் என்று கொள்ளமுடியாது. இதனால் அகப்பட்டதைப் பார்க்கிறார்கள். இந்தச் சிக்கலில் இருந்து விடுபடுவது பற்றிச் சிந்திக்க நாம் முன்வர வேண்டும். இந்த நேரத்தில் விளையாடுவது பொருத்தமாக இருக்கும். ஆனால் அதற்கான காலநிலையில்லாமல் போகலாம்.

இதற்குத் தீர்வாக முன்னர் பதிந்து வைத்துள்ள நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். அல்லது மின்னொளியில் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டை விளையாடலாம். இவற்றுக்குச் செலவு அதிகமாகும் என்று பலரும் கருதலாம்.

இதில் கூட்டுமுயற்சி பெரும் பயன்தரும். அது சாத்தியப்படுவதைப் பொறுத்தது. எல்லாவற்றுக்கும் கண்காணிப்புத் தேவை என்பதை நாம் அடிக்கடி மறந்துவிடுவதுண்டு. அதில் ஈடுபாடு காட்டப்படுவது மிகமிக அவசியம். தன்தன் தொழில் என்று குடும்பத்தினர் எல்லோரும் இருந்தால் முக்கிய விடயங்களைக் கோட்டைவிடுவது தவிர்க்க முடியாது.

தொலைக்காட்சி பார்ப்பதில் மிகவும் சிக்கலான பக்கமும் ஒன்றுண்டு. அதுதான் பெற்றோர் தொலைக்காட்சி பார்க்கவேண்டியிருக்கும்போது பிள்ளைகள் படிக்க வேண்டியிருப்பது. வசதியிருந்தால் அறைக்குள் பிள்ளை படிக்கலாம். பொதுப் பகுதியில் தொலைக்காட்சியை இரசிக்கலாம் என்று பலர் கருதுகிறார்கள். இது பிள்ளையின் படிப்புக்கு இடையூறாகவே அமையும். எல்லாப் பெற்றோர்களும் மனதைக் கட்டுப்படுத்தி பிள்ளைகளின் கல்விக்கு உதவுவார்கள் என்று சொல்லமுடியாது.

எப்படியாயினும் பிள்ளைகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளால் சீரழியாமல் பார்த்துக் கொள்வது பெற்றோர்களின் கடமை. சாக்குப்போக்குகளை விட்டு விட்டு ஆக்க பூர்வமாகச் சிந்திப்போம் -.

கொக்குவில் **வை. சந்திரபாலன்**



யாழ்ப்பாணம், ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் அறிவொளி ஞானக்குழந்தை இல்லம் பாலர் பாடசாலையின் [illegible] அண்மையில் நடைபெற்றது. பாலர்களின் பாண்ட் [illegible] விருந்தினர்கள் அழைத்துவரப்படுகின்றனர். (ம)

# அறப்பணிகளில் முன்னிற்பவர்

### இராமலிங்கம் திருவாதிரை



சைவமும் தமிழும் தழைக்கப் பெரும்பணி ஆற்றுகின்ற பெருமக்கள் வாழும் காரை மண்ணில் சைவப்பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் தோன்றித் தன்னுடைய அயராத உழைப்பால் வாழ்க்கையின் அதிஉயர் இடத்தை அடைந்தபோதும் தன் உழைப்பால் ஈட்டிய செல்வத்தைத் தன்னால் முடிந்தளவு சிலநேரங்களில் தனது சக்திக்கு மேற்பட்டும் அறப்பணிகளுக்கு வழங்கிய அருந்தவச்செல்வர் இவர்.

உயர்ந்த குணம், தெளிவான சிந்தனை, கனிவான பேச்சு, தளராத உறுதி, தாளாதகொடை, மாறாத வார்த்தை, பொறுமை, பணிவு, விருந்தோம்பல் போன்ற பல நற்பண்புகள் கொண்ட மாண்பினர். தன் வாழ்வுயர வழிசமைத்த ஸ்தாபனத்தையே ஒரு கோயிலாகப் பேணிவந்தவர். தன்னை நாடிவந்த அனைவரையும் தன் உறவுகளாகவே கருதி அவர்கள் தங்கள் வாழ்க்கைப் படிமுறையில் வளர வழிசமைத்தவர்.

பண்புடையாளர் பட்டுண்டு உலகு என்பது வள்ளுவன் வாக்கு. கலிகாலத்திலும் இப்படியான சிலமனிதர்களின் வாழ்வால் தான் நிலம் நிமிர்ந்து நிற்கின்றது என்றால் அது மிகையில்லை. வேரோடி விழுதுவிட்டு பரந்துவளர் ஆலமராமாய் சீரோடும் சிறப்போடும் விளங்கிய திருப்பதி நிறுவனத்தின் பெயரால் ஆற்றிய நல்லறங்கள் யாவும் என்றைக்கும் நன்றிக்குரியவை.

காரைநகர் மட்டுமன்றி நாட்டின் பலபாகங்களிலும் உள்ள ஆலயங்களின் கும்பாபிஷேகமோ, மண்டலாபிஷேகமோ, திருப்பணியோ அன்னதானமோ அதில் கட்டாயம் இவரின் பங்களிப்பு இருக்கும். சுனாமிப்பேரழிவால் துவண்டு போயிருந்த மக்களின் வாழ்வாதாரத்துக்குப் பெரிதும் உதவிநின்ற பெருந்தகை. வாணிபத்தை எப்படியும் நடத்திப் பொருளீட்டலாம் என்று எண்ணாது இப்படித்தான் நடத்தவேண்டும் என்ற நெறிமுறைக்கேற்ப வர்த்தகத்தை நேர்த்தியாகவும் நேர்மையாகவும் நடத்தி அறவழியில் பொருளீட்டிய அன்பாளர்.

நிலையாமை ஒன்றுதான் உலகில் நிலைத்த இயல்பு என்பதை நாம் காலங்காலமாக உணர்ந்திருந்தாலும் சிலரது மறைவு நெஞ்சை நெருடவே செய்கின்றது. அத்தகைய ஒரு நிலைமை சைவ ஆலயங்கள், சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், பல சபைகள், கழகங்கள், மன்றங்கள் போன்றவற்றுக்கு ஏற்படுத்திவிட்டு "பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை அருளிலார்க்கு அவ்வுலகமில்லை" என்னும் முதுமொழிக்கேற்ப இவ்வுலகில் வாழும் பொருளாளராகவும் அவ்வுலகை ஆளும் அருளாளராகவும் விளங்கி மறைந்த காரைநகர் பலுகாடு இராமலிங்கம் திருவாதிரை அவர்களின் ஆன்மா தில்லைக் கூத்தன் திருடியில் பிறவா வாழ்வில் திழைத்துப் பெருஞ்சாந்தி பெறும் என்பது திண்ண மாகும்.

மகாராணி க. சோமசேகரம்
காரைநகர்

## நீத்தார் நயப்புரை

# சமூகப் பணிக்காகவே தன்னை அர்ப்பணித்தவர்

### திருமதி கிருபாநிதி பவசிங்கம்



செந்தமிழ் மணங்கமழும் தென்மராட்சியின் நுணாவிலில் புகழ்பூத்த அதிபரும் ஆசிரியருமான வல்லிபுரம்- பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியாக கிறிஸ்தவச் சூழலிலே உதித்தவர் திருமதி கிருபாநிதி பவசிங்கம். அவர் தமது இளமைக் கல்வியைச் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை மாணிப்பட்டம் பெற்றார். வலிகாமத்தின் விடிவெள்ளி எனத் திகழும் உடுவிலிலே கால்பதித்து கிறிஸ்தவ மிஷனரிமாரினால் நிறுவப்பட்ட உடுவில் மகளிர் கல்லூரியிலே தமிழ் கற்பித்தார். கலையார்வம் மிக்கவராக விளங்கிய கிருபாநிதி சத்தியவான் சாவித்திரி நாடகம், அரிச்சந்திர மயான காண்டம் முதலிய நாடகங்களிலே மாணவர்களை நடிக்கச்செய்து மேடையேற்றி நாடகத்தமிழ் வளர்த்தார்.

சுவாமி விபுலானந்தர் அதிபராகித் தமிழ் வளர்த்த மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அவர் விட்டுச்சென்ற தமிழ்ப் பணியைத் தொடர்ந்தவர்களுள் ஒருவராய் தமிழ்மொழி ஆசிரியராய் இணைந்து மூன்று தசாப்த காலமாகத் திறன்மிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்கினார். பவசிங்கம் ரீச்சர் வாறா என்றதும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் இடையே மதிப்புயர் வரவேற்பு இருக்கும். அவரின் இன்னொரு முகமாய் கிருபாநிதி என்றதும் அன்புக்கிருபையிலே மாணவர்கள் நனைவர். இவரின் ஆளுமையும் இளமைத்துடிப்பும் அக்கால அதிபர்களான முத்துவேற்பிள்ளை, பேராயிரவர் போன்றோர் போற்றும் வகையில் சிறந்திருந்தது. மாணவர்கள், ஆசிரியர்கள் முதல் அதிபர்வரை அம்மையாரின் வழிகாட்டலை ஏற்றனர். கற்பித்தலோடு உப அதிபராக இருந்து கல்லூரி நிர்வாகத்தை வளப்படுத்தினார். கல்லூரிச் சமூகம் மட்டுமன்றி வலிகாம வலயக் கல்வித் திணைக்களம் முதல் பல்கலைக்கழகம் வரை அம்மையார் அன்புக்கும் மதிப்புக்குமுரியவரானார். விளையாட்டு மைதானத்தில் நின்று மாணவரோடு மாணவராக ஓடியும் கயிறிழுத்தும் பிள்ளைகளின் வெற்றியில் தாமும் குதூகலித்தும் மாணவரையும் உற்சாகப்படுத்துவார்.

கிருபாநிதி பவசிங்கம் அவர்களின் கண்டிப்புக்குப் பயப்படாத மாணவர்கள் இருக்கலாம். அன்புக்கு அடிபணியாதோர் இல்லை. எத்தனையோ ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவியுள்ளார். இன்று தலைநிமிர்ந்து நிற்க ஏணியாக நின்றவர் பவசிங்கம் அவர்கள். கற்பித்தலோடு தானும் கற்று டிப்ளோமா பட்டத்தையும் முதுதத்துவமானி (M.Ph) பட்டத்தையும் பெற்றதோடு சைவமும் தமிழும் பின்னிப் பிணைந்தன என்பதை உணர்ந்து கொண்ட அம்மையார் இந்து நாகரிகத்திலும் டிப்ளோமா பட்டத்தை பெற்றார். காலம் தந்த கைவிளக்காக இந்து நாகரிகத்தைப் சிலகாலம் கற்பித்ததோடு 1985 ஆம் ஆண்டு மகேசவேலு அதிபராக இருந்துபோது வெளியிடப்பட்ட பவளவிழா மலரிலே சைவ சமயம் சார்பான கட்டுரைகளை தந்ததோடு தமிழ்மன்றம், கிறிஸ்தவ மன்றங்களின் போஷசகராக இளமைப்பொலிவோடு நின்ற அம்மையார் எம்மை விட்டகன்றமை வேதனைக்குரியதாகும்.

சங்க காலம்பற்றி மிக நீண்ட காலமாக உயர்தர வகுப்பு மாணவர்களுக்குத் தெளிவான விரிவுரைகளை ஆற்றிய அம்மையார் அக்காலப் பெண்களைப் போல் கணவர் மறைந்து சிறிது காலத்துக்குள்ளாகவே உயிர் நீத்த நிலை அவரின் குடும்ப உறவின் மகிமையை உணர்த்துகிறது. கல்லூரியின் வளர்ச்சிக்காக உலக நாடுகளில் செயற்படும், வாழும் பழைய மாணவர்கள் எல்லாம் அம்மையாரின் உருவாக்கத்தில் விளைந்த மாணவர்கள் என்பதற்கு இணையத்தளங்களில் வெளியிட்ட கண்ணீர் அஞ்சலிகள் தக்க சான்றாகும்.

நல்லது செய்தோர் நம் மனங்களை விட்டகலாது நமது வாழ்வுக்கும் துணை நின்று வழி நடத்துவது போல் அமரர் கிருபாநிதி பவசிங்கம் அவர்களின் நல்வழி [illegible] எம்மைத் தொடரும் என்ற நம்பிக்கையோடு அவரது ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய். இ. மோகன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு காட்டிய அபிவிருத்தி வித்தைகளுக்கு வடக்கு, கிழக்கு மக்கள் மயங்கிவிடவில்லை

## மத்திய மாகாண தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் கூறுகிறார்

நுவரெலியா, ஜூலை 30

வடக்கு, கிழக்கு மக்கள் தமது உறுதியான நிலைப்பாட்டை வாக்குச்சீட்டின் மூலம் அரசுக்குத் தெளிவுபடுத்தியுள்ளனர். அவர்களுக்கு சுதந்திரமாக வாக்களிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தால் இதைவிடக் கூடுதலான வாக்குகளை வழங்கியிருப்பார்கள். அரசின் அபி விருத்தி என்ற வித்தைகளுக்கு மயங்காத அவர்கள் தங்களின் தலைமைத்துவம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தான் என்பதை நிரூபித்துள்ளனர் - என மத்திய மாகாண தொழிலாளர் முன்னணியின் பொதுச்செயலாளர் எஸ். இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

நடந்துமுடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசு தென் பகுதியைவிட வடக்கு, கிழக்கிற்கே முக்கியத்துவம் கொடுத்திருந்தது. பிரதமர் உட்பட அனைத்து அரசியல்வாதிகளையும் அங்கு அழைத்துக்கொண்டுபோய் பல்வேறு அபிவிருத்திகளை அரசு செய்துள்ளது.

அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறுவதைப் போல் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டதன்மூலம் அரசு வெற்றிபெற்றுள்ளது என்றால் ஏன் அப்பகுதிகளுக்கு அரசின் படைபட்டாளங்கள் சென்றன?

தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்களை தன்பக்கம் இழுத்து சர்வதேசத்துக்கு சவால் விடுக்கவே அரசு இத்தனை பிரயத்தனங்களையும் மேற் கொண்டது. எனினும், சூழ்ச்சிகளைப் புரிந்துகொண்ட அந்த மக்கள் அரசை நிராகரித்து விட்டனர் - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுபோதையில் நின்ற யுவதிகள்

இரத்தினபுரி பஸ் நிலையத்தில் மதுபோதையுடன் நின்றனர் என சந்தேகிக்கப்பட்ட மூன்று யுவதிகள் இரத்தினபுரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரியில் உள்ள அருவியொன்றைப் பார்க்கச் சென்றபோது மதுவருந்தியதாக அவர்கள் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்த மூவரும் விரும்பி மது அருந்தினார்களா அல்லது யாராலும் வற்புறுத்தி அருந்த வைக்கப்பட்டார்களா என பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ச-5)

# ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் தமிழ் பாடசாலைகள் இல்லை

## ஐக்கிய தமிழ் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

கொழும்பு,ஜூலை 30

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட 135 பாடசாலைகளில் தமிழ்ப் பாடசாலைகள் எதுவும் இல்லாதது ஏமாற்றம் அளிக்கிறது. முதலாவது பட்டியலில் தெமட்டகொடை விபுலானந்த தமிழ் வித்தியாலயம் இடம்பெற்றிருந்தது. ஆனால் இறுதிப் பட்டியலில் அது நீக்கப்பட்டு விட்டது. ஆதலால் விபுலானந்த தமிழ் வித்தியாலயம் உட்பட நான்கு தமிழ்ப் பாடசாலைகள் மேல்மாகாணத்தில் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய தமிழ் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு எழுதிய மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் மேல்மாகாணத்தில் 5 முஸ்லிம் பாடசாலைகள் உட்பட 135 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் ஒரு தமிழ்ப் பாடசாலை யாவது தெரிவு செய் யப்படாதது குறித்து நாம் கவலை அடைகின்றோம். மேல் மாகாணத்தில் தமிழ்ப் பாடசாலைகள் உள்ளன என்பதை கவனத்தில் கொள்ளாது இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

எனவே,இது குறித்து மீள் பரிசீலனை செய்து தெமட்டகொட விபுலானந்த தமிழ் வித்தியாலயம் உட்பட நான்கு தமிழ்ப் பாடசாலைகளை இறுதிப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றோம்- இவ்வாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



கல்வி ஊழியர்கள் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கத்தை இடைகால நிர்வாக சபை பொறுப்பேற்றதை எதிர்த்து இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் கடந்த புதன்கிழமை பதுளை, லோவர் வீதியில் அமைந்துள்ள ஈ.டி.சி.எஸ். அலுவலகத்துக்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள், 'ஆசிரியர்களால் சேமிக்கப்பட்ட பணத்தை கொள்ளையடிக்காதே', 'ஜனநாயகமென்பது ஆசிரியர்களின் பணத்தை கொள்ளையடிப்பதா?', 'ஊழியர்களைப் பழிவாங்காதே', என்று கோஷங்களை எழுப்பி எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

# கும்புறுமுனையில் துப்பாக்கிகள் மீட்பு

மட்டக்களப்பு,ஜூலை30

மட்டக்களப்பு, கும்புறுமுனை காட்டுப்பகுதியில் ரீ. 56 ரக துப்பாக்கிகள் மூன்றை சித்தாண்டி 12 ஆவது படைப்பிரிவினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை மீட்டுள்ளதாக கிழக்கு மாகாண இராணுவக் கட்டளை தளபதி பொனிபஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் மூலமே இந்தத் துப்பாக்கிகள் மீட்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டவிரோத ஆயுதங்களை நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பாக அரச பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக்கும்படி இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தன்னம்பிக்கையைத் தளரவிடாது கல்வியைத் தொடர வேண்டும்

## நிந்தவூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வலியுறுத்து

தீகவாபி, ஜூலை 30

ஒவ்வொரு மாணவரும் தனக்குச் சிறப்பான எதிர்காலம் உண்டு என்ற தன்னம்பிக்கையுடன் கல்வியைத் தொடர வேண்டும். இந்த இலட்சிய நோக்கின் மூலம் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக மிளிர முடியும்.

இவ்வாறு நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். அகமது கருத்தரங்கொன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றியதாவது:-

கல்வி கற்பதன் மூலம் சமூகத்தில் உயர்வு பெறமுடியும். ஆகையால் இன, மத, மொழி, பிரதேசவாதம் ஆகிய வேறுபாடுகளின்றியும் வயது வித்தியாசமின்றியும் அனைவரும் நிறைவான கல்வியைப் பெறவேண்டும். இதில் அனைவரும் ஆர்வம் காட்ட வேண்டும்.

தன்னம்பிக்கையைத் தளரவிடாது முயன்று கல்வி கற்க வேண்டும். தமக்கு ஆரம்பம் முதல் இறுதி வகுப்பு வரை கல்வி புகட்டும் ஆசிரியர்களை மதிக்கும் உயரிய மனப்பாங்கு இருக்கவேண்டும்- என்றார். (ச)

# தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வு

நுவரெலியா, ஜூலை 30

பொகவந்தலாவை, வட்டவளை பெருந்தோட்டக் கம்பனிகளுக்குட்பட்ட தோட்டங்களைச் சேர்ந்த, தொழிலாளர் தேசிய சங்கத்தின் அங்கத்தவர்கள் எதிர்நோக்கி வந்த தொழில் ரீதியான பிரச்சினைகள் குறித்து இந்தத் தோட்டங்களின் முகாமைத்துவங்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுகளின்போது தொழிலாளர்கள் எதிர்நோக்கி வந்த பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் சிரேஷ்ட தொழிலுறவு, நிர்வாக ஆலோசகர் சிங் பொன்னையா தெரிவித்துள்ளார். (ச)

# மட்டக்களப்பில் கடலரிப்பு; தடுக்க மக்கள் கோரிக்கை

மட்டக்களப்பு,ஜூலை30

மட்டக்களப்பு மாநகரசபை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கடலரிப்பை கடற்றொழில் அமைச்சின் மாவட்ட கடற்றொழில் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் டொமினிக் ஜோர்ஜ் தலைமையிலான அதிகாரிகள் கடந்த புதன் கிதுமை மாலை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இது தொடர்பாக கடற்றொழில் திணைக்கள பிரதிப் பணிப் பாளர் கருத்துத் தெரிவிக்கையில்:-

நாவலடி பிரதேசத்தின் பிரதான வீதி கடலரிப்பினால் முற்றாகச் சேதமடைய ஆரம்பித்துள்ளது. இந்த நிலைமை தொடர்ந்தால் கடல் மட்டக்களப்பு வாவியுடன் இணையும். அவ்வாறு இணைகின்றபோது கல்லடி பாலம் சேதமடையும் ஏற்படும்.

இந்தப் பாலம் சேதமடைந்தால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பிரதான வீதியில் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்படும் இந்தக் கடல் அரிப்பை பெரிய கற்களைக் கொண்டு உடனடியாகத் தடுக்க வேண்டும்.

இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சருடன் பேசியுள்ளேன் - என்றார். (ச-21)

# மதுபோதையில் கலவரம் செய்தோர் மீது துப்பாக்கிச் சூடு; ஒருவர் காயம்; 4பேர் கைது

திருகோணமலை, ஜூலை 30

மது போதையில் கலவரம் செய்தோர் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலும் நால்வர் கைது செய்யப் பட்டனர்.

இந்தச்சம்பவம் திருகோணமலை, மகாமய புர சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

மது போதையிலுள்ள சிலர் குறித்த பிரதேசத்தில் கலவரம் செய்கின்றனர் என பொலிஸ் அவசர அழைப்பான 119 இலக்கத்துக்கு கிடைத்த தகவலை அடுத்து அந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் போதையிலுள்ளவர்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

இருப்பினும், நிலைமை மோசமானதை அடுத்து இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என திருகோணமலை பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து போதையில் கலவரம் செய்த மேலும் நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று திருகோணமலை பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்கள் அழுத்தங்களுக்கு கீழ்ப்படியாமல் தமது நிலைப்பாட்டை எடுத்துக் காட்டியுள்ளனர்

## மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 30

யுத்தம் முடிவடைந்து இன்னும் முழுமையான இயல்புநிலை ஏற்படாத நிலையிலும், பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியிலும், வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எந்தவிதமான அழுத்தங்களுக்கும் கீழ்ப்படியாமல், இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும், தமது நிலைப்பாட்டை மிகத்தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள் - என மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் அ.லோறன்ஸ் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தொடர்ந்துவரும் ஒவ்வொரு தேர்தல்களிலும் இலங்கைக்கும், சர்வதேசத்திற்கும் சொல்லப்படும் செய்தி ஒன்றுதான். அது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்ற பலமான செய்தி. யுத்தம் முடிந்தபடியால், 'இனப்பிரச்சினைக்கான தீர்வு தேவையற்றது' என்று குரல் எழுப்பிய இனவாத சக்திகளுக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் தெளிவான செய்தியைக் கூறியுள்ளது.'

வடக்கு, கிழக்குப் பகுதி அந்த மக்கள் செறிவாக வாழும் பிராந்தியம் என்பதையும், அந்த மக்கள் தனித்துவமான தேசிய இனம் என்பதையும், அவர்களது பிரச்சினை அதிகாரப்பகிர்வின் மூலமாகவே தீர்க்கப்பட வேண்டுமென்பதையும் அவர்கள் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளார்கள்.

இது இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு தவிர, வேறெந்த வகையான குறுக்கு வழியும் கிடையாது என்பதை சுட்டிக்காட்டுவது போல அமைந்துள்ளது. இது அரசியல் தீர்வுக்கான தேவையை சர்வதேசத்திற்கும், இந்தியா, சீனா போன்ற அயல் நாடுகளுக்கும், பிராந்திய சக்திகளுக்கும், தெளிவான செய்தியைக் கொடுப்பதாக அமைந்துள்ளது.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினை அவர்களின் அபிலாஷைகளுக்கேற்ப தீர்க்கப்படவேண்டும்.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் சர்வதேசத்திற்கு மாத்திரமின்றி இலங்கையில் வாழும் ஏனைய தேசிய இனங்களான மலையகத் தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது- என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)




இலங்கை செவிப்புலன் அற்றோரது மத்திய சம்மேளத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் வாழும் செவிப்புலன் அற்றோரது உரிமைகளை உறுதிசெய்தல், அவர்களை சமூகமயமாக்கல் மற்றும் அவர்களுக்கு சுபீட்சமான வாழ்வை ஏற்படுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நேற்று வெள்ளிக்கிழமை காலை விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான செவிப்புலனற்றவர்கள் கலந்துகொண்டனர். (ச)

# அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி கோட்டையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 30

தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி சோஷலிச இளைஞர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நடைபெற்றது.

'வடக்கில் இராணுவ ஆட்சியை நீக்கு', 'தமிழ் அரசியல் கைதிகளை உடனடியான விடுதலை செய்க', 'ஜனநாயகத்தை நிலைநாட்டு', 'இனவாதங்களை தோற்கடிப்போம்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தி அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் உட்பட அதிகமானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச)

# புதைகுழியில் இருந்த ஆடைகள் கொல்லப்பட்ட நபர்களுடையவையே

## விசாரணையில் பிரதிப் பகுப்பாய்வாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்-மிருசுவில் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மீண்டும் நடைபெற்றது.

புதைகுழியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட ஆடைகள் தொடர்பான அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தின் சாட்சியத்துக்காக இந்த வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

புதைகுழியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட இரத்தம் தோய்ந்த ஆடைகள் அந்தப் படுகொலையில் கொல்லப்பட்ட நபர்கள் அணிந்திருந்தவைதான் என்பதை அரச பகுப்பாய்வுத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளதாக பிரதிப் பகுப்பாய்வாளர் டி.எச்.எல். ஜயமான்ன நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

கதிரேஸ் ஞானவிமலன், ஞானவிமலன் ரவிச்சந்திரன் ஆகியோரது ஆடைகளே அவை என்பதை அவர்களின் உறவினர்களின் ஒத்துழைப்புடன் உறுதிப்படுத்தியுள்ளதாக பகுப்பாய்வாளர் தெரிவித்தார். (ச)


## தீவக மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்



**வேலணை பிரதேச சபை - 2011**

வேலணை பிரதேச சபைத் தேர்தல் 23.07.2011 இல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி) சார்பில் வெற்றிலைச் சின்னத்தில் இல.07 இல் போட்டியிட்ட என்னை வெற்றி பெறச் செய்து வேலணை பிரதேச சபைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்தமைக்குத் தீவக தெற்கு மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ப.தயானந்தன்,
புங்குடுதீவு - 3

## காணி விற்பனைக்கு

பாண்டியன்தாழ்வு, கணக்கர் சந்திக்கு அருகில் புங்கங்குளம் வீதியில் 5 பரப்பும் 10 குளியும் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.
★ பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0773273125
0771023585

## வீடு வளவு விற்பனைக்குண்டு

நுணாவில், பருத்தித்துறை பிரதான வீதியில் நுணாவில் சந்திக்கு மிகவும் அண்மையில் 3 பரப்புக் காணியில் மேல்மாடி வீடு சகல வசதிகளுடன் 10 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776765444

## மாபெரும் ஆடித் தள்ளுபடி

(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்குமிடையில்)

| | | |
|---|---|---|
| ✱ இரும்புக் கட்டில் | 6000/- | 4250/- |
| ✱ கணனி மேசை | 6000/- | 4250/- |
| ✱ கணனிக் கதிரை (alpha) | 6500/- | 5250/- |
| ✱ Steel அலுமாரி | 13500/- | 11250/- |
| ✱ சாப்பாட்டு மேசை | 16500/- | 13050/- |
| ✱ சாப்பாட்டுக் கதிரை | 4250/- | 3750/- |

தொடர்புகளுக்கு: 0773583879, 021 222 7892

## நாகபூஷணி திருமண சேவை
## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்ப 1976இல் பிறந்த செவ்வாய்க் குற்றமுள்ள லண்டனில்(PR)இருந்துவருகைதந்துள்ள நற்பண்புள்ள மணமகனுக்கு உடன் மணமகள் தேவை. சாதகம், படத்துடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

நாகபூஷணி திருமண சேவை
125, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(யாழ்.மாநகரசபை சுகாதாரப் பணிமனை முன்னால்)
தொ.பே: 0771387596, 0212229306
Fax:0212229306
துரிதமாகவும் மிகச் சிறந்த முறையிலும் யாவரும் எமது சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

## இலங்கையில் முதலாவது மற்றும் ஒரே ஒரு தலைமுடியியல் நிபுணத்துவ சிகிச்சை நிலையம் இதுவே

VCare இன்Dr.Hair ல் — DR.HAIR V Care (Pvt) Ltd.

தலைமுடி உதிர்தல்,ஆண்,பெண் வழுக்கை, பொடுகு,இளநரை,புழு வெட்டு,Psoriasis போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் இலங்கை இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 30,31 ஆகிய திகதிகளில் யாழ் கிளையிலும் ஓகஸ்ட் 3,4 ஆம் திகதிகளில் வவுனியாவிலும் பிரபல தலைமுடியியல் நிபுணர்களின் நேரடி ஆலோசனை நடைபெறவுள்ளது.
முற்பதிவுகளுக்கு: 021 2220288



தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா? விட்டுத்தள்ளுங்கள்!

21,Frazerr Avenue,Dehiwala. Phone:011 4874851,2735715
162/5,Jaffna Road, Vavuiya.Tel: 024 4924940
26,Brown Road, Jaffna.021 2220288

## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 879 திகதி: 28.07.2011

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| S | 19 | 29 | 30 | 33 | 39 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 12,869,756.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 1 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 329 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 16295 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 227016 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 33709 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 8,902,000.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 13,286,619.50

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுகள் அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.



தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்திராவில் கைதான ஈழ அகதிகளை பாதுகாப்பாக அழைத்து வரவேண்டும்

## முதல்வருக்கு சீமான் வலியுறுத்து

சென்னை,ஜூலை.30

ஆந்திராவில் கைது செய்யப்பட்ட ஈழ அகதிகள் 151 பேரை மனிதநேய முறையில் பாதுகாப்பாக தமிழகத்துக்கு அழைத்து வர தமிழக முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது:

தமிழ்நாட்டின் வத்தலகுண்டு அகதிகள் முகாமில் இருந்து 151 ஈழத் தமிழ் அகதிகள், தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்திற்காக கனடா செல்ல முயற்சித்து, ஆந்திராவிற் குத் தப்பிச் செல்ல முயன்றனர். பொலிஸாரால் துனி என்ற இடத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை விசாரிக்கச் சென்ற தமிழகப் பொலிஸ் அதிகாரிகள் அவர்களை துன்புறுத்தி வருவதாக தகவல் வந்துள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதா, அகதிகள் வாழ்வையும், முகாம்களின் சூழலையும் மேம்படுத்த தமிழக அரசின் மறுவாழ்வுத் துறையின் வாயிலாக விரிவானதொரு உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த நிலையில் தங்களுடைய பிள்ளைகளுக்கு வளமான, பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதி செய்ய அவர்களுக்கு புலப்படும் வழியில் வேறு ஒரு



நாட்டுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர்.

ஆனால் இதனை ஒரு பெரும் குற்றச்செயலாக இந்தநாட்டில் பாவிக்கப்படுவது ஏன் என்று புரியவில்லை. ஆகவே இந்த விவகாரத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா உடனடியாகத் தலையிட்டு, அவர்களை விடுவித்து மனிதநேய முறையில், பாதுகாப்பாக தமிழகத்திற்கு அழைத்து வரவேண்டும் என்று கூறியுள்ளார். (வ)

## ஈழத் தமிழருக்கு கருணாநிதி துரோகம்

# தி.மு.க. கூட்டணியிலிருந்து வெளியேறியது பா.ம.க.

சென்னை,ஜூலை 30

தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறுவது என நேற்றுமுன்தினம் நடைபெற்ற பா.ம.க. பொதுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

பா.ம.க. பொதுக்குழுக் கூட்டம் சென்னையில் அதன் நிறுவுநர் ராமதாஸ் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய பலரும் தி.மு.க. கூட்டணியை முறித்துக்கொள்ள வேண்டும் என்று கட்சித் தலைமையை வலியுறுத்தினர்.

பா.ம.க. மாநில பொதுச் செயலர் வடிவேல் ராவணன் பேசுகையில்:

ஈழத் தமிழர்களுக்கு திராவிட கட்சிகள் எதுவும் செய்யவில்லை. தி.மு.க. தலைவர் கருணாநிதியும் துரோகம் செய்துள்ளார்.

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் விஞ்ஞான பூர்வமாக ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி ரூபா ஊழல் நடந்துள்ளது.

தமிழர்களின் நலனுக்காக வாழ்த்து கொண்டிருக்கும் கட்சி பா.ம.க. எந்த திராவிடக் கட்சியையும் சாராமல் தனிமையில் செயற்பட்டு மக்களை நாம் காப்பாற்ற வேண்டும். அந்த வழியில் நாம் முன் செல்ல வேண்டும் எனக் குறிப்பிட்டார். (வ)


# தி.மு.க. செயற்குழு இன்று கூடுகிறது

அ.தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சென்னை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு முதலமைச்சர் ஜெயலலிதா முன்னிலை வகிக்கிறார். அ.தி.மு.க. அவைத் தலைவர் மதுசூதனன் தலைமை தாங்குகிறார்.

பொதுக்குழு உறுப்பினர்கள் சுமார் 275 பேர் மற்றும் அழைப்பு விடுக்கப் பட்டுள்ள சிறப்பு அழைப்பாளர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

கூட்டத்தில் கட்சி வளர்ச்சி, அரசுத் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்வது, அரசியல் நிலவரம் உட்பட பல்வேறு கருத்துக்கள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. இதில் முதலமைச்சர் சிறப்புரையாற்றவுள்ளார்.



லோக்பால் மசோதா தொடர்பான மத்திய அரசின் கபினட் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் முடிந்து நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி ஆகியோர் வெளியே வருகின்றனர்.

# ஈழத் தமிழர் சமவுரிமைத் தீர்வு சிறப்பு மாநாட்டில் சம்பந்தன்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தீர்மானம்

சென்னை,ஜூலை30

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தும் இலங்கைத் தமிழர் சம உரிமை அரசியல் தீர்வு சிறப்பு மாநாட்டுக்கு தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் உள்ளிட்ட பல தலைவர்களை பங்கேற்கச் செய்வது என்று கட்சிச் செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செய்ற்குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இன்று பிற்பகல் 2.30 மணியளவில் சென்னை பெரியார் திடலில் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் பங்கேற்கிறார். (வ)

# கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இந்தியர்கள் ஐவரும் விடுவிப்பு

டில்லி,ஜூலை30

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கப்பலில் இருந்த 5 இந்தியர்களை கடற்கொள்ளையர்கள் விடுவித்துள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி மேற்படி கப்பல் கடத்தப்பட்டது. இந்தக் கப்பலில் 5 இந்தியர்கள் உட்பட 16 ஊழியர்கள் இருந்தனர். மேற்படி ஐந்துபேருடன் ஊழியர் களையும் கடற்கொள்ளையர்கள் விடுவித்துள்ளனர் என்று குறிப்பிடப்படுகிறது.(வ)

# கலைஞர் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை,ஜூலை30

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் வீட்டில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகத் தொலைபேசிமூலம் சிறுவன் ஒருவனால் நேற்றுக் காலை வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் உள்ள 108 அம்புலன்ஸ் சேவை மையத்தின் தலைமை அலுவலகத்துக்கு இந்த மிரட்டல் போன் வந்துள்ளது. மேற்படி போனில் பேசியபோது மறுமுனையில் சிறுவனின் குரல் கேட்டதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. வெடிகுண்டு நிபுணர்களும், பொலிஸாரும், கலைஞரின் கோபாலபுரம் வீட்டுக்கு விரைந்தனர். அங்கு தீவிர சோதனை நடத்தினர். சோதனையில் அது வெறும் மிரட்டல் புரளி என்று தெரிய வந்தது.

பொலிஸார் அந்தத் தொலைபேசி எண்ணை வைத்து சிறுவனைத் தேடி வருகின்றனர். சிறுவர்கள் இதுபோன்று தொலைபேசியில் வெடிகுண்டு மிரட்டல் விடுவது அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. (வ)

# சமச்சீர் கல்விப் புத்தகங்களை ஒக. 5 இற்குள் வழங்கவேண்டும்

## மேல்நீதிமன்றம் உத்தரவு

சென்னை,ஜூலை30

சமச்சீர் கல்விப் பாடத் திட்டப் புத்தகங்களை அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்குள் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் வழங்கப்பட்டுவிட வேண்டும் என மேல்நீதிமன்றம் தமிழக அரசுக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

தி.மு.க. அரசு அறிமுகப்படுத்திய சமச்சீர் கல்வியை தற்போதைய தமிழக அரசு ரத்து செய்தது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், தமிழக அரசின் நடவடிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்த மேல் நீதிமன்றம், அனைத்து வகுப்புகளுக்கும் நடப்பு ஆண்டிலேயே சமச்சீர் கல்வியை அமுல்படுத்த வேண்டும் என்று கடந்த 18 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது.

மேலும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்குள் மாணவர்கள் அனைவருக்கும் சமச்சீர் பாடப் புத்தகங்கள் வழங்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது. சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு சார்பாக மேல் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

அதில் உயர்நீதிமன்றம் விதித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை விசாரணைக்கு ஏற்ற மேல் நீதிமன்றம், உயர் நீதிமன்றத் தீர்ப்புக்குத் தடை விதிக்க மறுத்துவிட்டது. மேலும் அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்குள் சமச்சீர் பாடப் புத்தகங்களை விநியோகிக்க உத்தரவிட்டது.(வ)

# டுபாய்க்கு செந்தூர கட்டைகள் கடத்தல் 3 பேர் கைது

தூத்துக்குடி,ஜூலை30

தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து டுபாய்க்குச் செந்தூரக் கட்டைகளைக் கடத்த முயன்ற சென்னையைச் சேர்ந்த 3 பேர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

இதன் மதிப்பு ரூ.1 கோடியே 12 லட்சமாகும். 11.12 மெற்றிக் தொன் எடை கொண்ட இந்த செந்தூரக் கட்டைகள் கடத்தப்பட இருந்தது உரிய நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.(வ)

# மரண தண்டனையை ரத்துசெய்யுமாறு நீதிமன்றத்தில் கசாப் மேன்முறையீடு

பாகிஸ்தான் தீவிரவாதி அஜ்மல் கசாப் தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்யக் கோரி மேல்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி மும்பையில் பத்து பாகிஸ்தான் தீவிரவாதிகள் பெரியளவிலான பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்டனர். 3 நாள்கள் நீடித்த இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட 9 பேரை பாதுகாப்புப் படையினர் சுட்டு வீழ்த்தினர். ஆனால் கசாப் மட்டும் உயிருடன் பிடிபட்டார்.

இவர் மீதான வழக்கை விசாரித்த மும்பை சிறப்பு நீதிமன்றம் கசாப்புக்கு மரண தண்டனை விதித்தது. இந்த வழக்கு பின்னர் தானாகவே மும்பை உயர் நீதிமன்றத்திற்குச் சென்றது. அங்கு தனது தண்டனையை ரத்து செய்யக்கோரி மேல் முறையீடு செய்தார் கசாப். ஆனால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

கசாப்புக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை கடந்த பெப்ரவரி மாதம் உயர்நீதி மன்றம் உறுதி செய்து உத்தரவிட்டது. இதையடுத்து தற்போது மேல் நீதிமன்றத்தில் மேல்முறை யீடு செய்துள்ளார் கசாப். மும்பையில்தான் அடைக்கப்பட்டுள்ள ஆர்தர் சாலை சிறை அதிகாரிகள் மூலம் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# மன அழுத்தப் பாதிப்புக்குள்ளானோர் உலக ரீதியில் இந்தியர்களே அதிகம்

மன அழுத்தத்தால் உலகளவில் இந்தியர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. உலக சுகாதார அமைப்பு நடத்திய ஆய்வொன்றில் மேற்படி தகவல் வெளியானது.

இது தொடர்பாக ஏறத்தாழ 18 நாடுகளை சேர்ந்த 89 ஆயிரம் பேரிடம் சுமார் 20 ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். உலகளவில் மன அழுத்தத் துக்கு 12.1 கோடி பேர் பாதிப் படைகின்றனர். இதில் இந்தியர்கள் மிக அதிக அளவாக 36 சதவீதம் வரை பாதிக்கப்பட்டுள்ளனர் என்று விவரம் தெரிய வந்துள்ளது.

மிகக் குறைவாக சீனர்கள் (12 சதவீதம்) பாதிக்கப்பட்டுள்ளனர். அதே போன்று பாதிப்படைவோரின் சராசரி வயது இந்தியர்களுக்கு 31.9 ஆகவும், சீனர்களுக்கு 18.8 ஆகவும் மற்றும் அமெரிக்கர்களுக்கு 22.7 ஆகவும் உள்ளது.

இந்த பாதிப்புக்குக் காரணமாக சோகம், மகிழ்வின்மை, குற்ற உணர்ச்சி அல்லது குறைந்த சுய மதிப்பீடு, தூக்கம் பாதிப்பு, குறைந்த ஆற்றல் மற்றும் கவனக்குறைவு ஆகியவை கூறப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
30 ஜூலை 2011 சனிக்கிழமை

# மரபுரிமை மிக்க இடங்களைப் பாதுகாக்க கிராம மட்டத்தில் குழுக்கள் நியமனம்

## கலாநிதி செனரத் திசா நாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 30

மரபுரிமை மிக்க இடங்கள் அழிவடைவதைத் தடுப்பதற்கான குழுக்களை கிராம மட்டத்தில் நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் குழுக்கள் அடுத்த மாதம் முதல் நியமிக்கப்படவுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் கலாநிதி செனரத் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதேவேளை கிராம மட்டத்தில் மரபுரிமை மிக்க இடங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலான சம்பவங்கள் இடம் பெறும் போது அவற்றைப் பதிவு செய்வதற்கும் அது பற்றிய தகவல்களைத் தொல்பொருள் ஆய்வுத் திணைக்களத்திற்கு வழங்கும் வகையிலும் இந்தக் குழுக்கள் செயற்படவுள்ளதாகவும் நாட்டிலுள்ள மரபுரிமை மிக்க இடங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் பொதுமக்களையும் இணைந்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் அத்தகைய இடங்கள் அழிவுக்குள்ளாகும் சம்பவங்கள் இடம் பெறுவதனை தடுக்கும் வகையில் பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்றை நியமிக்குமாறு பாதுகாப் புச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக கலாநிதி செனரத் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இத்தகைய மரபுரிமை மிக்க இடங்களில் அதிகமாக அச்சுறுத்தல் காணப்படுகின்ற பிரதேசங்களுக்கு கூடுதல் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்

இதேவேளை இந்த நடவடிக்கையில் பொலிஸாருடன் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களமும் இணைந்து செயற்படுவதற்கான அனுமதியைப் பெற்றுத்தருமாறு பாதுகாப்பு அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ற)

## தடை செய்யப்பட்ட உபகரணம் மூலம் மீன்பிடிக்கத்தடை

கொழும்பு, ஜூலை 30

தடை செய்யப்பட்ட உபகரணங்கள் மூலம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகக் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக மீனவர்களைத் தெளிவுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் தயா தர்மப்பிரிய தெரிவித்துள்ளார்.

மேலும் சம்பிரதாய ரீதியிலான மீன்பிடி முறைகளுக்கு சட்டவிரோதமான மீன்பிடி முறைகள் மூலம் பாதிப்பு ஏற்படுவதாகப் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஜூலை 30

அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும். எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிமை தேர்த்திருவிழாவும் மறு நாள் சனிக்கிமை சமுத்திரத் தீர்த்தத்திரு விழாவும் நடைபெறும். (ற-236)

***

மீசாலை வடக்கு வேம்பிராய் சிவ பூதவராஜர் ஆலயத்தில் ஆடிப்பூர திருவிழா எதிர்வரும் இரண்டாம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அம்பாளுக்கு விஷேட அபிஷேகம் நடைபெறும். கிரியாசிரோமணி சிவஸ்ரீ ந. இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் ஆடிப்பூர விழா நடைபெறும் (ற-207)

***

தென்மராட்சி, ஜூலை 30

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலய நவநாள் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் ஆறாம் திகதி சனிக்கிழமை திருப்பலிப் பூசையும், நற்கருணை ஆராதனையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச்சோரூப பவனியும் இடம்பெறும்.

நவநாள் ஆராதனைகளை பங்குத் தந்தை எம். யேசுரத்தினம் நடாத்துவார். (ற-207)

தென்மராட்சி, ஜூலை 30

சாவகச்சேரி கிராம்புவில் படையாண்டாள் தோட்டம் கந்தசுவாமி ஆலய பெரும் திருவிழா எதிர்வரும் நான்காம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறு நாள் சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்

திருவிழா கிரியைகள் ''கிரியசிரோன்மணி சிவஸ்ரீ ந.இராஜேஸ்வரன் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ற-207)

## வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜூலை 30

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 879 ஆம் இலக்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் "S" என்ற ஆங்கில எழுத்தும் 19/29/30/33 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 39 தெரிவாகியது.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. நான்கு இலக்கங்களும் சரியாக வைத்திருந்த ஒருவருக்கு முதலாம் பரிசாக பத்துலட்சம் ரூபா கிடைக்க வுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 04 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 329 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 16,295 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 227,016 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

ஆங்கில இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 33,709 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)

## மரண அறிவித்தல்



### திருமதி அடைக்கலநாயகி பூமணி லூயிஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல.219, ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அடைக்கலநாயகி பூமணி லூயிஸ் நேற்று 29.07.2011 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற றிச்சேட் லூயிஸ் (RETIRED STORE KEEPER, FOOD CONTROL DEPT. ) அவர்களின் அன்பு மனைவியும் சாந்தினி பொனிபஸ் (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை), பத்மினி லூயிஸ் (நிதி உதவியாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும், றொபின் பொனிபஸின் (முன்னாள் சிறைச்சாலை அலுவலர்) அன்பு மாமியும் DR.B.L. லக்ஸ்மன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), நறூசன் (பல்கலைக்கழகம், லண்டன்), யூட் கேதீசன் (ACCA மாணவன், கொழும்பு) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான M.M.அலெக்சாண்டர் (மட்டக்களப்பு), தங்கம்மா, புளோறன்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.07.2011) சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.219, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(6332) (39-24-53)

தகவல்
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு கிறிஸ்தோப்பர்

(குருநகர் மருத்துவமனை ஊழியர்)



நாவற்குழி 5 வீட்டுத் திட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட கதிரவேலு கிறிஸ்தோப்பர் 28.07.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் இரா சம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற ஆசிர்வாதம் மற்றும் ஜானகி தம்பதியரின் மருமகனும் நிர்மலா வின் அன்புக் கணவரும் சோஜன், டிலக் சன், டில்சான் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜேந்திரன், இந்திராணி, ஜெனிட்டா, நோனாதிரேசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் முருகேஸ்வரி, சுப்பிரமணியம்,காலஞ்சென்ற இராசயைா மற்றும் மலர், இரவீந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஜோர்ஜ் டக்ளஸ், புளோரிடா குமுதினி, புண்ணியமூர்த்தி, புஸ்பராசா ஆகியோரின் சித்தப்பாவும் வசந்தா, மலர், மஞ்சு, றெஜீனா, வசந்தகலா காலஞ்சென்ற சுரேஸ் குமார் மற்றும் ஜோர்ஜ்குமார் கனிஸ்டா, நிரஞ்சனா, ஆகாஸ் ஆகி யோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (30.07.2011) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நாவற்குழி ஊரியான் மயானத்தில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5 வீட்டுத்திட்டம்,
நாவற்குழி.

(6331)

நண்பன் -
இ.கிறிஸ்ரி செல்வநாயகம்
குடும்பத்தினர்

### திருமதி சுப்பிரமணியம் கண்மணி



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி சுப்பிரமணியம் கண்மணி கடந்த 27.07.2011 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - அம்மாக்கா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராசா, நல்லதம்பி, தவமணி, றோசம்மா, அருளம்மா ஆகியோரின் சகோதரியும் தில்லை நடராசா, சரஸ்வதி, செல்வநாயகம் ஆகியோரின் மைத்துனியும், சண்முகநாதன் (ஜேர்மனி), சற்குணதேவி, சரோஜினிதேவி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயக்குமாரன், அசோகன் (இத்தாலி), ஜெயராணி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், செல்வஜெயன், சாகாணா, பானுசன், மதுசன், மிதுசன், அபிராம், அபிநயா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(அ/574776)

தகவல்
ஜெயக்குமாரன் (மருமகன்),
ச.தில்லைநடரசா(மைத்துனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபிய போராட்டக் குழுவின் தளபதி யூனூஸ் படுகொலை

## கொலையாளிகள் கடாபியுடன் தொடர்புடையவர்களா?

திரிபோலி, ஜூலை 30

லிபியாவில் கேணல் கடாபிக்கு எதிராகப் போராடும் போராட்டக்குழுத் தளபதி அப்துல் பதா யூனூஸ் கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்டதை தேசிய போராட்டக் குழுக் கவுன்சில் தலைவர் முஸ்தபா அப்துல் ஜலீல் உறுதிப்படுத்தினார்.

போராட்டக் குழுத் தளபதி யூனூஸ் பல ஆண்டுகள் கடாபியின் நண்பராக இருந்தவர். எனவே அவர் கடாபியுடன் ரகசிய உறவு வைத்து இருந்ததாக சந்தேகிக்கப்பட்ட நிலையிலேயே கொல்லப்பட்டுள்ளார்.

யூனூஸை கொலை செய்த கும்பலின் தலைவரும் கைது செய்யப்பட்டு உள்ளார். கொலை செய்யப்பட்ட அப்துல் பதா யூனூஸ் இராணுவ நடவடிக்கை குறித்து விளக்கம் தர வேண்டும் எனப் போராட்டக்குழுக் கவுன்சில் கூறி இருந்தது.

இந்தநிலையில் - அவர் உயர் தலைவர்களைச் சந்திப்பதற்கு முன்னர் கொலை செய்யப்பட்டுள்ளார். யூனூஸை கொலை செய்தவர்கள் கடாபியுடன் தொடர்பு உள்ளவர்களா என் பதை போராட்டக்குழுத் தலை வர் தெரிவிக்கவில்லை. போராட் டக்குழு தளபதியுடன் அவரது இரு உதவியாளர்கள் முகமது கமீஸ் மற்றும் நசீர் அல் மத் கரும் கொல்லப்பட்டனர்.

போராட்டக்குழுத் தளபதி கொல்லப்பட்ட விவரத்தைப் பற்றி பெங்காசி ஹொட்டலில் ஜலீல் தெரிவிக்கும் போது அங்கு ஓடி வந்த ஒரு நபர் துப்பாக்கியால் வானத்தில் சுட்டார் என்ற தகவலையும் கூறினார்.

# ஆப்கனில் மனித வெடிகுண்டுத் தாக்குதல்; பி.பி.சி. செய்தியாளர் உட்பட 22 பேர் பலி

காபூல்,ஜூலை 30

ஆப்கானிஸ்தானில் மூன்று இடங்களில் நடந்த தற்கொலைப்படைத் தாக்குதலில், பி.பி.சி. தொலைக் காட்சிச் செய்தியாளர் உள்பட 22 பேர் பலியாகினர். ஆப்கானிஸ்தானின் உரூஸ்கான் மாகாணத்தில் தலிபான்களை வேட்டையாடுவதற்காக, நேட்டோப் படையினர், ஆப்கா னிஸ்தான் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் டிரின்கோட் என்னும் நகரில் மூன்று முறை மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடந்தது.

இந்தத் தாக்குதலில் குழந்தைகள் மற்றும் இப்பகு தியில் செய்தி சேகரிக்கச் சென்ற ஆப்கன் பிரிவு பி.பி.சி. தொலைக் காட்சிச் செய்தியாளர் ஓமித்கஹா வல்காக் என்பவர் உள்பட 22 பேர் பலியாகினர். மேலும் 35 பேர் படுகாய மடைந்தனர். இத்தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள் ளனர்.

கடந்த 10 ஆண்டுகளாக இந்தப் பகுதியில் தொடர்ந்து தாக்குதல்கள் நடந்து வருகின்றன. எதிர்வரும் 2014ஆம் ஆண்டுக்குள் அமெரிக்கா தலைமையிலான பன்னாட் டுப் படைகள் ஆப்கனை விட்டு வெளியேறவுள்ள நிலையில் தலி பான்களின் தாக்குதல் மேலும் தீவிர மடைந்து வருவது கவலையளிப்பதாக உரூஸ்கான் மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் மிலாத் முடாஸர் கூறினார்.

# சிரியாவில் பாதுகாப்பு படையினர் தாக்குதல்; எண்மர் பலி

டமாஸ்கஸ், ஜூலை 30

சிரியத் தலைநகர் டமாஸ்கஸிற்கு அருகிலுள்ள கனாகர் நகரில் அந்த நாட்டுப் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் குறைந்தது பேர் 8 கொல்லப்பட்டுள்ளதாக அங்கி ருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படையினர் பீரங்கிகள் மூலம் முன்னேறுவதைத் தடுக்க உள்ளூர் வாசிகள் தெருக்களில் டயர்களை எரித்து தடை ஏற்படுத்தியதாகவும் இதன் போது இடம்பெற்ற மோதலில் பலர் காயமடைந்துள்ளதுடன் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



மாஸ்கோவில் சர்வதேச தடகள கூட்டமைப்பின் தலைவர் லாமைன் டையக்,ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின்(இடது) உடன் முக்கியமான பேச்சு நடத்தினார்.

# கொங்கோவில் படகு விபத்து 100 பேரைக் காணவில்லை

ஆபிரிக்கக் கண்டத்தின் மத்தியில் உள்ள கொங்கோ நாட்டின் ஈக்குவடோர் மாகாணத்தில் உள்ள ஷுயாபா ஆற்றில் நேற்றுமுன்தினம் 220 பயணிகளுடன் புறப்பட்டுச் சென்ற படகு செல்லும் வழியில் மற்றொரு படகுடன் பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தின்போது 220 பேருடன் சென்ற படகு ஆற்றில் மூழ்கியது.

தகவல் அறிந்ததும் அங்கு விரைந்து வந்த மீட்புக் குழுவினர் உடனடியாக 105 பேரை மீட்டனர். சிலர் நீந்திக் கரை சேர்ந்தனர். அவர்கள் தவிர 100 பேரைக் காணவில்லை. எனவே அவர்கள் அனைவரும் தண்ணீரில் மூழ்கி இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்த விபத்து தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது.




# இப்போது விற்பனைக்கு

## போராளிகளின் கால்களில் விழும் அரசு


"அரசுக்கு வேறு வழியில்லை. அவர்கள் எங் களின் கால்களில் விழவும் தயாராய் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் எங்களிடம் இருந்து அவர்கள் விரும்பும் வாக்கு மூலம் மட்டும் தான்" என்றார் அந்தப் போராளி.

"அவர்கள் தப்பிப்பதற்கு எங்களைப் பயன்படுத்தப் பார்க்கிறார்கள்" என்றார் சிறையில் உள்ள மற்றொரு போராளி.

சிறைகளிலும் தடுப்பிலும் உள்ள மூத்த போராளிகளை விசாரணைக்கு என்று அழைக்கும் பயங்கரவாத தடுப்புப் பிரிவு அதிகாரிகள் அவர் களிடம் கேட்பதெல்லாம், வன்னியில் - முள்ளி வாய்க்காலில் இராணுவத்தினர் நடத்திய தாக்கு தலில் பொதுமக்கள் எவரும் கொல்லப் படவில்லை என்ற வாக்கு மூலம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்.ஜோன்ஸ் வீரனுக்கு தங்கப்பதக்கம்



யாழ்ப்பாணம்,ஜூலை 30

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற தடகளப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் எ.அனோஷன் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 800 மீற்றர், 1500 மீற்றர், 400 மீற்றர் தடைதாண்டல் போட்டிகளில் முதலாமிடத்துக்கு வந்து தங்கப் பதக்கங்களைப்பெற்றார். (ஐ-23)

## கூடை பந்தாட்டத்தில் சிறந்த வீராங்கனை



யாழ்ப்பாணம்,ஜூலை 30

பிரதேச செயலகங்களுக்கு இடையே இடம்பெற்ற மாவட்ட மட்டத்திலான பெண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில் சிறந்த வீராங்கனையாக ப.ராஜசோபனா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தேசிய மட்டத்தில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவில் மூன்றாமிடத்தைப் பெற்ற வடமாகாண அணியின் உப தலைவராவார். (ஐ-23)

## பண்டத்தரிப்பு ஜசிந்த வீரன் சாதனை



வடமாகாணப்பாடசாலைகளுக்குஇடையிலான மெய்வன்மைப் போட்டியில் 15 வயதுப் பிரிவின் கீழ் ஈட்டி எறிதல் நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தை பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை மாணவன் றெனால்ட் ஜோன்சன் பெற்றார். வடமாகாணத்தில் ஈட்டி எறிதலில் 43.96 மீற்றர் தூரம் எறிந்து வரலாற்றில் புதிய சாதனையை அவர் ஈட்டியுள்ளார். (ஐ-302)

# துணுக்காய் வலயப் பாடசாலைகள் முதல் முறையாக பதக்கங்கள் சுவீகரித்தன

யாழ்ப்பாணம்,ஜூலை 30

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விவரங்கள் வருமாறு:

எஸ்.சாவிந்தன் 11 வயது பிரிவு 75 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் (யோகபுரம் மகாவித்தியாலயம்).

ரி.தேவராஜன் 19 வயதுப் பிரிவு 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப்பதக்கம் (கற்சிலை மடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

ஆர்.விஜயகுமார் 17 வயதுப் பிரிவு 800 மீற்றர், 1500 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் வெள்ளிப்பதக்கம் (முத்துஐயன் கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை).

ரி.நிவேதா 17 வயதுப் பிரிவு 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் (ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்).

வி.டிலக்சனா 19 வயதுப் பிரிவு 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் வெள்ளிப்பதக்கம் .

எம்.சுகந்தி 21 வயதுப்பிரிவு 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப்பதக்கத்தையும் 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுள்ளார். (பாண்டியன்குளம் மகாவித்தியாலயம்).

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான மென்பந்துப் போட்டியில் குமுளமுனை மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தையும், 19 வயது பிரிவு ஆண்களுக்கான கபடிப்போட்டியில் முல்லைத்தீவு மகாவித்தியாலய அணி மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளது. இரண்டு பாடசாலைகளும் முதன் முறையாக பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-23)

# நேபாளம் சென்ற அணியில் மன்னார் வீரர் சஜீவனும்

மன்னார்,ஜூலை 30

நேபாளத்துக்குச் சென்றுள்ள 17 வயதுப் பிரிவு இலங்கை அணியில் மன்னார் வீரர் சத்தியசீலன் சஜீவன் இடம்பெற்றுள்ளார்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் பாடசாலையில் தரம் - 10இல் கல்விபயிலும் இவர் இலங்கை அணியில் இடம்பிடித்து நோபாளம் சென்றுள்ளார்.

சஜீவனின் பயணத்துக்கான உதவித் தொகையாக 30 ஆயிரம் ரூபாவை மன்னார் அரச அதிபர் நா.வேதநாயகன் அவரது தாயாரான மேரி மரிஸ்ரலாவிடம் வழங்கினார்.



மன்னார் மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளர் ஜனாப் அஸ்வின் விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர் என்.சிவலிங்கத்துடன் கலந்துரையாடியதன் பயனாக இந்த உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட உதவிச் செயலாளரும், பொலிஸ் அதிகாரியுமான கே.காந்தன், மன்னார் மாவட்ட உதைபந்தாட்டச்சங்க செயலாளர் அன்ரனிடம் இருந்து 7 ஆயிரம் ரூபா பெற்று வீரருக்கு வழங்கியுள்ளார்.

நேபாளம் செல்லும் குழுவில் இடம் பெறும் ஒரே தமிழர் சஜீவன் என்பது குறிப்பிடத்துக்கது. (ஐ)

# ஆசிரியர்களுக்கு தனியாக விளையாட்டுப் போட்டி ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை 30

அகில இலங்கை ரீதியாக ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. இது தொடர்பாகச் சுற்று நிருபத்தைக் கல்வி இசுறுபாய அமைச்சின் உடற்கல்வி விளையாட்டு அலகுக் கல்விப்பணிப்பாளர் ரோகண கருணாரத்ன சகலபாட சாலைகளுக்கும் அனுப்பியுள்ளார். எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதிமுதல் நான்கு தினங்கள் நுவரெலியா மக்கள் விளையாட்டு மைதானத்தில் இந்த விளையாட்டுப் போட்டி இடம்பெறும்.

25-30, 30-35, 35-40, 40-45, 45-50, 50 வயதுக்குமேல் என வயது எல்லைகளில் போட்டிகள் நடத்தப்படும். குறிப்பிட்ட வயது எல்லைக்குரிய ஒருவர் மூன்று நிகழ்ச்சிகளில் பங்கு பற்றமுடியும். போட்டியாளர்கள் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆள்ப் பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச் சீட்டையும் பிறப்புச்சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும். தனிப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்களைக் கொண்டு உறுதிப்படுத்தி "கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி விளையாட்டு), கல்வி அமைச்சு, இசுருபாய பத்திரமுல்ல" என்ற முகவரிக்கு அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்க வேண்டும். குழுப் போட்டிக்கான விண்ணப்பங்களை வலயக்கல்விப் பணிப்பாளர் அல்லது பிரதிக் கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி பணிப்பாளர் (உடற்கல்வி-விளையாட்டு) உறுதிப்படுத்தல் வேண்டும். (ஐ-23)

# ஸ்ரான்லி ம.விக்கு 60 சட்ட வேலிகள்

வடமாகாணக் கல்வித்திணைக்களத்தால் விளையாட்டுத்துறையை வளர்த்தெடுக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளில் ஒரு பகுதியாக அரியாலை கனகரத்தினம் மகாவித்தியாலயத்துக்கு அறுபது சட்டவேலிகள் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான பாடசாலைகளில் சட்ட வேலிகள் (தடைதாண்டல்) இல்லாத நிலைமை காணப்படுகின்றது. அரியாலை கனகரத்தினம் மகாவித்தியாலயத்துக்கு இந்தச் சட்டவேலிகள் வழங்கப்பட்டதன்மூலம் நல்லூர்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகள் இந்தப் பாடசாலையில் நடைபெறுவதனால் அதிக பயன்பாடு உடைய செயற்பாடாக அமையும் என உடற்பயிற்சி ஆசிரியர்கள் தெரிவிக்கின்றார்கள். (ஐ-86)

## ஆண்டு நிறைவை ஒட்டி விளையாட்டுப் போட்டி

வடமராட்சி,ஜூலை 30

புலோலி, கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி இன்று சனிக்கிழமை நடத்தப்படவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் மரதன் ஓட்டப்போட்டி, கயிறு இழுத்தல் போட்டி என்பன இடம்பெறும். இந்தப் போட்டிகளில் வெளியாரும் வெளிக் கழகங்களும் பங்குபற்றவுள்ளன.

காலை 6.30 மணிக்கு ஆண்களுக்கென 12 மைல் மரதன் ஓட்டப் போட்டி இடம் பெறவுள்ளது. மாலை 5 மணிக்கு வெளிக் கழகங்களுக்குக்கிடையிலான கயிறு இழுத்தல் போட்டி நடைபெறும். (ஐ-236)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரு ஆட்டங்கள் இன்று இடம் பெறும்.

உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் இந்த ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* பி.ப. 3.45 - அரியாலை ஐக்கிய வி.க எதிர் புத்தூர் விக்னேஸ்வர வி.க.
* பி.ப. 5 மணி- குருநகர் சென் றோக்ஸ் வி.க. எதிர் பாசைஷயூர் சென். அன்ரனிஸ் வி.க. (ஐ-23)

## தேசிய மட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

37 ஆவது தேசிய மட்ட ஆண்,பெண் இருபாலாருக்குமான ஹொக்கி, கராத்தே, மேசைப் பந்தாட்டம் ஆகிய போட்டிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

ஹொக்கிப் போட்டி மாத்தளையிலும், கராத்தே, மேசைப் பந்தாட்டப் போட்டி கொழும்பிலும் இடம்பெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்கு கொள்வதற்காக வடமாகாண அணியினர் நேற்றுக் கொழும்பு சென்றுள்ளனர். (ஐ-23)

## புலோலியில் இன்று விளையாட்டு விழா

வடமராட்சி,ஜூலை 30

புலோலி அறிவகம் சனசமூக நிலையதின் 56 ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி இன்று சனிக்கிழமை நடத்தப்படவுள்ள விளையாட்டு விழாவில் பல்வேறு போட்டிகள் இடம்பெறவுள்ளன.

காலை 6.மணிக்கு சனசமூக நிலைய பெண் அங்கத்தவர்களுக்கான 5 கிலோ மீற்றர் சைக்கிளோட்டப்போட்டி, 6.30 மணிக்கு வெளிக்கழகங்களுக்கிடையிலான 10 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. வெளிக் கழகங்களுக்கென அன்றைய தினம் பி.ப 5 மணிக்கு 4 x 200 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டி, 5.15 மணிக்கு 1000 (ஆயிரம்) மீற்றர் ஓட்டப்போட்டி 5.30 மணிக்கு கயிறு இழுத்தல் ஆகியன நடைபெறவுள்ளன. (ஐ-236)

## யாழ்.பல்கலையில் விளையாட்டு அணி படம் எடுத்தல்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

2011 ஆம் ஆண்டுக்கான யாழ்.பல்கலைக்கழக அனைத்து விளையாட்டு அணிகளுக்குமான புகைப்படங்களை இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் எடுக்கத் தீர்மானித்திருப்பதால், பல்கலைக்கழக விளையாட்டு அணி உறுப்பினர்கள் அனைவரும் இந்த நிகழ்வுக்குச் சமுகமளிக்குமாறு யாழ்.பல்லைக்கழக விளையாட்டு அவை கேட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனங்கவர்ந்த வீரர் விருது பரிந்துரையில் சங்கக்கார

டுபாய், ஜூலை 30

ரசிகர்களின் மனம் கவர்ந்த வீரருக்கான விருதுக்கு இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் சங்கக்காரவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) சார்பில், ரசிகர்களின் மனம் கவர்ந்த வீரருக்கான விருது ஆண்டு தோறும் வழங்கப்படுகின்றது. கடந்த ஆண்டு இந்த விருதை இந்திய 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் பெற்றார்.

இந்த முறை இந்த விருதுக்கு, இந்திய அணித்தலைவர் டோனி, தென்னாபிரிக்காவின் அம்லா, மேற்கிந்தியத் தீவுகளின் கிறிஸ் கெய்ல், முன்னாள் இலங்கை அணித்தலைவர் சங்கக்கார, இங்கிலாந்தின் ரொரட் உள்ளிட்ட ஐந்து வீரர்களின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவர்களை முன்னாள் மேற்கிந்தியத்தீவுகளின் அணித்தலைவர் கிளைவ் லொய்ட், பாகிஸ்தானின் சகிர் அப்பாஸ், இங்கிலாந்தின் மைக் கேட்டிங், தென்னாபிரிக்காவின் போல் அடம்ஸ், நியூஸிலாந்தின் டேனி மோரிசன் உள்ளிட்டோர் அடங்கிய குழு பரிந்துரை செய்தது.

இந்த ஐந்து வீரர்களின் பெயர் ஐ.சி.சி இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதில் உலகெங்கிலும் உள்ள ரசிகர்கள், தங்களுக்கு பிடித்தமான வீரர்களுக்கு ஆதரவு அளிக்கலாம். இதற்கான கால அவகாசம் எதிர்வரும் ஒகஸ்ட் 25 ஆம் திகதி வரை அளிக்கப்பட்டுள்ளது. இதில் வெற்றி பெற்றவர்களின் விவரம் எதிர்வரும் செப்ரெம்பர் 12 ஆம் திகதி லண்டனில் நடக்கும் ஐ.சி.சி விருது வழங்கும் விழாவில் அறிவிக்கப்படும்.

இது குறித்து ஐ.சி.சி தலைமை அதிகாரி ஹரூன் லார்கட் கூறுகையில், கடந்த ஆண்டு இந்த விருந்தை சச்சின் பெற்றார். இது போன்று செல்வாக்கு மிக்க வீரர் இந்திய அணியில் இருப்பது இந்தியாவுக்கு தான் பெருமை. இன்னும் சில தினங்களில் லண்டனில் நடக்கும் ஐ.சி.சி விருது வழங்கும் விழாவில், மக்கள் விரும்பும் மற்றொரு கிரிக்கெட் வீரர் யார் என்பது தெரிந்து விடும் - என்றார். (15)

# சானியா தோல்வி



வோஷிங்டன், ஜூலை 30

அமெரிக்காவில் பெண்களுக்கான டபிள்யூ.டி.ஏ.சிட்டி ஓபன் ரெனிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதன் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, கனடா வீராங்கனை ஸ்டெபானி டுபாயிசை எதிர்கொண்டார்.

இதில் கடைசி வரை போராடிய சானியா மிர்சா 5-7, 4-6 என்ற நேர் செட் கணக்கில் தோல்வி அடைந்து வெளியேறினார். சானியா மிர்சா கடைசியாக விளையாடிய 7 தொடர்களில் 6 முறை முதல் சுற்றோடு வெளியேறி உள்ளார்.(15)

# எனக்கும் ஓர் இடம் வேண்டும்

டெல்லி, ஜூலை 30

உள்ளூர் போட்டிகளில் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, விரைவில் டெஸ்ட் அணியில் இடம் பிடிப்பேன் என்று இந்திய வீரர் ரோஹித் சர்மா நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்திய அணியின் இளம் மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் ரோஹித் சர்மா (24 வயது). இதுவரை 66 ஒரு நாள் (1505 ஓட்டங்கள்), 21 சர்வதேச 'ரி-20 (414 ஓட்டங்கள்) ஆட்டங்களில் பங்கேற்றுள்ள இவருக்கு டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட வேண்டும் என்பது நீண்ட நாள் கனவு.

இது குறித்து ரோஹித் சர்மா கூறியதாவது:- இந்திய அணிக்காக டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட வேண்டும் என்பது நீண்ட நாள் கனவு மட்டுமல்ல, இலட்சியமும் கூட. இதற்காக கடுமையாக பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையில் டெஸ்ட் அணியில் இடம் பிடிப்பது என்பது எளிதான காரியமல்ல.

ஏனெனில் திறமையான வீரர்கள் நிறைய இருப்பதால், டெஸ்ட் அணியில் இடம் பிடிக்க கடுமையான போட்டி நிலவி வருகின்றது. இந்திய அணியின் முன்னணி 7 துடுப்பாட்ட வரிசையில் நிறைய வீரர்கள் தங்களது இடத்தை தக்க வைத்துக் கொண்டனர். ஒரு சில இடத்திற்கு மட்டும் சுமார் ஐந்துக்கு மேற்பட்ட வீரர்களிடையே போட்டி நிலவி வருகின்றது.

கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிராக நாக்பூரில் நடந்த டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடும் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் பயிற்சியின் போது ஏற்பட்ட காயம் காரணமாக அந்த பொன்னான வாய்ப்பு வீணானது. இது மிகவும் ஏமாற்றம் அளித்தது. ஆனால் காயம் என்பது நமது கையில் இல்லை. இது இயற்கையாக நிகழக்கூடிய ஒன்று.

சமீபத்திய லோர்ட்ஸ் டெஸ்டில் கூட, இந்திய வேகப்பந்துவீச்சாளர் சகீர்கானுக்கு எதிர்பாராத விதமாக காயம் ஏற்பட்டதால், பாதியில் விலக நேரிட்டது. இதில் யார் மீதும் குற்றம் சுமத்த முடியாது. தற்போது எனது கவனம் முழுவதும் இங்கிலாந்துக்கு எதி ரான ஒரு நாள் தொடர் மீது உள்ளது. இதில் வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்திய அணியின் வெற்றிக்கு கைகொடுக்க முயற்சிப்பேன். இதற்காக தற்போது மும்பையில் பயிற்சி மேற்கொண்டு வருகிறேன்.



ஒருநாள் தொடருக்கு முன்னர், பயிற்சி போட்டியில் விளையாட இருப்பதால், இங்கிலாந்தின் தட்ப வெப்பநிலை, மைதானத்தின் தன்மைக்கேற்ப மாற்றிக் கொள்ள முடியும் என்று நம்புகிறேன். சமீபத்திய மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் எனது துடுப்பாட்டம் திருப்தி அளித்தது. மூத்த வீரர்கள் இல்லாத நிலையில் ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியது உற்சாகம் அளிக்கின்றது. இதே போல இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலும் சாதிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது.

சமீபத்தில் நடந்த நான்காவது ஐ.பி.எல் தொடர் எனக்கு சிறந்த அனுபவம் தந்தது. இந்த அனுபவம் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக சாதிக்க உதவியது. லோர்டஸ் டெஸ்டில் இந்திய அணி தோல்வி அடைந்தது வருத்தமான விடயம். இருப்பினும் இதுகுறித்து அதிகம் கவலைப்படத் தேவையில்லை. இந்திய வீரர்கள் விரைவில் எழுச்சி பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

ஏனெனில் சமீபத்தில் தென்னாபிரிக்க சுற்றுப்பயணம் செய்த இந்திய அணி, செஞ்சூரியனில் நடந்த முதல் டெஸ்டில் தோல்வி கண்டது. பின்னர் டர்பனில் நடந்த இரண்டாவது டெஸ்டில் எழுச்சி கண்ட இந்திய அணி வெற்றி பெற்று, தொடரை சமன் செய்தது. எனவே இங்கிலாந்துக்கு எதிராக இந்திய வீரர்கள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி எழுச்சி பெறுவார்கள் என்று ரோஹித் சர்மா தெரிவித்தார். (15)

# மிஷ்பாவிடம் தலைமைப் பொறுப்பு

இஸ்லாமபாத்,ஜூலை 30

சிம்பாப்வே அணியுடன் விளையாடும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு மிஷ்பா- உல் - ஹக் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். சிம்பாப்வேயுடன் பாகிஸ்தான் விளையாடும் டெஸ்ட், ஒரு நாள் மற்றும் 'ரி -20' மூன்று வித போட்டிகளுக்கும் மிஷ்பா-உல்-ஹக் அணித் தலைவராக இருப்பார்.

16 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியில் புதிய வீரர்கள் ரமிஸ்ராஜா, சுழற்பந்து வீச்சாளர் யாஷிர் ஷா, வேகப்பந்து வீச்சாளர் ஐசஸ்சீமா ஆகியோர் சேர்க்கப்பட்டு உள்ளனர்.

செப்டெம்பர் மாதம் சிம்பாப்வே செல்லும் பாகிஸ்தான் அணி ஒரு டெஸ்ட், 3 ஒரு நாள் போட்டி, 2 'ரி-20' ஆட்டங்களில் ஆடுகின்றது. இந்தத் தொடரில் மூத்த வீரர்கள் உமர்குல், வகாப் ரியாஸ், அப்துல் ரகுமான் சேர்க்கப்படாமல் ஓய்வு தரப்பட்டு உள்ளது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைமைத் தேர்வாளர் மோஷின் கான் தெரிவித்துள்ளார்.(15)

# ஆர்ஜென்டீனா ஆட்டம் சரியில்லை

இந்த ஆண்டு கோப்பா அமெரிக்கா கால்பந்து போட்டியில் ஆர்ஜென்டீனா அணி மோசமான தோல்வியை தழுவியது.

கோப்பா பந்தயத்தில் ஆர்ஜென்டீனாவுக்கு ஏற்பட்ட மோசமான அனுபவம் என்னை மிகவும் பாதித்து உள்ளது என்று பார்சிலோனா நட்சத்திரம் லியோனல் மெஸ்சி கவலை தெரிவித்து உள்ளார்.

2 ஆண்டுகளில் கோப்பா அமெரிக்கா கிண்ண போட்டியில், ஆர்ஜென்டீனா அணி சம்பியன் ஆக, மெஸ்சி உதவுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கோப்பா கால் இறுதியில் பெனால்டி ஷொட்டில் உருகுவேயிடம் ஆர்ஜென்டீனா தோற்றது. இந்த தோல்வி மெஸ்ஸியை உருக்கி உள்ளது.

இந்தத் தோல்வியை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நினைத்ததற்கு மாறாக நடந்து உள்ளது. நாங்கள் முன்னோக்கிச் செல்ல விரும்புகிறோம் என்று மெஸ்ஸி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முக்கியமான ஆட்டங்கள் வருகின்றன உலகக் கிண்ண போட்டிக்கு தகுதி பெற நாங்கள் தயாராக வேண்டும் என்றும் தெரிவித்தார். பார்சிலோனா கழகத்தில் சிலி வீரர் அலெக்சிஸ் சான்செஸ் புதிதாக வந்துள்ளார். இதனை பெரிதும் வரவேற்பதாக மெஸ்ஸி தெரிவித்தார். (15)

# மீண்டும் தோண்டப்படும் வான்கடே

வான்கடே, ஜூலை 30

மும்பையில் உள்ள வான்கடே மைதானம் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்காக ரூ.300 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டது. தரம் உயர்த்தப்பட்ட இந்த மைதானத்தில் மீண்டும் பள்ளம் தோண்டப்படுகின்றது. மைதான கழிவு நீரை வெளியேற்றும் குழாய்கள் சேதம் அடைந்துள்ளன. அதனை சரி செய்வதற்காக இந்த பள்ளம் தோண்டப்படுகின்றது.

மைதானத்திற்கு கீழ் உள்ள கழிவு நீர் குழாயை சரிசெய்ய 2010 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மும்பை கிரிக்கெட் சங்கத்தை தொடர்பு கொண்டோம். இதையடுத்து இந்த ஆண்டு ஜனவரி மாதம் மற்றும் ஏப்ரல் மாதம் மீண்டும் கடிதம் எழுதி உள்ளோம் என்று மும்பை கழிவு நீர் துறை தலைமை பொறியியலாளர் எல். எஸ்.வாட்கர் தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதி ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நடந்தது. இந்த ஆட்டத்துக்காக நவீனப்படுத்தப்பட்ட வான்கடே மைதானத்தில் அதன் அடிப்படை பாதிக்கும் வகையில் பள்ளம் தோண்டப்படுகிறது. (15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

*திருமதி செபஸ்தியாம்பிள்ளை அருளம்மா*



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், உடப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செபஸ்தியாம்பிள்ளை அருளம்மா (29.07.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தோமிஸ் லூசாசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆசீர்வாதம் செபஸ்தியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், வியாகுலம், காலஞ்சென்ற ஞானப்பிரகாஷம், யோசேப்பு, அல்பிரட், அமிர்தநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருளம்மா, மார்க்கிரட் (ஹொலன்ட்), புஸ்பம், மேரியசிந்தா, ஜமுனாதேவி ஆகியோரின் மைத்துனியும், யேசுதாசன் (சுவிஸ்), மரியதாஸ், காலஞ்சென்ற நேசதாஸ், லலிதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயும், நவமணி, யசிந்தா, பொலீன் கேமா ஆகியோரின் அன்பு மாமியும், சர்மினி, கிஷாந்தன், விசிதரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு சிலாபம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32/6A, நொயிஸ் றோட்,
சிலாபம். T.P-0775206276 (சி/2131)

தகவல்:
மரியதாஸ்
[மகன்] உடப்பு

## விற்பனைக்கு

500- xxx Super Cup மோட்டார் சைக்கிள் (JAPAN- MAROON) விற்பனைக்குண்டு
ஓடக்கரை, பருத்தித்துறை,
0779048404.

## தவறிவிட்டது

வலிகாமம் மேற்குப் பகுதியில் HG 0281 என்ற மோ. சைக்கிள் பின்பக்க இலக்கத் தகடு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0779687798 என்ற தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

நீர்வேலி வடக்கு, நீர்வேலி எனும் முகவரியைச் சேர்ந்த தெய்வேந்திரன் தனுசா 926733770V, சின்னத்துரை இராசமணி 488594150V ஆகிய இருவருடைய தேசிய அடையாள அட்டை 15.07.2011 அன்று நீர்வேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0778696697 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## தவறிவிட்டது

கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் எனும் முகவரியுடைய சோமசுந்தரம் விவேகானந்தன் என்பவரின் தேசிய அ.அ. (613560793v) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம்(DL491716) என்பன அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு- சோ. வேந்தன்,
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கணக்காளராக கொழும்பில் வேலை செய்யும் மணமகளுக்கு பொருத்தமான 47 வயதுக்குக் கீழ்ப்பட்ட, கல்வித் தகைமையுடைய அரச நிறுவனம் அல்லது வெளிநாடு (கனடா, லண்டன்) புணிபுரியும் இது வரை விவாகமாகாத வரன் தேவை. செவ்வாய் உண்டு.

தொடர்பு- 0112817799

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை முன்னைநாள் கணித பாட ஆசிரியர்
வே.திருவரங்கன் அவர்களின் அன்புத் தாய்

**வேலாயுதபிள்ளை கனகரஞ்சிதம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்
25.11.1926



மறைவு
30.06.2011



### திருமதி கிருஷ்ணர் நல்லம்மா

30.06.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவியின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொண்டு நிறுவனங்கள், பொது அமைப்புகளுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது மன நிறைவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (31.07.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவு செய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இராணி கொற்,
இடைக்காடு, அச்சுவேலி.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (சி/574766)

யாழ் மண்ணில் வாழும் மாணவர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்

ஆஸ்திரேலிய பலராட் (Ballarat) பல்கலைக்கழகத்தின்
விசேட புலமைப் பரிசில்களும் கருத்தரங்கும்

கருத்தரங்கில் பங்கு கொண்டு ரூ. 200,000 வரை
புலமை பரிசில்களை பெற்றுக் கொள்ளுங்கள்

University of Ballarat
Learn to succeed
SRI LANKA STUDY CENTRE

சிறந்த போதனை தரத்திற்காக 5 நட்சத்திரத்தினை கொண்டு
ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்தினால் விருதளிக்கப்பட்டுள்ளது

சிறந்த கணினித்துறை / வணிகத்துறை பட்ட படிப்புகள்

FOUNDATION - க.பொ.த. சா/தர பரீட்சை முடித்தவர்கள்

Bachelor in Information Technology
Bachelor in Business
Bachelor in Commerce

MBS - (HR, Marketing, Finance)
MSc Information Technology
MSc Information Systems

Courses by IBM

யாழ் மண்ணில் இரண்டு சிறந்த மாணாக்கருக்கு பட்ட படிப்பிற்கான
முழுமையான புலமைப் பரிசில்கள்.
கருத்தரங்கிற்கு சமூகமளித்து உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்



பலராட் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிக்கான
அத்தியட்சகர் திரு. பிரயன் டிகோல் அவர்களை
சந்தித்து உங்கள் கேள்விகளுக்கு விடை காணுங்கள்.

நீங்கள் யாழில் இக்கற்கைநெறிக்கு பதிவு செய்து ஆஸ்திரேலிய IBM நிறுவனத்தின்
நிர்வாக இயக்குனராகிய கலாநிதி ஜோன் ஹார்வியிடம் பட்ட படிப்பிற்கான
Offer Letter ஐ நம்முடைய கொழும்பு கிளையில் ஆகஸ்ட் 14ம் திகதி பெற்றுக் கொள்ளுங்கள்.

நம் அனைத்து தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிகளும்
உலக பிரசித்திப்பெற்ற IBM நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டவை

இன்று புலமைப் பரிசிலுக்கான தினம்
இலவச கருத்தரங்கு

கருத்தரங்கு விபரம்

இடம் : Green Grass Hotel, இல. 33, ஆசீர்வாதம் ஒழுங்கை,
வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 2011 ஜூலை மாதம் 30ம் திகதி (சனிக்கிழமை)
நேரம் : காலை 10.00 மணிக்கு

மேலதிக விபரங்களுக்கு : நிசாந்தன் (Jaffna) 071 8561536, 077 6063825

No: 113, "Habitat House", Dutugemunu Street, Kohuwala.
Tel: 0112 817317, 0115 553237
E-mail: info@ubsrilanka.lk web: www.ubsrilanka.lk
Eastern Province: 077 4056741 Kandy: 077 3066411 Jaffna: 071 8561536

ATMC

SKILLS Advertising

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன் செய்தி ஆசிரியர் மீது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு பேர் அரை மணி நேரத்துக்கும் அதிகமாக அந்த இடத்தில் தரித்து நின்றனர் என்று குகநாதனின் அயலவர்கள் தெரிவித்தனர். நேற்று முன்தினம் இரவும் அடையாளம் தெரியாத மூவர் இரவு 11 மணி வரையும் செய்தியாசிரியரின் வீட்டுக்கு முன்பாக தரித்திருந்தனர் என்றும் அவர் கள் கூறினர். காலையில் பார்த்தபோது அந்த இடத்தில் மதுபானப் போத்தல்கள் காணப்பட்டன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸார் வைத்திய சாலைக்கு வந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்ததுடன், விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள இராணுவக் காவல் அரணில் இருந்து 30 மீற்றர் தொலைவிலேயே சம்பவம் இடம் பெற்றுள்ளது.

2006ஆம் ஆண்டு உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள் மிலேச்சத்தனமாக இருவரைச் சுட்டுக் கொன்ற தாக்குதலின் போதும் குகநாதனைப் பெயர் குறிப்பிட்டுக் கொலையாளிகள் தேடினர். எனினும் அவர் மயிரிழையில் தப்பியிருந்தார். அதன் பின்னர் மூன்று வருடங்கள் அவர் வெளியே எங்கும் செல்லாது அலுவலகத்தின் உள்ளேயே இருந்து பணியாற்றி வந்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் நடந்து முடிந்த கையோடு நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. கடந்த இரண்டு மாதங்களில் உதயன் பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவது இது இரண்டாவது தடவை. கடந்த மே மாதம் 28ஆம் திகதி உதயன் பத்திரிகையின் மற்றொரு செய்தியாளரான செ.கவிதரன் தாக்கப்பட்டார். (உ)

## தோல்வியைச் சகிக்காதவர்களின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் காலங்களிலும் எனக்கும் உதயன் ஆசிரிய பீடத்திற்கும் பல அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புக்கள் வந்திருந்தன.

இது தொடர்பாக பொலிஸாரிடம் முறையிட்டிருந்ததோடு எமக்கு பாதுகாப்பினை அதிகரிக்குமாறும் வேண்டியிருந்தோம். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் பொலிஸாரினால் எடுக்கப்படாமலிருக்கும் நிலையிலேயே துரதிர்ஷ்டவசமாக இச்சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

எமது நிறுவனத்தின் ஊழியர்களை தாக்குவதன் மூலமாக ஜனநாயகத்தின் குரலை ஒடுக்கி பேச்சு, கருத்து சுதந்திரத்தினை நசுக்கி எதிர்காலத்தில் வடக் கில் வெற்றிபெறலாம் என சிலர் பகல் கனவு காண்கின்றனர். ஆனால் அது ஒருபோதும் நடக்காது.

இச்சம்பவம் தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மநாபனுக்கும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்கும் நான் முறைப்பாடு செய்திருக்கிறேன். தாக்குதல் நடத்திய காடையர்களைக் கைதுசெய்து, காடைத்தனத்துக்கு முடிவுகட்ட நடவடிக்கை எடுப்பார்கள் என நான் நம்புகின்றேன் - இவ்வாறு அவர் குறிப்பிட்டார். (உ)

## தமிழ் எம்.பிக்களின் எண்ணிக்கையை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் ஜனநாயக விரோதமானதுமான செயல் என்றே ஐ.தே.க. எண்ணுகிறது.

எனவே, யாழ். குடாநாட்டில் மக்கள் சகஜமாகவும், சுதந்திரமாகவும் வாழும் சூழ்நிலையை உருவாக்கி, அதன் பின்னர் குடிசன மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். யாழ். மாவட்டத்தில் நாடாளுமன்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை தொடர்பாக அதன் பின்னரே முடிவெடுக்க வேண்டும். அதுவரை தேர்தல் ஆணையாளரின் இந்தத் தீர்மானத்தை இடைநிறுத்தும்படி நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்டத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவை சாதாரணமானதோ அல்லது இயற்கையானதோ அல்ல. யுத்தத்தால் 30 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் தாம் பரம்பரையாக வாழ்ந்த வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

இதற்கு மேலாக வடக்கில் நிர்வாகம் முறையாக இடம்பெறவில்லை. இதனால் முறையாகப் பதிவு நடவடிக்கைகள் இடம் பெறவில்லை. பெருந்தொகையான படையினரின் கீழ் மக்கள் வாழ்வது, இடம்பெயர்வு மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதால் யாழ். குடாநாட்டில் மீள்குடியமர்வது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்ற விடயங்களை அரசியல் தீர்வால் மட்டுமே தீர்க்க முடியும். இதைவிடுத்து நிர்வாக ரீதியான முடிவுகளால் தீர்க்க முடியாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## யாழ்.எம்.பிக்கள் 6 ஆக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆ.சு.கருணா நிதி தெரிவித்தார். யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 9 இலிருந்து 6 ஆகக் குறைந்துள்ளது. இது தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றைய உதயனில் வெளியான செய்தியில் 'யாழ். மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்பதில் இருந்து ஐந்தாகக் குறைக்கப்படுகிறது. வாக்காளர் எண்ணிக்கை 3 லட்சத்தால் குறைந்ததை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ. பி.சுமணசிறி கூறியிருந்தார். ஆனால் அந்த எண்ணிக்கை ஐந்து அல்ல ஆறாகும்.

யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2009 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் 8 லட்சத்து 16 ஆயிரத்து 5 பேர் வரையில் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இதன் அடிப்படையில் யாழ்.மாவட்டத்துக்கு 9 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. தற்போது 2010 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியலில் 3 லட்சத்து 31 ஆயிரத்து 214 பேர் நீக்கப்பட்டு 4 லட்சத்து 84 ஆயிரத்து 791 பேரே வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளனர். இந்த வாக்காளர் எண்ணிக்கையின் படி 9 ஆசனங்களில் இருந்து 6 ஆசனங் களாக குறைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள மக்கள் பலர் புலம் பெயர்ந்து சென்றுள்ளனர். இன்றும் பலர் யுத்தம் காரணமாக வெளிமாவட் டங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். அத்துடன் சிலர் இந்த மாவட்டத்திலிருந்தும் வாக்காளர்களாக பதிவு செய்யத் தவறியுள்ளனர். இவ் வாறான காரணங்களாலேயே இந்தளவு வாக்காளர் எண்ணிக்கை வீழ்ச்சி ஏற் பட்டுள்ளது. அதனாலேயே நாடாளுமன்ற ஆசனங்கள் குறைக்கப்பட் டுள்ளன.

இதேவேளை 2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் யாழ். மாவட்டத்தில் அதிகரிப்பு ஏற்பட்டால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படும். அத்துடன் 2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பை பயன்படுத்தி 2012 ஆம் ஆண்டு மே மாதத்துக்கு முன்னர் நாடாளுமன்ற தேர்தல் இடம்பெற்றால் மட்டுமே யாழ். தேர்தல் மாவட்டத்திலிருந்து 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

ஒவ்வொரு மாவட்டத்துக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை வருடா வருடம் வாக்காளர் இடாப்பு மாற்றத்துக்கு ஏற்பவே தீர்மானிக்கப்படும் - என்றார். (ஒ-15)

## எம்.பிக்கள் குறைப்பு முறையற்ற செயல்

கொழும்பு, ஜூலை 30

யுத்தத்தால் இடம்பெயர்ந்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் மக்கள் முழுமையாக மீள்குடியமர்த்தப்படாத நிலையில் யாழ். மாவட்ட எம்.பிக்களின் எண்ணிக்கையைக் குறைப்பது முறையற்ற செயலாகும்.

-இவ்வாறு புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன குற்றம்சாட்டுகின்றார்.

2010ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின்படி யாழ். மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கையில் 3 லட்சம் பேர் குறைவடைந்துள்ளனர். இதன் காரணமாக யாழ். மாவட்ட எம்.பிக்களின் எண்ணிக்கை ஒன்பதிலிருந்து ஆறாகக் குறைக்கப்படும் எனத் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே விக்கிரமபாகு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் நிறைவடைந்து சிறிய காலப்பகுதியே 2010ஆகும். அந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளை வைத்துக்கொண்டு எம்.பிக்களின் எண்ணிக்கையில் மாற்றம் கொண்டுவருவதானது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். (த-சி)

## தெருவிளக்குப் பூட்டவா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் பஸிலின் கூற்றுக்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்த அரியநேத்திரன், ''வடபகுதிக்குச் சென்று தேர்தல் பிரச்சாரம் செய்த ஜனாதிபதியும் 35 அமைச்சர்களும் தெருவிளக்கு போடவும் குழாய் நீர் வழங்கவுமே பாடுபட்டனர் என்பது எமக்கு இப்போதுதான் தெரியவந்துள்ளது என்றார்.

''ஆனால் அதற்குக்கூட அவர்கள் தகுதி இல்லாதவர்கள் என தமிழ் மக்கள் நினைத்ததால்தான் அவர்களுக்கு வாக்களிக்காது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

உண்மையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச அவர்கள் கூறுவதுபோன்று உற்று நோக்கினால் தமிழ் மக்கள் தெருக்களுக்கு விளக்கு போடுவதை எதிர்பார்க்கவில்லை அவர்களுக்கான உரிமையை வெல்ல வேண்டும் என்பதையே எதிர்பார்க்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

''தெருவிளக்கு தேவை என்றால் அரசுக்கே அவர்கள் வாக்களித்திருப்பார்கள்'' என்றார் அரியநேத்திரன். (உ)

இந்தியன் முருங்கை நாற்று விநியோகம்

ஆடி அமாவாசையை முன்னிட்டு இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட முருங்கை நாற்றில் இருந்து பெறப்பட்ட முருங்கை நாற்று மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும்


அன்னாசி
1கிலோ கொய்யா,
ஒட்டுப்பலா
ஒட்டுத்தோடை
ஒட்டுத் தேசி
ஒட்டுமாங்கண்டு
யம்பு
ஒட்டுபெருநெல்லி
ஒட்டு தாமரத்தங்காய்
ஈரப்பலா
தென்னை
செவ்விளனி
இந்தியன் புதினா
தேசி
மாதுளை
குறோட்டன்
சைப்பிறஸ்

புதிய இன செவ்வரத்தைகள்
முல்லை
பிச்சிப்பூ
றோஸ்
மினிஎஸ்சோறா
ஐந்தூரியம்
எலமண்டா
மினிநந்தியாவட்டை
புதிய மல்லிகை இனங்கள்
கறுவா
கராம்பு
கோப்பி
கொக்கோ
சுந்தரவேம்பு
காட்டுத்தேக்கு
மலைவேம்பு
Red Lady பப்பா

என்பவற்றுடன் மூலிகை விதைகள், மரக்கறி விதைகள், மரக்கறி நாற்றுகள், தக்காளி,கத்தரி, கறிமிளகாய், சலாட், மிளகாய், பிளாஸ்ரிக் சாடிகள், சீமெந்துச் சாடிகள் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். வீடுகள் பாடசாலை விடுதிகளுக்கான பூந்தோட்டம் அமைத்துக் கொடுக்கப்படும். பூஞ்சாடிகளும் வாடகைக்கு விடப்படும்.

பவிசாரு பூங்கனிச்சோலை
311/1, பலாலி வீதி, கோண்டாவில்.
0212228199, 0718475629

விவசாயத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட ஓர் நிறுவனமாகும்.
பதிவு இல.SA/JFA/02677




### துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் நிதி உதவியாளராகக் கடமையாற்றும் **செல்வி கி.பத்மினி லூயிஸ்** அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் திருமதி அடைக்கலநாயகி பூமணி லூயிஸ்**

அவர்களின் பிரிவால் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

யாழ். பிரதேச செயலக நலன்புரி சங்கம், யாழ்ப்பாணம்.



### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் கு.பஞ்சலிங்கம் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி இலட்சுமி குமாரவேலு**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி, அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், மானிப்பாய். (பி/51?773) (34)

Lava Hospitals
# 75, Temple Road, Jaffna
T.P 0212224333

உடல் பருமனைக் குறைப்பதற்கான ஆலோசனைகளும் சிகிச்சைகளும்

★ சகல வசதிகளுடன் தங்குமிடம் ★

பருத்தித்துறை நகர் பகுதியில்

கப்பல் விடுதி

KAPPAL LODGE

வி.மு. வீதி, (சின்னப்பிள்ளையார் கோவில் முன்பாக) பருத்தித்துறை.

V.M. Road, (Front of Sinna Pillayar Kovil) Pointpedro.

Telephone : 0776165369, 021 226 3012

(சி/5747) (34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

க.பொ.த (உயர்தரப் பரீட்சை)
வழிகாட்டல் கருத்தரங்கு
அரசறிவியல் (புதிய,பழைய பாடத்திட்டம்)
எஸ்.கே.குலன்

காலம்: 01.08.2011 திங்கள் (9 -1 மணி)
02.08.2011 செவ்வாய் (12 - 03 மணி)

★ பரீட்சைக்குரிய கையேடுகள் வழங்கப்படும்
★ வெளிமாணவர்களும் பங்குபற்றலாம் (கட்டணம் 200/-)
★ உங்கள் அனுமதியினை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.



இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி, வீட்டுப்பாடம் எதுவுமின்றி மிக இலகுவாக தமிழைப்போன்று சரளமாக ஆங்கிலம் பேச

**3 மாத சனி ஞாயிறு English பயிற்சிநெறி**

புதிய பிரிவு ஆரம்பம் : 30.07.2011 சனிக்கிழமை

பிரிவுகள் : காலை 8-9, 9-10, 10-11, 11-12, மாலை 2-3, 3-4, 4-5, 5-6

மூன்று மாதத்துக்குமான மொத்த கட்டணம் : ரூபா 3000/- மட்டும்

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைகழக, மற்றும் உயர்கல்வி மாணவர், பட்டதாரிகள், வெளிநாடு செல்வோர், இளைஞர் யுவதிகள், கலந்துகொள்ளலாம்

மிக சில இடங்களே - அனுமதிக்கு முந்துங்கள்

MyWay 182 1/5, STANLEY ROAD, JAFFNA
077 33 63 456 021 222 9505


## என் அன்புக்கினிய நல்லூர் பிரதேச சபை வாக்காளப் பெருமக்களுக்கு



ஊழலற்ற நிலையான அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்காக தெரிவு செய்யப்பட்ட நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர்களில் ஒருவனாக என்னையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு) சார்பாக அதிகபடியான விருப்புவாக்குகளால் தெரிவு செய்த பற்றுறுதிமிக்க வாக்காளப் பெருமக்களுக்கு எனது அன்பு கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றென்றும் உங்கள் நம்பிக்கைக்கும் அன்புக்கும் உரிய

**தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி (J.P.)**

*கோண்டாவில் மேற்கு கோண்டாவில்.*

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



அமரர்

**சின்னையா சிவானந்தம்**

(முன்னாள் உபதபாலதிபர்)
திதி: 30.07.2011

தோற்றம் 20.06.1931 மறைவு 30.06.2011

அன்புடையீர்

கடந்த 30.06.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் 30.07.2011 சனிக்கிழமை காலை 4 மணியளவில் இந்திரன் அம்மன் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். நாளை (31.07.2011) ஞாயிற்றுக் கிழமை அன்னாரது இல்லத்தில் மதியபோசன நிகழ்வு 11.30 மணியளவில் நடை பெறும் இவ்விருநாள் நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செம்பாடு, துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(சி/574789)

குடும்பத்தினர்.

# வடமாகாண அதிகாரிகள் மீதான நடவடிக்கை தொழிற்சங்கப் போராட்டத்துக்கு வழிவகுக்கும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

வடக்கில் அமைதி நிலவும் இந்தக்காலத்தில் வடமாகாண உயர் அதிகாரிகள் மீதான நடவடிக்கைகள் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்துகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கே வழிவகுக்கும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

இது தொடர்பாக அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு:

தவறுவிடும் அதிகாரிகளை சட்டத்தின் முன்நிறுத்தி அவர்களின் குற்றங்களை சமூகத்துக்கு தெரியப்படுத்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் அது பொருத்தமானதாகும், ஏற்புடையதாகவும் இருக்கும். மாறாக எவ்வித முன் அறிவித்தலுமின்றி இடம்பெறுகின்ற இடைநிறுத்தங்கள், இடமாற்றங்கள் மக்கள் மத்தியில் தவறான எண்ணங்களைத் தோற்றுவிக்கும். இதைவிடக் கல்விப்புலம் சார்ந்தவர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்வது பொருத்தமானதாக அமையும்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக நடைபெற்று முடிந்த தேர்தலின் பின்னர் மேற்கொள்ளப்படும் இது போன்ற அறிவிப்புகளும், அதிரடி நடவடிக்கைகளும் திருப்தியாகவும், கடமையுணர்வோடும் தொழிற்படுகின்ற இளம் அதிகாரிகள் மட்டத்திலும் அச்சத்தைத் தோற்றுவித்துள்ள அதேவேளை அரசியல் அழுத்தங்களால் இவை ஏற்படுகின்றதா? என்ற வினாக்களும் ஏற்படுகின்றன. இதன் மூலம் அரசின் மீது மக்களுக்கும், கல்விப் புலம் சார்ந்தவர்களுக்கும் தொடர்ந்தும் அவநம்பிக்கையே ஏற்படுகின்றது.

வயது முதிர்ந்தவர்களை விலக்கி இளையோரை பணிகளில் அமர்த்தி அவர்களூடாக வினைத்திறனுள்ள பயன்பாடுகளை பெற்றுக் கொள்வதென்ற நிலைப்பாடு அபிவிருத்திக்கு மிகவும் தேவையானது, அதனை நாம் ஏற்கின்றோம். இருந்தாலும், நியமிக்கப்படுபவர்கள் தொடர்பில்மேலுள்ள அதிகாரிகளுக்கு அவர்கள் விசுவாசமாக நடந்து கொள்வது என்பதற்கு அப்பால் அப்பிரதேச சமூகத்தின் அங்கீகாரம் அவர்களுக்கு கிடைக்க வேண்டும்.

வடபுலம் சார்ந்த விடயங்களில் அரசின் மக்களுக்கும், கல்வியாளர்களுக்கும் அதிருப்தி ஏற்படாத வகையில் அரசியலோடு அல்லது அரசோடு தொடர்புடையவர்கள் நடந்து கொள்வது பொருத்தமானதாக இருக்கும் எனவும் அபிப்பிராயப்படுகின்றோம். இது போன்ற செயற்பாடுகள் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு எம்மைக் கட்டாயப்படுத்துவதாகவும் கருதுகிறோம் - என்றுள்ளது.

(த)


### விற்பனைக்கு

10 x 8 நீளமுடைய Cool Room விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0774940391


## மரண அறிவித்தல்

### பெரியதம்பி தங்கராசா

கலியானன், புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், செட்டித்தெரு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி தங்கராசா நேற்று (29.07.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - நாகம்மா தம்பதியரின் மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், கமலாதேவி (இந்தியா), மங்கயர்க்கரசி (ஜேர்மனி), பாக்கியநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சிவனேஸ்வரன் (ஜேர்மனி), பார்ரதி (கனடா) ஆகியோரின் மாமனும், ஞானராசா (அமெரிக்கா), ஜெயராணி (U.K), ஜெயலஸ்சா (ஜேர்மனி), விஜயலக்சுமி (U.K), வித்தியா (இந்தியா), பிரசாந் (ஜேர்மனி), சுபசாந் (ஜேர்மனி), சுகன்யா (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2011) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டித்தெரு,
பருத்தித்துறை.

தகவல்:
ஈஸ்வரி (மனைவி)


## யாழ் மண்ணில் முதன்முதலாக

UK பல்கலைக்கழக பட்டப்படிப்பின் இறுதியாண்டில் இணைய அரிய சந்தர்ப்பம்.

bucks new university-UK **Degree @** ESOFT Jaffna



**B.Sc (Hons) in Computing**

Duration:-1 Year
Part Time:- Week ends
Entry Requirements:-Edexcel HND,BCS.Dip, NIBM Higher Dip,SLIIT Adv.Dip, NCC-IAD,HNDE,HNDIT(ATI) மேற்குறிப்பிட்ட தகமையுடையோர் பட்டப்படிப்பின் இறுதியாண்டில் இணைந்து பட்டப்படிப்பை தொடரமுடியும்.

Course Fee Only Rs 135,000/=
Installment Rs 13,500x10



**B.A.(Hons) in Business and Finance**

Duration:-1 Year
Part Time:- Week ends
Entry Requirements:-CIMA,AAT,Chartered,CIM,ACCA,ABE,Edexcel HND(Business),HNDA(ATI), HNDM(ATI),HNDC(ATI) மேற்குறிப்பிட்ட தகமையுடையோர் பட்டப்படிப்பின் இறுதியாண்டில் இணைந்து பட்டப்படிப்பை தொடரமுடியும்.

Course Fee Only Rs 150,000/=
Installment Rs 15,000x10

வரையறுக்கப்பட்ட ஆசனங்களே ஒதுக்கப்பட்டுள்ளதால் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

Closing Date:-10-08-2011

ESOFT COMPUTER STUDIES.
Regional Head Office-North
No.166/3, Navalar Road Jaffna.
Tel:0212224142 Hotline:0773099308



### வேலையாள்கள் தேவை

பலசரக்குக் கடை ஒன்றுக்கு அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
தொடர்பு:
0771999618, 0213205260



### வேலை ஆள்கள் தேவை

நெல்லியடி, பிரதானவீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் ஹேரம்பா பார்மஸி குறோசறிஸ் எனும் மருந்துக்கடைக்கு முன் அனுவபமுள்ள ஆண், பெண் இரு பாலரும் தேவை. (ஏற்கனவே மருந்துக் கடையில் இருந்து வியாபாரம் செய்தவர் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு:-
0770238140, 0214911723



### கணினி விற்பனைக்கு

P IV 1.7 GHZ - 15, 750
P IV 2.0 GHZ - 16, 750
P IV 2.4 GHZ - 18, 750
P IV 3.0 GHZ - 21, 750
Dual Core 3.2 GHZ - 35, 000
G41 Dual Core - 39, 000
Core i3 CPU - 55, 000
Laptop Note book - 44, 000
Laptop Core 2 Duo - 61, 000
Laptop Core i3 - 72, 000

மூன்று வருட உத்தரவாதம் மற்றும் கணினி சார் உதிரிப்பாகங்களும் உண்டு.

SKY Computer System
162, Main Street, Jaffna.
737, K.K.S Road, Jaffna.
யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில்
T.P:- 222 - 1417, 222 - 4865.
Hot:- 0750698608.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org